॥ श्रीः ॥

# ॥ श्री सुदर्शनशतकम् ॥

ஸ்ரீ கூரநாராயண ஜீயர் அருளிய

# ஸ்ரீ ஸுதர்சநசதகம்

எளிய தெளிவுரையுடன் கூடியது



ஸ்ரீ சக்கரத்தாழ்வார்

திருக்கோவலூர்
வித்வான் சிரோமணி
பிள்ளை லோகம் ஸ்தலசயணத்துறைவார்

ஸ்ரீ:




ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ கூரநாராயண ஜீயர் அருளிய

# ஸுதர்சன சதகம்

(சுருக்கமான தெளிவுரையுடன்)



பதிப்பாசிரியர் :

வித்வான் சிரோமணி யதீந்த்ரப்ரவண ப்ரபாவம்
பிள்ளைலோகம்
ஸ்ரீ உ. வே. ஸ்தலசயனத்துறைவார் ஸ்வாமி

பரிசோதகர் :

ஸ்ரீ உ. வே. தி. அ. கிருஷ்ணமாசாரியார் ஸ்வாமி
திருப்பதி

1996

Rs 50 P 00

முதற்பதிப்பு : 1996

பிரதிகள் : 1000

உரிமை : ஆசிரியருக்கே

This book is Published with financial assistance of Thirumala Tirupathi Devasthanams under their scheme "Aid to publish Religious Book".

புத்தகம் கிடைக்குமிடம் :

ஸ்ரீ பிள்ளைலோகம் ஸ்தலசயனத்துறைவார் ஸ்வாமி,
10, பேயாழ்வார் கோயில் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை-600 005.

அச்சிட்டோர் :

இளங்கோ அச்சுக்கூடம்,
166, இராயப்பேட்டை நெடுஞ்சாலை,
மயிலாப்பூர், சென்னை-4.
தொ. பே. எண் : 4991821

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமத் வரவரமுநயே நம:

# திருமலை திருப்பதி ஜீயர் ஸ்வாமிகள் அருளிய மங்களாசாஸனம்

ஸ்ரீ. உ. வே. பிள்ளைலோகம் ஸ்தலசயனத்துறைவார் ஸ்வாமி 'ஸுதர்சன சதகம்' என்கிற இந்நூலை அச்சிட்டு வெளியிடுகிறார். இந்த ஸ்வாமி சுருக்கமாகவும், தெளிவாகவும் இந்நூலில் உரை எழுதி இருக்கிறார். ஸுதர்சநாழ்வானைப்பற்றிய பல விஷயங்கள் அடங்கிய இந்நூல் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கும், ஸுதர்சன பக்தர்களுக்கும் மிகவும் பயன்படக் கூடியது. இதில் திருமலையிலுள்ள சக்ரதீர்த்த மாஹாத்மியமும் சேர்த்துள்ளார். மஹான்களின் அன்பும் ஆதரவும் பெற்றுச் சீரிய பண்புடையவராகவும், சொல்லாற்றலும் எழுத்தாற்றலும் கொண்ட உபய வேதாந்த வித்வானாகவும் விளங்கும் இந்த ஸ்வாமி எழுதிய இந்நூல் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கும் மற்றும் தமிழார்வம் கொண்டவர்களுக்கும், பேரின்பம் அளிக்கவல்லதாகும்.

மிகவும் பிரசித்தி பெற்று விளங்கிய ஸ்ரீ பிள்ளைலோகார்ய(ஜீய)ரின் திருவம்சஸ்தவரான இவருக்கும் இவரது குடும்பத்தினருக்கும் அலர்மேல்மங்கை மணாளனாகிய திருவேங்கடமுடையான் எல்லா வகையான நன்மைகளையும் அருள்வானாக.

# ஸ்ரீ ஸுதர்சன சதகம்

ஸ்ரீ கூரநாராயண ஜீயர் அருளியது ஸ்ரீ ஸுதர்சன சதகம். ஸ்ரீ ஸுதர்சனுழ்வானின் பெருமைகளை இந்த ஸ்தோத்ர கிரந்தத்தில் பல படிகளாக ஜீயர் வருணித்துக் கூறுகிருர். நூறு சுலோகங்களைக் கொண்ட மந்த்ர ரூபமாகிற இந்த ஸ்தோத்ரம் பிறருடைய நன்மைக்காகவே ஏற்பட்டது என்பதை ஒவ்வொரு சுலோகத்திலும் அறிந்துகொள்ளலாம். சுலோகங்கள் மிகவும் கம்பீரமானவை; அர்த்த புஷ்டியோடு கூடினவை; மிகப் பெரியவை. ஸம்ஸ்கிருத ஞானம் பெற்றவர்களாக இருந்தாலும், பிறரிடம் இதைச் சொல்லிக்கொண்டு அடிக்கடி அநுஸந்தானம் செய்து கொண்டிருந்தால்தான் எழுத்துப்பிழையின்றி உச்சரிக்க முடியும். இந்த சுலோகங்கள் ஸ்ரக்தரா வ்ருத்தத்தில் அமைந்தவை. இவற்றைச் சொல்லும்போதே பக்தியும் ஒருவகையான மெய்பாடும் ஏற்படும் என்பது ஸுதர்சன பக்தர்களுக்குத் தெரியும். இந்நாளில் இந்த ஸுதர்சன சதகம் எல்லோருக்குமே தெரிந்திருக்க வேண்டும். தாங்கள் விரும்பும் நற்பயன்களை அடைய விரும்புவோர் தினந்தோறும் இதனைப் பாராயணம் செய்வதைக் காண்கிறோம்.

எம்பெருமானார் எழுந்தருளியிருந்த காலம் ஸ்ரீ வைஷ்ணவத்தின் நல்லடிக்காலம்! பொற்காலம். ஆழ்வான், ஆண்டான், எம்பார் முதலான மஹான்கள் அவரை விட்டுப் பிரியாமல் எழுந்தருளியிருந்தார்கள். மற்றும் பல ஞானவான்களும் மஹரிஷியர்களும் இருந்தார்கள். அவர்களுள் ஒருவர் கூரநாராயண ஜீயர். இவர் கூரத்தாழ்வானிடம் பக்தியும், அன்பும், கௌரவமும் கொண்டிருந்தார். இவர் ஸுதர்சன உபாஸகர்; மந்த்ர ஸித்தி பெற்றவர். ஒரு சமயம் ஆழ்வான் ஸுதர்சநோபாஸகரான கூரநாராயண ஜீயரைப்

பார்த்து, 'ப்ரபன்னர்களுக்கு திருவஷ்டாக்ஷர மஹா மந்திரமொழிய வேறு புகழில்லை காணும்' என்று கூறினார். 'ஸ்வாமின் இவையும் தக்க நேரத்தில் பயன் படும்' என்று ஜீயர் பதில் கூறினார்.

ஸ்ரீ ராமாநுஜருடைய பஞ்சாசார்யர்களுள் (ஐந்து ஆசாரியர்களுள்) ஒருவரான திருவரங்கப் பெருமாள் அரையர் திருமேனி பாங்கு இல்லாமல் நம்பெருமா ளுக்கு (திருவரங்கனுக்கு) கைங்கர்யம் செய்ய இயலா தவராக இருந்தார். அந்நாளில் ஆழ்வான் கூரநாரா யண ஜீயரை அழைத்து, 'இவையும் ஸமயத்தில் பயன்படும், என்று ஒருநாள் சொல்லி இருந்தீரே; அந்த ஸமயம் இப்போது வந்திருக்கிறது. அரையர் ஸ்வாமி வியாதியிலிருந்து விடுபட்டுப் பழையபடி நம் அரங்கனுக்கு கைங்கர்யம் செய்வதற்குக் கிருபை செய்யுமாறு ஸ்ரீ ஸுதர்சனாழ்வானைப் பிரார்த்திக்க வேணும் என்று நியமித்தார். கூரநாராயண ஜீயர் ஸ்ரீ ஸுதர்சன சதகத்தை (இந்த ஸ்தோத்திரத்தை) அருளிச் சக்கரத்தாழ்வார் ஸன்னிதியில் பெரியோர் களைக் கொண்டு பாராயணம் செய்விக்க, அரையர் ஸ்வாமி பூரண ஸ்வஸ்தமடைந்து பழையபடி எம்பெரு மானுக்குக் கைங்கர்யம் செய்தார் என்று கூறப்படு கிறது. இவர் ஸ்ரீரங்கநாராயண ஜீயராகவும் இருந் தார் என்று கோயில் ஒழுகு என்ற நூல் கூறுகிறது. எம்பெருமானாரின் நியமனபடியாக இந்த ஸ்தோத்ரம் அருளிச் செய்யப்பட்டது என்றும் கூறுவர்.

ஸுதர்சன சதக சுலோகங்களின் ஆழ்ந்த கருத் தினை பலரால் அறிந்து கொள்ள முடியாததால் ஸுதர்சன சதகத்தின் பெருமை அவ்வளவு வேகமாக ஆஸ்திகர்களிடையே பரவவில்லை. பலவகையான துன்பங்களையும் ஸுதர்சனாழ்வான் தீர்க்கிறார் என்ப தைப் பல இடங்களில் மக்கள் இப்போது அறிந்து வருகிறார்கள். பல ஊர்களில் ஸுதர்சனாழ்வானுக்கு

(சக்கரத்தாழ்வாருக்கு) தனி ஸன்னிதி அமைக்கப்படு கிறது. பல இடங்களில் ஸுதர்சன ஹோமம்! ஸுதர்சன சதகம் அஷ்டைச்வர்யங்களையும் கொண்டுள்ள ஒரு கருவூலம். இந்நூலில் உள்ள ஒவ்வொரு சுலோகத்தின் அர்த்த விசேஷங்களையும் விவரமாக அறிந்து கொள்ள முடியாது. ஆயினும் சுருக்கமாக அறிந்து கொண்டாலும் ஸுதர்சன சதகத்தில் எல்லோருக்கும் ஈடுபாடு அதிகமாகும்; அனைவரும் நிறைந்த பயன்களைப் பெறுவர் என்று நினைக்கும் அன்பர்களின் எண்ணத்தை நிறைவேற்றும் வகையில் 'ஸ்ரீ ஸுதர்சன சதகம்' என்ற இந்த ஸ்தோத்திர கிரந்தம் மிகவும் எளிய பொழிப்புரையுடன் வெளிவருகிறது. திருப்பதி மலையிலுள்ள சக்ர தீர்த்தத்தின் பெருமை, ஸுதர்சனாழ்வானின் சரித்திரங்கள். ஸுதர்சன ஷட்கம், ஸுதர்சன மந்த்ரம் ஜபம் செய்யும் முறை, ஸுதர்சன ஹோம மஹாஸங்கல்பம் ஆகியவற்றோடு ஸுதர்சனாழ்வானின் திருவுருவப் படங்களும் இதில் அமைந்துள்ளன.

ஸ்ரீமான் உ.வே. திருக்கோவலூர் எம்பெருமானார் ஜீயர் ஸ்வாமி, தி. அ. கிருஷ்ணமாசாரியார் ஸ்வாமி, Dr. M. A. வேங்கடகிருஷ்ணன் ஸ்வாமி, வரதராஜ பட்டர், ஸ்ரீமான் பத்ரீ நாராயணன் ஆகியோருக்கும், இந்நூலைச் சிறந்த முறையில் அச்சிட்டு உதவிய இளங்கோ அச்சுக்கூடம் உரிமையாளர் ஸ்ரீ M. S. மணியவன் அவர்களுக்கும், படங்கள் கொடுத்து உதவிய ஸ்ரீ ராகவன் அவர்களுக்கும் என்னுடைய அன்புசால் நன்றி. இந்நூல் ஸ்ரீ பார்த்தஸாரதி எம்பெருமானையும் பகவத் பாகவதர்களையும் உகப்பித்துக் கொண்டு நல்லோர்களின் உலகில் நலமுடன் திகழுமாக.

பிள்ளைலோகம்

ஸ்தலசயனத்துறைவார்.

# ஆழியெழ

(நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழி 7—4)

கீழே தரப்பட்டுள்ள பத்துப் பாசுரங்களும் வெற்றி தரும். நம்பிக்கையோடு பல்லாயிரம் முறை சொன்னவர்கள் பெரும் பயன் அடைந்துள்ளார்கள். வேலை இழந்திருந்தவர் மீண்டும் அவ்வேலை பெற்றார். வேலையிலிருந்து நீக்கினவரே வேலையை கொடுத்துள்ளார். நீதிமன்ற வழக்கில் சிலர் வெற்றி பெற்றுள்ளார். இப்பாசுரங்களைக் கொண்டு அனைவரும் நற்பயன் பெறுவார்களாக.

*ஆழியெழச் சங்கும்வில்லுமெழ, திசை—
வாழியெழத் தண்டும்வாளுமெழ, அண்டம்—
மோழையெழ முடிபாதமெழ, அப்பன்—
ஊழியெழ உலகங்கொண்டவாறே. 1

ஆறுமலைக்கு எதிர்ந்தோடுமொலி, அர—
வூறுசுலாய் மலைதேய்க்குமொலி, கடல்—
மாறுசுழன்று அழைக்கின்றவொலி, அப்பன்—
சாறுபட அமுதங்கொண்டநான்றே. 2

நான்றில ஏழ்மண்ணும்தானத்தவே, பின்னும்—
நான்றில ஏழ்மலைதானத்தவே, பின்னும்—
நான்றில ஏழ்கடல்தானத்தவே, அப்பன—
ஊன்றியிடந்து எயிற்றில்கொண்ட நாளே. 3

நாளுமெழ நிலநீருமெழ, விண்ணும்—
கோளுமெழ எரிகாலுமெழ, மலை—
தாளுமெழச் சுடர்தானுமெழ, அப்பன்—
ஊளியெழ உலகமுண்டவூணே. 4

ஊனுடைமல்லர் ததைந்தவொலி, மன்னர்—
ஆனுடைச்சேனை நடுங்குமொலி, விண்ணுங்—

ஏணுடைத்தேவர் வெளிப்பட்டவொளி, அப்பன்—
காணுடைப்பாரதம் கையறை போழ்தே. 5

போழ்துமெலிந்த புன்செக்கரில், வான்திசை—
சூழுமெழுந்து உதிரப்புனலா, மலை—
கீழ்துபிளந்த சிங்கமொத்ததால்,
ஆழ்துயர்செயது அசுரரைக் கொல்லுமாறே. 6

மாறுநிரைத்து இரைக்கும்சரங்கள் , இன—
நூறுபிணம் மலைபோல்புரள , கடல்—
ஆறுமடுத்து உதிரப்புனலா, அப்பன்—
நீறுபட இலங்கைசெற்றநேரே. 7

நேர்சரிந்தான் கொடிக்கோழிகொண்டான், பின்-
நேர்சரிந்தான் எரியுமனலோன், பின்னும்— [னும்
நேர்சரிந்தான் முக்கண்மூர்த்திகண்டீர், அப்பன்—
நேர்சரிவாணன் திண்டோள் கொண்டவன்றே. 8

அன்றுமண்நீரெரிகால் விண்மலைமுதல்
அன்று மழைசுடரிரண்டுபிறவும், பின்னும்—
அன்றுமழையுயிர் தேவும்மற்றும், அப்பன்—
அன்றுமுதல் உலகம்செய்ததுமே. 9

மேய்நிரைகீழ்புக மாபுரள, சுனை
வாய்நிறைநீர் பிளிறிச்சொரிய, இன—
ஆநிரைபாடி அங்கேயொடுங்க, அப்பன்—
தீமழைகாத்துக் குன்றமெடுத்தானே. 10

*குன்றமெடுத்தபிரான் அடியாரொடும்
ஒன்றிநின்ற சடகோபனுரைசெயல்
நன்றிபுனைந்த ஓராயிரத்துள்ளிவை
வென்றிதரும்பத்தும் மேவிக்கற் பார்க்கே. 11

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்.





[illegible]



வித்வான் சிரோமணி
பிள்ளை லோகம் ஸ்தலசயனத்துறைவார்

॥ श्रीः ॥

# ॥ श्री सुदर्शन शतकम् ॥

## ஸ்ரீ கூரநாராயண ஜீயர் அருளிய

# ஸ்ரீ ஸுதர்சநசதகம்

**रङ्गेशविज्ञप्तिकरामयस्य चकार चक्रेशनुतिं निवृत्तये ।**
**समाश्रयेऽहं वरपूरणीं यः तं कूरनारायणनामकं मुनिम् ॥**

*ரங்கேச விஜ்ஞப்தி கராமயஸ்ய*
*சகார சக்ரேசநுதிம் நிவ்ருத்தயே ।*
*ஸமாச்ரயேஹம் வரபூரணீம் ய:*
*தம் கூரநாராயண நாமகம் முநிம் ॥*

திருவரங்கப் பெருமாளரையரின் நோய் தீர்வதற்காக எல்லா விருப்பங்களையும் நிறைவேற்றவல்ல திருவாழியாழ்வான் விஷயமான ஸ்தோத்ரமாகிய ஸ்ரீ ஸுதர்சன சதகத்தை அருளிச்செய்த ஸ்ரீ கூரநாராயண ஜீயர் ஸ்வாமியை நான் வணங்குகின்றேன்.

*இவ்வுலகிலுள்ள ஸுதர்சன பக்தர்கள் அனைவர்க்கும் அவரவர்கள் விரும்பும் எல்லா அபீஷ்டங்களையும் எல்லாக் காலங்களிலும் நிறைவேற்றி வைப்பவர் ஸ்ரீ ஸுதர்சனாழ்வான் ஒருவரே.

*இந்த ஸ்தோத்திரம் க்ருபாமாத்ர ப்ரஸன்னாசாரியரான ஸ்ரீராமானுஜரின் திவ்யாக்ஞையினால் உலகோருக்குக் கிடைத்த மாநிதியாகும்.

सौदर्शन्युज्जिहाना दिशि विदिशि तिरस्कृत्य सावित्रमर्चिः
बाह्याबाह्यान्धकारक्षतजगदगदंकार भूम्ना स्वधाम्ना ।
दोः खर्जूदूरगर्जद्विबुध रिपुवधू कण्ठवैकल्यकल्या
ज्वाला जाज्वल्यमाना वितरतु भवतां वीप्सया-
ऽभीप्सितानि ॥

ஸௌதர்சந்யுஜ்ஜிஹாநா திசி விதிசி
திரஸ்க்ருத்ய ஸாவித்ரமர்ச்சி:
பாஹ்யா பாஹ்யாந்தகார க்ஷத-
ஜகதகதங்காரபூம்நா ஸ்வதாம்நா ।
தோ: கர்ஜூதூரகர்ஜத்விபுதரிபு-
வதூ கண்டவைகல்ய கல்யா
ஜ்வாலாஜாஜ்வல்யமாநா விதரது
பவதாம் வீப்ஸயாபீப்ஸிதாநி ॥ 1

அகவிருள், புறவிருள் எனப்படும் இருவகை இருளாலும் தடுமாறுகின்ற உலகத்தவர்க்கு அந்த இருளைத் தொலைத்து வாழவைக்கவல்ல தன்னொளியினால், சூரியனின் ஒளியைக் கீழ்படுத்தி எல்லா விடங்களிலும் வியாபித்து விளங்குவதும், தம் புஜ பலத்தினால் கொக்கரிக்கின்ற அசுரர்களின் பெண்களைக் கைம்பெண்களாக ஆக்குவதில் வல்லமை பெற்றதும், எப்போதும் ஒப்புயர்வின்றி ஜ்வலித்துக் கொண்டிருப்பதுமான ஸ்ரீ ஸுதர்சன ஜ்வாலையானது உங்களுடைய விருப்பங்களை எல்லாம் பரிபூரணமாக நிறைவேற்றட்டும்.

सवितुः इदं-सावित्रम् । सुदर्शनस्य इयं-सौदर्शनी ।
जगतः अगदंकारः भूमा यस्य-तेन-जगदगदंकारभूम्ना ।

*ஸ்ரீ ஸுதர்சனாழ்வானின் ஜ்வாலை அஜ்ஞானமாகிற அகவிருளையும், புற இருளையும் நீக்கும்.

*सौदर्शनी ज्वाला भवतां अभीप्सितानि वितरतु ।

प्रत्युद्यातं मयूखैर्नभसि दिनकृतः प्राप्तसेवं प्रभाभिः
भूमौ सौमेरवीभिः दिविवरिवसितं दीप्तिभिर्देवधाम्नाम् ।
भूयस्यै भूतये वः स्फुरतु सकलदिग्भ्रान्त सान्द्रस्फुलिङ्गं
चाक्रं जाग्रत्प्रतापं त्रिभुवनविजयव्यग्रमुग्रं महस्तत् ॥

ப்ரத்யுத்யாதம் மயூகைர் நபஸி
தினக்ருத: ப்ராப்தஸேவம் ப்ரபாபி:
பூமௌ ஸௌமேரவீபிர் திவிவரி-
வஸிதம் தீப்திபிர்தேவதாம்நாம் ।
பூயஸ்யை பூதயே வ: ஸ்புரது ஸகல
திக் ப்ராந்த்ர ஸாந்த்ர ஸ்புலிங்கம்
சாக்ரம் ஜாக்ரத் ப்ரதாபம் த்ரிபுவன
விஜய வ்யக்ரமுக்ரம் மஹஸ்தத் ॥ 2

பூலோகத்தில் மேருமலையில் ஒளிகளினால் ஸேவிக்கப்பெற்றதும், ஆகாசத்தில் சூரிய கிரணங்களினால் எதிர்கொண்டு உபசரிக்கப்பட்டதும், ஸ்வர்க்கலோகத்தில் தேவர்களுடைய மாளிகைகளின் பிரகாசங்களினால் சுச்ரூஷை செய்யப் பெற்றதும், மூவுலகங்களையும் வெல்லும் முயற்சியைக் கொண்டதும், எப்போதும் ப்ரதாபத்தோடு இருந்துகொண்டு எதிரிகளுக்குப் பயத்தை உண்டு பண்ணக்கூடியதும், மிகவும் பிரஸித்தமான ஸ்ரீஸுதர்சனாழ்வானின் தேஜஸ் உங்களுக்கு மிகுதியான செல்வங்களைக் கொடுப்பதாக விளங்கட்டும்.

सुमेरोः इमाः-सौमेरव्यः-ताभिः सौमेरवीभिः । अत्यन्तं बह्वी-भूयसी, तस्यै । चक्रस्य इद-चाक्रम् ।

*ஸ்ரீ ஸுதர்சனாழ் வானின் தேஜஸ் செல்வத்தை அளித்து வறுமையை நீக்கும்.

*चाक्रं महः भूतये वः स्फुरतु ।

पूर्णपूरैस्सुधानां सुमहति लसतस्सोमबिम्बालवाले
बाहा शाखावरुद्ध क्षितिगगनदिवश्चक्रराजद्रुमस्य ।
ज्योतिश्छद्मा प्रवालः प्रकटितसुमनस्संपदुत्तंस लक्ष्मीं
पुष्णन्नाशामुखेषु प्रदिशतु भवतां सप्रकर्षं प्रहर्षम् ॥

பூர்ணே பூரைஸ்ஸுதாநாம் ஸுமஹதி
லஸதஸ்ஸோம பிம்பாலவாலே,
பாஹா சாகாவருத்த க்ஷிதி-
ககனதிவஸ்சக்ர ராஜ த்ருமஸ்ய ।
ஜ்யோதிஸ்சத்மா ப்ரவாள: ப்ரகடித
ஸுமநஸ்ஸம்பதுத்தம்ஸ லக்ஷ்மீம்
புஷ்ணந் நாஸாமுகேஷு ப்ரதிசது
பவதாம் ஸப்ரகர்ஷம் ப்ரஹர்ஷம் ॥ 3

அம்ருத ப்ரவாஹங்களினுல் நிறைந்து பரிபூர்ண மாய், மிகப்பெருமை பொருந்திய சந்திர பிம்பமாகிற பாத்தியில் விளங்குகின்றதும், திருக்கைகளாகிற கிளைகளினுல் பூமி, ஆகாசம், சுவர்க்கம் முதலிய இடங்களில் வியாபித்ததாகவும் இருக்கும் ஸ்ரீ ஸுதர்சனுழ்வானுகிற கற்பக மரத்தின் புஷ்ப ஸம்ருத்தியை யும், தேவதைகளின் செல்வத்தையும் விளக்குவதாக வும், திசைகளில் எங்கும் பரவி, அவற்றுக்கு சிரோ பூஷணமாகவும் இருந்துகொண்டு அழகைத் தருவதா யும் உள்ள ஸ்ரீ ஸுதர்சனுழ்வானின் ஜ்யோதிஸ்ஸாகிற தளிர், உங்களுக்கு மேன்மை பொருந்திய ஸந்தோ ஷத்தை அளிக்கட்டும்.

*இந்த சுலோகம் கவலையை நீக்கி நிரந்தரமாக மகிழ்ச்சியை அளிக்கும் ஸ்ரீ ஸுதர்சனுழ்வாழ்வான் கல்பவ்ருக்ஷம்.

द्रुमाणां राजा-राजद्रुमः चक्रमव राजद्रुमः ।

*ज्योतिः भवतां प्रहर्षं प्रदिशतु ।

आराधारात्सहस्राद्विसरति विमतक्षेपदक्षाद्यदक्षात्
नाभेर्भास्वत्सनाभेर्निजविभवपरिच्छिन्नभूमेश्च नेमेः ।
आम्नायैरेककण्ठैः स्तुतमहिममहो माधवीयस्य हेतेः
तद्वो दिक्ष्वेधमानं चतसृषु चतुरः पुष्यतात् पूरुषार्थान् ॥

ஆராதாராத் ஸஹஸ்ராத் விஸரதி
விமதக்ஷேப தக்ஷாத்ய தக்ஷாத்
நாபேர் பாஸ்வத்ஸநாபேர் நிஜவிபவ
பரிச்சிந்த பூமேஶ்ச நேமே:,
ஆம்நாயைரேக கண்டை: ஸ்துத-
மஹிமமஹோ மாதவீயஸ்யஹேதே:
தத்வோ திக்ஷ்வேதமாநம் சதஸ்ருஷு
சதுர: புஷ்யதாத் பூருஷார்த்தான். 4

அரம், அக்ஷம், நாபி, நேமி ஆகியவை ஸ்ரீ ஸ்ரீ ஸுதர்சனாழ்வானின் அவயவங்கள். அவற்றி லிருந்து தோன்றிக் கிளர்ந்தெழும் ஜ்வாலையே ஸுதர்சன ஜ்வாலையாகும். அப்படிப்பட்ட ஸுதர்சன ஜ்யோதிஸ் உங்களுக்கு சதுர்வித புருஷார்த்தங்களை யும் மிகுதியாக அள்ளிக்கொடுக்கட்டும்.

अराणां समूहः-आरम्-तस्मात् । अराणां संबन्धि-आरम्-तस्मात् ।

आरात् என்ற சொல்லுக்கு அண்மை, சேய்மை என்னும் இருவகைப் பொருள்களுண்டு. आराद्दूर समीपयोः என்கிறது அமரகோசம். இந்த ச்லோகத்தின் மூன்றும் அடியில் 'एककण्ठस्तुतमहिम' என்ற பாடபேதம் காணப் படுகிறது.

*இந்த சுலோகம் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நாற்பெரும் பயன்களையும் அளிக்கும்.

*तेजो वः चतुरः पुरुषार्थान् पुष्यतात् ।

श्यामं धामप्रसृत्या क्वचन भगवतः क्वापि बभ्रु प्रकृत्या
शुभ्रं शेषस्य भासा क्वचन मणिरुचा क्वापि तस्यैव रक्तम् ।
नीलं श्रीनेत्रकान्त्या क्वचिदपि मिथुनस्यादिमस्यैव चित्रां
व्यातन्वानं वितानश्रियमुपचिनुताच्छर्म वश्चक्रभानम् ॥

ச்யாமம் தாம ப்ரஸ்ருத்யா க்வசன
பகவத: க்வாபி பப்ரு ப்ரக்ருத்யா
சுப்ரம் சேஷஸ்ய பாஸா க்வசந
மணிருசா க்வாபிதஸ்யைவ ரக்தம்,
நீலம் ஸ்ரீநேத்ர காந்த்யா க்வசிதபி
மிதுநஸ்யாதி மஸ்யேவ சித்ராம்
வ்யாதந்வாநம் விதாநச்ரிய-
முபசிநுதாத் சர்ம வச்சக்ரபாநம். 5

பகவானின் திருமேனி நிறத்தின் பரவலால் சில இடங்களில் (ச்யாம) பாசியின் நிறமாகவும், சில இடங்களில் மஞ்சள் நிறமாகவும், திருவனந்தாழ் வானின் நிறத்தின் பரவலால் சில இடங்களில் வெள்ளை நிறமாகவும், திருவனந்தாழ்வானின் திரு முடியில் இருக்கும் மாணிக்க ஒளியினால் சில இடங் களில் சிவப்பு நிறமாகவும், கருநெய்தல் போன்ற பிராட்டியின் கண் ஒளியினால் சில இடங்களில் நீல நிறமாகவும் ஆகப்பல வகை நிறங்கள் நிறைந்த ஸ்ரீ ஸுதர்சன ஜ்யோதிஸ், பெருமாளும் பிராட்டியுமான திவ்ய தம்பதிகளுக்கு அழகிய விதானம்போல் (மேற் கட்டுபோல்) விளங்குகின்றது. அப்படிப்பட்ட ஸுதர்சன ஜோதி உங்களுக்கு ஸுகத்தைத் தந்திடுக.

பாசியின் பசும் புறம் போலும் நீர்மை—சியாமம் श्याम. தீபசிகா துல்யவர்ணம் - बभ्रु

*चक्रभानं वः शर्म उपचिनुताम् ।

शंसन्त्युन्मेषमुच्चोषित परमहसो भास्वतः कैटभारेः
इन्धे तत्संध्येव नक्तंचरविलयकरी या जगद्वन्दनीया ।
बन्धूकच्छायबन्धुच्छविघटितघनच्छेदमेदस्विनी सा
राथाङ्गी रश्मिभङ्गी प्रणुदतु भवतां प्रत्यहोत्थानमेनः ॥

ஶம்ஸந்த்யுந்மேஷ முச்சோஷித
பரமஹஸோ பாஸ்வதః கைடபாரே:
இந்தே ஸந்த்யேவ நக்தஞ்சர-
விலயகரீ யா ஜகத் வந்தநீயா,
பந்தூகச்சாய பந்துச்சவிகடித
கநச்சேதமேதஸ்விநீ ஸா
ராதாங்கீ ரச்மி பங்கீ ப்ரணுததது
பவதாம் ப்ரத்யஹோத்தாநமேநः 6

சந்திரன் முதலிய கிரஹங்களின் தேஜஸ்ஸை எல்லாம் மறைத்து (அழித்து) இல்லாதபடி செய்து விடுகிறது சூரியனின் ஒளி; அந்த ஸூர்யோதயத்தை விளங்கச் செய்கிறது ப்ராதஸ்ஸந்த்யை, அதுபோல பிரதி பக்ஷிகளின் (சத்ருக்களின்) வலிமைகளை எல்லாம் (தேஜஸ்ஸுகளை எல்லாம்) அழிக்கும் எம்பெருமானின் சோபையை (சாதுர்யத்தை) விளங்கச் செய்கிறது ஸுதர்சன தேஜஸ். இரவில் திரியும் துஷ்ட (கொடிய) ஜந்துக்கள் எல்லாம் சூரியோதயத்தைக் கண்டவாறே மறைந்து போகும். இரவில் திரியும் அஸுர ராக்ஷஸர்கள் ஸுதர்சன ஜ்வாலையைக் கண்டவாறே மறைந்து அழிந்து போவார்கள். உதய சூரியனின் செவ்விய கிரணங்கள் மேகத்தோடு கலந்து மேகத்தையும் சிவக்கச் செய்யும்; ஸுதர்சன கிரணங்கள் காளமேகத்தோடு கலந்து காளமேகத்தையும் சிவக்கச் செய்யும். அப்படிப்பட்ட ஸுதர்சன ஜ்யோதிஸ் உங்களுடைய பாவத்தை அழிக்கட்டும்.

*இந்த சுலோகம் ஸௌக்யத்தை அதிகமாக்கும்.

*ज्वाला भवतां एनः प्रणुदतु ।

साम्यं धूम्या प्रवृत्त्या प्रकटयति नभस्तारकाजालकानि
स्फौलिङ्गीं यान्ति कान्तिं दिशति यदुदये मेरुरङ्गार-
शङ्काम् ।
अग्निर्मग्नार्चिरैक्यं भजति दिननिशावल्लभौ दुर्लभाभौ
ज्वालावर्ताविवस्तः प्रहरणपतिजं धामवस्तद्धिनोतु ॥

ஸாம்யம் தூம்யா ப்ரவ்ருத்த்யா
ப்ரகடயதி நபஸ்தாரகா ஜாலகாநி
ஸ்பௌலிங்கீம் யாந்தி காந்திம்
திசதி யதுதயே மேருரங்காரசங்காம்,
அக்நிர் மக்நார்ச்சி ரைக்யம் பஜதி
திநநிசா வல்லபௌ துர்லபாபௌ
ஜ்வாலாவர்த்தாவிவ ஸ்தঃ ப்ரஹரண
பதிஜம் தாம வஸ் தத் திநோது. 7

ஸுதர்சன ஜ்யோதிஸ் கிளர்ந்து எழும் காலத்தில் தோன்றும் புகை மண்டலம் ஆகாசம் முழுதும் பரவியதால் (பரவுவதால்) ஆகாசம் 'புகைக் கூண்டு' போல் தோற்றம் அளிக்கிறது. நக்ஷத்திரங்கள் எல்லாம் நெருப்புப் பொறிகளாகத் தோற்றமளிக்கின்றன. பிரகாசமான மேரு மலையானது பாதி எரிந்த கொள்ளிக் கட்டையைப்போல் ஒளி குன்றிக் காட்சியளிக்கிறது. சூரியசந்திரர்கள் ஒளி இழந்து, சிறுவர்கள் விளையாடும் மாவலியிலிருந்து தோன்றும் ஒளி வட்டம் போல் தோற்றம் அளிக்கின்றனர். இப்படி எல்லா ஒளிப் பொருள்களைக் காட்டிலும் மேம்பட்டு விளங்கும் ஸுதர்சனச் சோதி உங்களை மகிழவைக்கட்டும்.

धूमानां समूहः-धूम्या । स्फुलिङ्गानां इयं-स्फौलिङ्गी ।

*இந்த சுலோகம் என்றும் மகிழ்வோடு இருக்கச் செய்யும்.

*तत् धाम वः धिनोतु ।

दृष्टेऽघिव्योमचक्रे विकचनवजपा सन्निकाशे सकाशं
स्वर्भानुर्भानुरेष स्फुटमितिकलयन्नागतो वेगतोऽस्य ।
निष्टप्तो यैर्निवृत्तो विधुमिव सहसा स्प्रष्टुमद्यापि नेष्टे
घर्मांशुं ते घटन्तामहित विहतये भानवो भास्वराव: ॥

த்ருஷ்டேऽதிவ்யோமசக்ரே விகச நவ
ஜபாஸந்நிகாசே ஸகாசம்
ஸ்வர்பாநுர் பாநுரேஷ ஸ்புடமிதி
கலயந் நாகதோ வேகதோஸ்ய,
நிஷ்டப்தோ யைர்நிவ்ருத்தோ விதுமிவ
ஸஹஸா ஸ்ப்ரஷ்டு மத்யாபிநேஷ்டே
கர்மாம்சும் தே கடந்தா மஹித
விஹதயே பாநவோ பாஸ்வரா வ: 8

ஒரு சமயம் திருவாழியாழ்வான் ஆகாசத்தில் ஜபா புஷ்பம்போல் செக்கச் செவேலென்று காணப் பட்டார். கிரஹங்களில் ஒன்ருன ராஹு*, அந்த ஸுதர்சனுழ்வானை சூரியன் என்று எண்ணி அவரருகில் சென்ருன். அவரது ஒளியின் மிகுதியால் தாக்கப்பட்டுத் திரும்பி வந்துவிட்டான். அது முதல் கிரஹண காலத்தில் கூட உண்மையான சூரியனைப் பிடிக்கச் சென்ருலும், 'இவன் சூரியனு? ஸுதர்சனுழ் வானு?' என்று சிந்தித்து ஒரு முடிவுக்கு வந்தபிறகே சூரியனைத் தாமதித்துப் பிடிக்கிருனும்! சூரியனை விடப் பன்மடங்கு ஒளியுடைய திருவாழியாழ்வானின் கிரணங்கள் உங்கள் பகைவர்களை அழித்து உங்களை ரக்ஷிக்கட்டும்.

निश्शेषं यथा तथा तप्तं-निष्टप्तम् ।

*கிரஹண காலங்களில் ராஹு சூரியனைப் பிடிக்கச் சிறிது காலதாமதமாகும்; சந்திரனைச் சீக்கிரம் பிடித்துவிடும். இது வழக்கம்.

*भानव: अहित विहतये घटन्ताम् ।

देवं हेमाद्रितुङ्गं पृथुभुजशिखरं बिभ्रतीं मध्यदेशे
नाभिद्वीपाभिरामामर विपिनवतीं शेषशीर्षासनस्थाम् ।
नेमिं पर्यायभूमिं दिनकरकिरणादृष्टसीमः परीत्य
प्रीत्यैवश्चक्रवालाचल इव विलसन्नस्तु दिव्यास्त्ररश्मिः ॥

தேவம் ஹேமாத்ரிதுங்கம் ப்ருது
புஜசிகரம் பிப்ரதீம் மத்யதேசே
நாபித்வீபாபிராமாமர விபிநவதீம்
சேஷ சீர்ஷாஸநஸ்த்தாம்,
நேமிம் ப்ர்யாய பூமிம் தினகர
கிரணா த்ருஷ்டஸீம: பரீத்ய
ப்ரீத்யை வஶ்சக்ரவாலாசல இவ
விலஸந்நஸ்து திவ்யாஸ்த்ர ரச்மி: 9

திருவாழியாழ்வானின் நேமியைச் சுற்றி விளங்கும் ஜ்வாலையைப் பார்த்தால் பூமியைச் சுற்றி லோகாலோக பர்வதம் விளங்குவது போல் இருக்கிறது. பூமி, பெரிய சிகரத்தையுடைய மேருமலையைத் தன்னிடம் கொண்டிருக்கிறது. தீவுகள் காடுகள் முதலியவற்றோடு திருவனந்தாழ்வானின் திருமுடியின் மீது இருக்கிறது. ஸு தர்சன நேமியும் பூமியைப் போல் இருக்கிறது. நேமியின் நடுவில் ஸ்ரீ ஸுதர்சன உருவமே மேருமலை. அவருடைய புஜங்கள் மேரு மலையின் சிகரம். அவரது நாபியே தீவு; அரங்களே காடுகள். பூமியைச் சுற்றி லோகாலோக பர்வதம் இருக்கிறது. இது சூரிய கிரணங்களே புகாத இடம்; இருள்மயம். இப்படிப்பட்ட ஸுதர்சன ஜ்யோதி எப்போதும் உங்களுக்கு ஸந்தோஷத்தை அளிக்கட்டும்.

दिनकरकिरणैः अदृष्टा सीमा यस्य सः

லோகாலோக பர்வதம் என்பது சக்ரவாள மலை.

*दिव्यरश्मिः वः प्रीत्यै भवतु ।

एकं लोकस्य चक्षुर्द्विविधमपनुदत्कर्म नम्रत्रिनेत्रं
धात्रार्थानां चतुर्णां गमयदरिगणं पञ्चतां षड्गुणाढ्यम् ।
सप्तार्चिश्शोषिताष्टापदनवकिरणश्रेणिरज्यद्दशाशं
पर्यस्याद्वश्शताङ्गावयवपरिवृढ ज्योतिरीतीस्सहस्रम् ॥

ஏகம் லோகஸ்ய சக்ஷுர் த்விவித
மபநுதத் கர்ம நம்ர த்ரிநேத்ரம்
தாத்ரார்த்தாநாம் சதுர்ணாம் கமய-
தரிகணம் பஞ்சதாம் ஷட்குணாட்ட்யம்,
ஸப்தார்ச்சி ஶ்ஶோஷிதாஷ்டா பத-
நவகிரண ச்ரேணிரஜ்யத் தசாசம்
பர்யஸ்யாத்வ ஶ்ஶதாங்கா வயவ
பரிப்ருட ஜ்யோதிரீதீஸ்ஸஹஸ்ரம். 10

உலகத்திற்குக் கண் போன்றதும், புண்ய பாபங்களாகிற இருவினைகளையும் போக்கடிப்பதும், முக்கண்ணனால் (பரமசிவனால்) வணங்கப்படுவதும், தர்மார்த்த காம மோக்ஷங்களை அளிப்பதும், பகைவர்களின் கூட்டங்களை அழிப்பதும், ஞானம், சக்தி முதலிய ஆறு குணங்கள் நிறையப் பெற்றதும், தீயில் காய்ச்சப்பட்ட தங்கம் போன்ற சிவந்த கிரணங்களால் பத்து திசைகளையும் வியாபித்து இருப்பதுமான ஸுதர்சன ஜ்யோதிஸ் உங்களுடைய பல துன்பங்களையும் அழித்து உங்களை ரக்ஷிக்கட்டும். இந்த சுலோகத்தில் एकं, द्वि, त्रि, என்று தொடங்கி सहस्रं என்று எண்களின் பெயர் அமைந்திருக்கிறது. இதை அடியொற்றி அமைந்ததே கருட பஞ்சாசத்தில் एकोविष्णु: என்ற ஐந்தாம் சுலோகம்.

*ईती: என்பது ஈதிபாதைகள் மட்டுமின்றி எல்லா துன்பங்களையுமே குறிக்கிறது.

*ज्योतिर्वः ईतीः पर्यस्यात् ॥

उच्चण्डे यच्छिखण्डे निबिडयति नभः क्रोडमर्कोऽटति द्याम्
अप्यस्य प्रौढतापग्लपित वपुरपो बिभ्रतीरभ्रपङ्क्तीः ।
धत्ते शुष्यत्सुधोत्सो विधुरपमधुनः क्षौद्रकोशस्य साम्यं
रक्षन्त्वस्त्र प्रभोस्ते रचितसुचरित व्युष्टयोघृष्टयो वः ॥

*உச்சண்டே யச்சிகண்டே நிபிடயதி*
*நப: க்ரோடமர்க்கோடதித்யாம்*
*அப்யஸ்ய ப்ரௌடதாப க்லபித*
*வபுரபோ பிப்ரதீரப்ரபங்க்தீ: ।*
*தத்தே சுஷ்யத் ஸுதோத்ஸோவிதுரப-*
*மதுந: க்ஷௌத்ரகோசஸ்ய ஸாம்யம்*
*ரக்ஷந்த்வஸ்த்ர ப்ரபோஸ்தே ரசித*
*ஸுசரித வ்யுஷ்டயோக்ருஷ்டயோவ:* 11

எந்த ஸுதர்சனாழ்வானின் கிரணங்களின் (சுடர்க் கொழுந்து) சுடரொளி ஆகாசத்தை அடைந்தவுடன் அதனால் மிகவும் தபிக்கப்பட்டு ஸூரியன் மழை மேகங்களான கருமுகிலுக்குள் புகுந்துப் புகுந்து ஸஞ் சரிக்கிறானே! தன்னிடமுள்ள அம்ருதப் பெருக்கு வற்றிப்போய் தேன் அற்ற தேனடைபோல் சந்திரன் ஆகிறானே! மேன்மேலும் புண்ணியத்தை வளர்க்க வல்ல அப்படிப்பட்ட திருவாழியாழ்வானின் கிரணங் கள் உங்களைக்காத்து அருளட்டும்.

अभ्रपङ्क्तीः - மேகப்படலங்கள் सुधोत्सः அம்ருத ப்ர வாஹம் क्षौद्रकोशः - தேனடை व्युष्टिः - ஸம்ருத்தி, घृष्टयः - கிரணங்கள்.

*தன்னுடைய கிரணங்களால் சூரிய சந்திரர் களையும் ஒளி இழக்கச் செய்பவர் ஸ்ரீ ஸுதர்சனாழ் வான். இவரை ஆழ்வார்கள் கனலாழி என்றும், அனலாழி என்றும் கூறுகிறார்கள்.

*अस्त्रघृष्टयः वः रक्षन्तु ।

**पद्मौघो दीर्घिकाम्भस्यवनिधरतटे गैरिकाम्बुप्रपातः**
**सिन्दूरं कुञ्जराणां दिशि दिशि गगने सान्ध्यमेघप्रबन्धः।**
**पारावारे प्रवालो वनभुवि च तथा प्रेक्ष्यमाणः प्रमुग्धैः**
**साधिष्ठं वः प्रबोधं जनयतु दनुजद्वेषिणस्त्वैषराशिः ॥**

பத்மௌகோ தீர்க்கிகாம்பஸ்யவநி
தரதடே கைரிகாம்பு ப்ரபாத:
ஸிந்தூரம் குஞ்ஜராணும் திசி திசி
ககநே ஸாந்த்யமேக ப்ரபந்த: ।
பாராவாரே ப்ரவாளோ வநபுவி ச
ததா ப்ரேக்ஷ்யமாண: ப்ரமுக்தை:
ஸாதிஷ்டம் வ: ப்ரபோதம் ஜநயது
தநுஜத்வேஷிணஸ்த்வைஷ ராசி: ॥ 12

வாவித்தடங்களில் செந்தாமரை மலர்த் திரளாகவும், மலைச்சாரல்களில் தாதுப் பொடிகள் கலந்த காவி நீர் அருவி வீழ்ச்சியாகவும், ஒவ்வொரு திசைகளிலும் இருக்கும் திக்கஜங்களிடம் சிந்துரப் பொடியாகவும், ஆகாசத்தில் அந்திப்போதில் தோன்றும் சிவந்த மேகத்திரளாகவும், கடலில் பவழமாகவும், காடுகளில் செந்தளிராகவும் பாமர மக்களால் பார்க்கப்படுகின்ற திருவாழியாழ்வானின் கிரணஸமூஹம் (ஒளிக் கூட்டமானது) உங்களுக்கு நல்ல அறிவை உண்டாக்கட்டும்.

पद्मौघः - தாமரை மலர்த்திரள், मेघप्रबन्धः - மேகத்திரள், प्रवालः - பவழம், தளிர், प्रमोदः - ஸந்தோஷம், प्रबोधः - சிறந்த ஞானம்.

त्विषां समूहः त्वैषं, तस्य राशिः-त्वैषराशिः ।

*திருவாழியாழ்வானின் (கிரணஸமூஹம்) ஒளிக் கூட்டம் எங்கும் வியாபித்து, ஒவ்வோரிடத்தில் ஒவ்வொரு விதமாகக் காட்சியளிக்கிறது.

*त्वैषराशिः साधिष्ठं नः प्रबोधं जनयतु ।

**भानो! भानो त्वदीया स्फुरति कुमुदिनीमित्र! ते कुत्र तेजः**
**ताराः! स्ताऽऽरादधीरोऽस्यनल! न भवतः स्वैरमैरम्मदार्चिः।**
**शंसन्तीत्थं नभःस्था यदुदयसमये चक्रराजांशवस्ते**
**युष्माकं प्रौढतापप्रभवभवगदापक्रमाय क्रमन्ताम्॥**

*பாநோ! பாநோத்வதீயா ஸ்புரதி*
*குமுதிநீ மித்ர! தே குத்ர தேஜ:*
*தாரா:! ஸ்தாராததீரோஸ்யநல*
*ந பவத: ஸ்வைர மைரம்மதார்ச்சி: ।*
*ஶம்ஸந்தீத்தம் நப: ஸ்தா யதுதய*
*ஸமயே சக்ர ராஜாம்ஶவஸ்தே*
*யுஷ்மாகம் ப்ரௌடதாப ப்ரபவ*
*பவகதா பக்ரமாய க்ரமந்தாம் ॥* 13

ஸுதர்சன கிரணங்களின் உதய காலத்தில், ஆகாசத்தில் திவ்ய விமானங்களில் செல்லும் தேவ கந்தருவாதிகள் (தேவர்கள் கந்தருவர்கள் முதலானோர்கள்). ஓ! சூரியனே! உன் ஒளியும் மங்கிப்போய் விட்டதே! சந்திரனே! உன் தேஜஸ் என்னவாயிற்று? நக்ஷத்திரங்களே! நீங்கள் வெகுதூரம் சென்று விடுங்கள்! ஓ! அக்நி பகவானே! நீ இப்படி ஒளி குறைந்து பலஹீனனாக (ப்ரகாச ஹீனனாக) ஆகிவிட்டாயே! ஓ! வஜ்ராக்நியின் தேஜஸ்ஸே! நீ ஸுதர்சன ஒளியில் கலந்து உருவழிந்து தனித்தன்மையை இழந்து விட்டாயே! என்று கூறும்படி பெருமை வாய்ந்த ஸுதர்சனாழ்வானின் கிரணங்கள், தாபத்ரங்களுக்குப் பிறப்பிடமாகிய பிறவி நோயைத் தீர்க்கட்டும். भानुः சூரியன், कुमुदिनीमित्रः - சந்திரன், ताराः - நக்ஷத்திரங்கள், अनलः - அக்னி.

*चक्रराजांशवः भवगदापक्रमाय क्रमन्ताम्।

जग्ध्वा कर्णेषु दूर्वाङ्कुरमरिसुदृशामक्षिषु स्वर्वधूनां
पीत्वाचाम्भश्चरन्त्य स्ववृषमनुगता वल्लवेनाधिमेन ।
गावोवश्चक्रभर्तुः परममृतरसं प्रश्नितानां दुहानाः
ऋद्धिं स्वालोकलुप्तत्रिभुवनतमसः सानुबन्धां ददन्ताम् ॥

ஜக்த்வா கர்ணேஷு தூர்வாங்குர மரி
ஸுத்ருசா மக்ஷிஷு ஸ்வர்வதூநாம்
பீத்வா சாம்ப ஶ்சரந்த்ய: ஸவ்ருஷ
மநுகதா வல்லவே நாதிமேந |
காவோ வஶ்சக்ர பர்த்து: பரமம்ருத
ரஸம் ப்ரச்ரிதாநாம் துஹாநா:
ருத்திம் ஸ்வாலோகலுப்த த்ரிபுவந
தமஸ: ஸாநுபந்தாம் ததந்தாம் || 14

1. அஸுர, அரக்க மாதர்கள், மங்களகரமாகக் காதுகளில் அணிந்து கொண்டிருக்கும் அறுகம் புல்லைத் தின்று. தேவமாதர்களின் கண்ணீரைப் பருகுகின்றனவும் தரும நெறியில் சென்று மோக்ஷத்தில் ருசியை உண்டாக்குகின்ற ஸுதர்சன கிரணங்கள் நிலையான செல்வத்தை உங்களுக்குக் கொடுக்கட்டும்.

2. அறுகம் புல்லைத் தின்று தண்ணீரைப் பருகி காளையோடு சேர்ந்துத் திரிகின்றவையும், தங்களுக்குப் பின்னால் கண்ணனை (கோபாலனை) வரப் பெற்றவையும், அம்ருதம் போன்ற பாலைக் கொடுப்பவையும், தம் கடாக்ஷத்தினால் மூவுலகத்தவரின் அறியாமையாகிற இருளைப் போக்கி அருளுவதுமான கண்ணபிரானின் பசுக்கள் உங்களுக்குத் தொடர்ந்து நிலையான செல்வத்தை அளிக்கட்டும்.

चक्रं बिभर्ति इति - चक्रभर्ता - கண்ணன், चक्रं चासौ भर्ता च - चक्रभर्ता - திருவாழியாழ்வான்,

*चक्रगावः सानुबन्धां ऋद्धिं ददन्ताम् ।

सेनां सेनां मघोनो महति रणमुखेऽलं भयं लम्भयन्तीः
उत्सेकोष्णालुदोष्णां प्रथमदिविषदामावलीर्यावलीढे ।
विश्वं विश्वम्भराद्यं रथपदधिपतेर्लीलया पालयन्ती
वृद्धिस्सा दीधितीनां वृजिनमनुजनुर्मार्जयत्वार्जितं वः ॥

ஸேநாம் ஸேநாம் மகோநோ மஹதி-
ரணமுகேலம் பயம் லம்பயந்தீ:
உத்ஸே கோஷ்ணாலு தோஷ்ணாம்
ப்ரதமதிவிஷதா மாவலீர்யாவலீடே,
விச்வம் விச்வம்ப ராத்யம் ரதபததி
பதேர் லீலயா பாலயந்தீ
வ்ருத்திஸ், ஸா, தீதிதீநாம் வ்ருஜிந
மநு ஜநுர் மார்ஜயத்வார்ஜிதம் வ: ॥ 15

பெரிய போர்க்களத்தில் தலைவர்களோடு கூடிய இந்திர சேனையைப் பயமுறுத்தி, செருக்கினால் போர் செய்யத் துடிக்கிற வலியகைகளைக் கொண்ட அசுரர்களின் கூட்டங்களை அழித்து, பூமி முதலிய எல்லா உலகங்களையும் அவலீலையாக (விளையாட்டாக) ரக்ஷிக்கின்ற ஸுதர்சனாழ்வானுடைய கிரணங்கள் (கிரங்கள்) பிறவி தோறும் ஈட்டிய பாவங்களை அழிக்கட்டும்.

अनुजनुः - பிறவிதோறும் मघोनः - இந்திரனுடைய अलं भयं लम्भयन्तीः – மிகவும் பயப்படுத்துகின்ற उत्सेकः – கர்வம்.

इनैः सहवर्तते इति सेना-तां-सेनां ।

*பாபங்களை அழிக்க வல்லவர் ஸ்ரீ ஸுதர்சனாழ்வான்.

*दीधितीनां ऋद्धिः आर्जितवृजिनं वः मार्जयतु ।

**तप्ता स्वेनोष्मणेव प्रतिभटवपुषामस्रधारा धयन्ती
प्राप्तेवक्षीबभावं प्रतिदिशमसकृत्तन्वती घूर्णितानि ।
वंशास्थिस्फोटशब्दं प्रकटयति पटून् याऽऽवहन्त्यट्टहासान्
भासा वः स्यन्दनाङ्गप्रभुसमुदयिनी स्पन्दतां चिन्तिताय ॥**

தப்தா ஸ்வேநோஷ்மணேவ ப்ரதிபட
 வபுஷாமஸ்ரதாரா தயந்தீ
ப்ராப்தேவ க்ஷீபபாவம் ப்ரதி திச
 மஸக்ருத் தந்வதீ கூர்ணிதாநி ।
வம்சாஸ்த்தி ஸ்போடசப்தம் ப்ரகடயதி
 படூந் யாவஹந்த்யட்டஹாஸாந்
பாஸா வ: ஸ்யந்த நாங்க ப்ரபு
 ஸமுதயிநீ ஸ்பந்ததாம் சிந்திதாய ॥ 16

தனது உஷ்ணத்தினுல் தாபமடைந்தது போல் எந்த திருவாழியாழ்வானின் பிரகாசமானது எதிரிகளின் உடலில் தோன்றும் ரத்தப் பெருக்கைப் பருகி பெருமதம் கொண்டு எல்லா திசைகளிலும் சுற்றிக் கொண்டும், சத்துருக்களின் முதுகெலும்பை முறிக்கும் பேரொலியை எழுப்பிக் கொண்டும், அட்டஹாஸமாக பெருஞ் சிரிப்பை வெளியிட்டுக் கொண்டும் இருக்கிறதோ அந்த ஸுதர்சன ப்ரபையானது உங்களுடைய மநோரதத்தை நிறைவேற்றும் பொருட்டுச் சிறிது புறப்படட்டும்.

*क्षीबः - मत्तः, तस्य भावः - क्षीबभावः । अस्रधाराः- ரக்த தாரைகள் पटून् - கொடிய, अट्टहासान् - பெருஞ் சிரிப்புக்கள்.

*மநோரதங்களை நிறைவேற்றி வைப்பவர் ஸ்ரீ ஸுதர்சனுழ்வான்.

*सुदर्शनप्रभा चिन्तिताय स्पन्दताम् ।

**देवैरासेव्यमानो दनुजभटभुजा दण्डदर्पोष्मतप्तैः**
**आशारोधोतिसंघो लुठदुडुपटलो लक्ष्यडिण्डीरपिण्डः ।**
**रिङ्गज्ज्वालातरङ्ग त्रुटितरिपुतरुव्रातपातोग्रमार्गः**
**चाक्रोवशोचिरोघश्शमयतु दुरितापह्नवं दाववह्निम् ॥**

தேவை ராஸேவ்ய மாநோ தநுஜபட-
புஜா தண்டதர்போஷ்மதப்தை:
ஆசாரோதோதி லங்கீ லுடதுடு
படலீ, லக்ஷ்ய டிண்டிரபிண்ட: ।
ரிங்கஜ்ஜ்வாலா தரங்க த்ருடித
ரிபு தரு வ்ராத பாதோக்ரமார்க:
சாக்ரோவஸ்ஶோசிரோக ஶ்ஶமயது
துரிதாபஹ்நவம் தாவவஹ்நிம் ॥ 17

திருவாழியாழ்வானின் ஜ்வாலை பிரவாஹம் போன்றது. சூரிய வெப்பத்தினால் தபிக்கப்படுகிறவர்கள் ஜலப்ரவாஹத்தில் ஆழ்ந்து மூழ்குவார்கள். அதுபோல் அஸுரர்களின் புஜபலத்தின் செருக்கினால் தபிக்கப்பட்ட தேவர்கள் திருவாழியாழ்வானின் ஜ்வாலாப் பிரவாஹத்தில் மூழ்கி வெப்பத்தைத் தணித்துக் கொள்கிறார்கள்.

ஜலப் பிரவாஹம் நுரைகள் மிகுந்து ஜ்வாலையும் கரை கடந்துசெல்லும் திசைகளைக் கடந்து செல்கிறது. வெள்ளம் மரங்களை அறுத்து வீழ்த்தி வழிகளை எல்லாம் பயங்கரமாக ஆக்கும். ஜ்வாலாப் பிரவாஹமும் சத்ருக்களின் உடல்களை அறுத்து வீழ்த்தி அச்சத்தை ஏற்படுத்துகிறது. இத்தகைய ஜ்வாலாப் பிரவாஹம் உங்களுடைய பாவங்களாகிற காட்டுத் தீயை அணைக்கட்டும்.

उडुपटली - நக்ஷத்திரக் கூட்டம், दाववह्निः – காட்டுத்தீ
शोचिरोघः: ஜ்வாலாப் பிரவாஹம்.

* चाक्रः दुरितदाववह्निं शमयतु ।

**भ्राम्यन्ती संश्रितानां भ्रमशमनकरी छन्नसूर्यप्रकाशा**
**सूर्यालोकानुरूपा रिपुहृदयतमस्कारिणी निस्तमस्का ।**
**धारासंपातिनी च प्रकटितदहना दीप्तिरस्त्रेशितुर्वः**
**चित्रा भद्राय विद्रावितविमतजना जायतामायताय ॥**

*ப்ராம்யந்தீ ஸம்ச்ரிதாநாம் ப்ரம*
*ஶமநகரீச்சந்நஸூர்யப்ரகாசா*
*ஸூர்யாலோகாநுரூபா ரிபுஹ்ருதய*
*தமஸ்காரிணீ நிஸ்தமஸ்கா ।*
*தாரா ஸம்பாதிநீ ச ப்ரகடித தஹநா*
*தீப்திரஸ்த்ரேசிதுர் வ:*
*சித்ராபத்ராய வித்ராவித விமத-*
*ஜநா, ஜாயதாமாயதாய ॥* **18**

தன்னிடம் புத்தி ப்ரமம் இல்லாவிட்டாலும், ப்ரமத்தினுல் (சுழற்சியால்) ஆச்ரிதர்களின் ப்ரமத்தைப் போக்குவதும்; சூரியனை மறைத்ததாயினும் ஸூரி ஜனங்களின் (பண்டிதர்களின்) நல்லறிவு வளர்வதற்கு உதவுவதும்; தன்னிடம் தமஸ் இல்லாவிட்டாலும், சத்ருக்களின் நெஞ்சில் அக்ஞான இருளை உண்டு பண்ணுவதும்; பெருமழையைத் தருவதாயினும் சத்ருக்களின் மீது அக்னியை வெளிப்படுத்துவதுமான ஸுதர்சன ஜ்வாலை உங்களுக்கு மங்களங்களை அளிக்கட்டும்.

१. सूर्यस्य-आलोकः, तस्य अनुरूपा । सूरीणां आलोकः, तस्य अनुरूपा—सूर्यलोकानुरूपा ।

*மஹாபாரதப் போரில் ஜயத்ரதவதம் என்ற இடத்தில் ஸுதர்சனுழ்வான் சூரியனை மறைத்த செய்தி கூறப்படுகிறது. 'நாழிகை கூறிட்டுக்காத்து நின்ற......' என்றார் பெரியாழ்வார்.

* अस्त्रदीप्तिः वः भद्राय जायताम् ।

निन्ये वन्येव काशी दवशिखिजटिलज्योतिषा येन दाहं
कृत्या वृत्या विलिल्ये शलभसुलभया यत्र चित्र प्रभावे ।
रुद्रोऽप्यद्रेर्दुहित्रा सहगहनगुहां यद्भयादभ्ययासीत्
दिश्याद्विश्वार्चितो वः सशुभमनिभृतं शौरिहेतिप्रतापः ॥

நிந்யேவந்யேவ காசீ தவசிகி ஜடில
ஜ்யோதிஷா யேந தாஹம்
க்ருத்யா வ்ருத்யா விலில்யே
சலபஸு॰லபயா யத்ரசித்ர ப்ரபாவே।
ருத்ரோப்யத்ரேர் துஹித்ரா ஸஹ
கஹநகுஹாம் யத்பயாதப்ய யாஸீத்
திச்யாத் விச்வார்ச்சிதோ வஸ் ஸ
சுப மநிப்ருதம் சௌரிஹேதி ப்ரதாப: ॥ 19

முன்பு ஒருகால் ஸு॰தர்சன ஜ்யோதி காசீபட்டணத்தைக் கொளுத்தியது; துர்வாஸ முனிவரால் தோற்றுவிக்கப்பட்ட க்ருத்யையானது (பேய், ஏவல்) ஸு॰தர்சன தேஜஸ்ஸில் விட்டில் பூச்சி போல் மாண்டு ஒழிந்தது; ஒரு சமயம் திருவாழியின் தேஜஸ்ஸைக் கண்டு பயந்து பரம சிவன் பார்வதியோடு ஓடிச் சென்று மலைக்குகையில் ஒளிந்து கொண்டு தப்பிப் பிழைத்தான். அப்படிப்பட்ட பெருமை கொண்ட ஸு॰தர்சன ப்ரதாபமானது உங்களுக்கு நிலையான மங்களத்தைக் கொடுக்கட்டும்.

*பௌண்ட்ரக வாசு தேவனின் வதம் என்ற சரித்திரம் காசீ பட்டண அழிவைக் கூறுகிறது.

*சக்ராயுதம் கிருத்யையைக் கொன்ற சரித்திரம் விஷ்ணு புராணத்தில் (5-34-31) கூறப்பட்டுள்ளது. பரமசிவன் திருவாழிக்கு அஞ்சி ஓடி ஒளிந்ததை கூரேச விஜயம் (14 ஆம் சுலோகம்) கூறுகிறது. विलिल्ये = மாண்டு போயிற்று. अभ्ययासीत् - ஓடிப்போய் விட்டான்.

* हेतिप्रतापः अनिभृतं शुभं दिश्यात् ।

उद्यन् बिम्बादुदारान्नयनजलहिमं मार्जयन् निर्जरीणां
अज्ञान ध्वान्त मूर्च्छाकर जनिरजनी भञ्जन व्यञ्जिताध्वा ।
न्यक्कुर्वाणो ग्रहाणां स्फुरणमपहरन्नर्चिषः पावकीयाः
चक्रेशार्कप्रकाशो दिशतु दशदिशो व्यश्नुवानं यशो वः ॥

உத்யந் பிம்பாதுதாராந் நயநஜல-
ஹிமம் மார்ஜயந் நிர்ஜரீணாம்
அக்ஞானத்வாந்த மூர்ச்சாகர ஜநிரஜநீ
பஞ்ஜன வ்யஞ்ஜிதாத்வா ।
ந்யக்குர்வாணோ க்ரஹாணாம் ஸ்புரண
மபஹரந்நர்ச்சிஷ: பாவகீயா:
சக்ரேசார்க்கப்ரகாசோ திசது தச-
திசோ வ்யச்நுவாநம் யசோவ: ॥ 20

ஸுதர்சன சூரிய ப்ரகாசம் ஸுதர்சன சூரிய பிம்பத்திலிருந்து உண்டாகிறது. தேவமாதரின் கண்ணீராகிய பனியை நீக்குகிறது. மோஹத்தை உண்டு பண்ணும் ஸம்ஸாரமாகிற ராத்திரியை அழித்து, விவேகத்தை ஏற்படுத்தி நல்லவழியை விளக்கிக் காட்டுகிறது. கிரஹங்களின் ஒளியை மழுங்கச் செய்கிறது. அக்னியின் ஒளியைக் கொள்ளை கொள்கிறது. கோடி சூரிய ப்ரகாசத்தையுடைய இந்த ஸுதர்சன சூரியப்ரகாசம் பத்துத்திசைகளிலும் பரவக்கூடிய புகழைக் கொடுக்கட்டும்.

*सुदर्शनमहाज्वाल कोटिसूर्यसमप्रभ ।
अज्ञानान्धस्य मे देव विष्णोर्मार्गं प्रदर्शय ॥

*பத்துத் திசைகள்:—கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு வடகிழக்கு வடமேற்கு தென்கிழக்கு தென்மேற்கு கீழுலகம் செல்லும் வழி, மேல் நோக்கிச் செல்லும் வழி (अधो भुवनं, ऊर्ध्वं भुवनं)

*चक्रप्रकाशः वः यशो दिशतु ।

वर्गस्य स्वर्गधाम्नामपि दनुजनुषां विग्रहं निग्रहीतुं
दातुं सद्योबलानां श्रियमतिशयिनीं पत्रभङ्गानुवृत्त्या ।
योक्तुं देदीप्यते या युगपदपि पुरो भूतिमय्या प्रकृत्या
सा वो नुद्यादविद्यां द्युतिरमृतरसस्यन्दिनी स्यान्दनाङ्गी ॥

வர்கஸ்ய ஸ்வர்கதாம்நாமபி
தநுஜநுஷாம் விக்ரஹம் நிக்ரஹீதும்
தாதும் ஸத்யோபலாநாம் ஸ்ரீயமதி-
சயிநீம் பத்ரபங்காநுவ்ருத்யா ।
யோக்தும் தேதீப்யதே யா யுகபதபி-
புரோ பூதிமய்யா ப்ரக்ருத்யா
ஸாவோ நுத்யாதவித்யாம்த்யுதி-
ரம்ருதரஸ ஸ்யந்திநீ ஸ்யாந்தநாங்கீ ॥ 21

மோக்ஷ ரஸத்தைப் பெருக்கும் திருவாழியாழ் வானின் (द्युति) பிரகாசமானது. ஒரே சமயத்தில் அஸுரர்களால் தேவர்களுக்கு ஏற்படும் விரோதத்தையும், அஸுர்களையும் ஒழிப்பதற்கும், ஒரே சமயத்தில் தேவலோகப் பெண்களுக்கு மேன்மேலும் ஸம்பத்தைக் கொடுப்பதற்கும் அஸுரர்களின் (ஸேனைகளில் உள்ள வாஹனங்களை அழிப்பதால்) செல்வத்தை அழிப்பதற்கும், ஒரே சமயத்தில் தேவலோகத்தில் ஐசுவர்யம் நிரம்புவதற்கும், அஸுரபட்டணங்களை சாம்பலாக ஆக்குவதற்கும் சக்தியுள்ளதாக விளங்குகின்றது. அப்படிப்பட்ட ஸுதர்சன த்யுதியானது உங்களுடைய அஜ்ஞானத்தை நீக்கட்டும்

स्यन्दनं தேர், அதனுடைய अङ्गं சக்கரம். स्यन्दनस्य अङ्गं स्यन्दनाङ्गं तस्य इयं स्यान्दनाङ्गी । என்பது தத்தித வ்ருத்தி. அஸுரஸமூஹத் வம்ஸமும் தேவஸமூஹ ஜீவனமும் ஒரே சமயத்தில் நிகழ்வதானது 'शतपत्रभेदनन्यायं' என்கிற ஆலங்காரிக நியாயத்தின்படி கொள்ள வேண்டும்.

*सुदर्शन द्युतिः अविद्यां नुद्यात् ।

**दाहं दाहं सपत्नान् समरभुवि लसद्भस्मना वर्त्मना यान्**
**क्रव्यादप्रेतभूताद्यभिलषित पुषा प्रीतकापालिकेन ।**
**कङ्कालैः कालधौतं गिरिमिव कुरुते यः स्वकीर्तेर्विहर्तुं**
**दृष्टिस्सान्दृष्टिकं वः सकलमुपनयत्वायुधाग्रेसरस्य ॥**

*தாஹம் தாம் ஸபத்நான் ஸமரபுவி*
*லஸத் பஸ்மநா வர்த்மநா யாந்*
*க்ரவ்யாத ப்ரேத பூதாத்யபிலஷித*
*புஷா ப்ரீத காபாலிகேந ।*
*கங்காலை: காலதௌதம் கிரிமிவ*
*குருதே யஸ்ஸ்வகீர்தேர்விஹர்த்தும்*
*க்ருஷ்டிஸ் ஸாந்த்ருஷ்டிகம் வ:*
*ஸகலமுபநயத்வாயுதாக்ரேஸரஸ்ய ॥* 22

திருவாழியாழ்வானின் கிரணமானது. போர்க்களத்தில் சத்ருக்களை (அஸுரராக்ஷஸர்களின்) தேஹங்களை நீறுபடக் கொளுத்தி பஸ்மம் படிந்ததும், அவர்களுடைய சரீரத்தின் மாம்ஸங்களால் பூத ப்ரேத பிசாசுகளுக்கு த்ருப்தி அளித்ததும், அழிந்த உடல்களின் வெண்மையான எலும்புகளை மலையாகக் குவித்துத் தன் காதலியான கீர்த்திக்கு (அன்புக்குரிய புகழுக்கு) விளையாட்டு வெள்ளிமலையாகச் செய்ததுமாக விளங்குகிறது. அந்த ஸுதர்சன கிரணம் உங்களுக்கு எல்லா வகையான பலன்களையும் கொண்டு வந்து சேர்க்கட்டும்.

*ஸுதர்சன கிரணமாகிற ஒரு புருஷனுக்கு கீர்த்தி (புகழ்) மனைவி' என்பது உல்லேகனம், எலும்புக் கூட்டங்களை வெள்ளிமலையாகக் கூறியது - உத்ப்ரேக்ஷணம். (யான்) यान् प्रापणे என்கிற தாதுவில் சத்ருப்ரத்யயாந்தமான ரூபம் இது. (यान् यान्तौ यान्तः)

*सः सकलं सान्दृष्टिकं उपनयतु ।

**दग्धानां दानवानां समलितनिचयैः अस्थिभिस्सर्वशुभ्रां
पृथ्वीं कृत्वाऽपि भूयो नवरुधिरजलोत्कौतुकं कौणपेभ्यः ।
कुर्वाणं बाष्पपूरैः कुचतटघुसृण क्षालनैस्तद्वधूनां
पापं पापच्यमानं शमयतु भवतां शस्त्रराजस्य तेजः ॥**

தக்தாநாம் தாநவாநாம் ஸபலித
நிசயை: அஸ்த்திபிஸ்ஸர்வ சுப்ராம்
ப்ருத்வீம் க்ருத்வாபி பூயோ
நவருதிரஜலோத் கௌதுகம் கௌணபேப்ய: ।
குர்வாணம் பாஷ்பபூரை: குசதட-
குஸ்ருண க்ஷாலநைஸ் தத்வதூநாம்
பாபம் பாபச்யமாநம் சமயதுபவதாம்
சஸ்த்ர ராஜஸ்ய தேஜ: ॥ 23

ஸுதர்சந தேஜஸ்ஸாலே அஸுரர்கள் கொளுத்தப்பட்டு, அவர்களுடைய சரீரத்திலுள்ள மாம்ஸங்களும் நன்கு உண்ணப்பட்டு, எலும்பும் நீறுமே எங்கும் நிறைந்திருப்பதைக்கண்டு, 'இனி நமக்கு உணவுகிடைக்க வழி இல்லையே!' என்று பூதப்ரேதாதிகள் ஏங்கி இருந்தன, ஸுதர்சன கிரண ப்ரகாசத்தைக் கண்ட அஸுரமாதர்கள் தங்களுடைய (பர்த்தாக்கள்) கணவர்கள் இறந்தார்கள் என்பதை அறிந்து கண்ணீர்விட்டு அழுதார்கள். அக்கண்ணீர் பெருக்கு அவர்களுடைய மார்பில் இருந்த குங்குமங்களை அழித்து சிவப்பாகப் பெருகிறது. இதைக் கண்ட அந்த பூத ப்ரேதாதிகள் 'நமக்குப் புதிய ரத்தம் கிடைத்துவிட்டது; பருகி மகிழ்வோம்' என்று ஆசைப் படுகின்றன. அப்படிப்பட்ட ஸுதர்சனத்யுதி உங்களுடைய பாபங்களைப் போக்கடிக்கட்டும்,

*अत्यन्तं पच्यमानं पापच्यमानं, பாவங்கள் - கோரமான நரகயாதநாதிகளைத் தரும் பாவங்கள்.

*शस्त्रराजतेजः पापच्यमानं पापं वः शमयतु ।

**मागाम्भोषं ललाटानल इति मदनद्वेषिणा ध्यायतेव**
**स्रष्ट्रा प्रोन्निद्रवासाम्बुजदलपटलप्लोषमुत्पश्यतेव ।**
**वज्राग्निर्मास्मनाशं व्रजदिति चकितेनेव शक्रेण बद्धैः**
**स्तोत्रैरस्त्रेश्वरस्य द्यतु दुरितशतं द्योतमाना द्युतिर्वः ॥**

மாகாம்போஷம் லலாடாநல
இதி மதனத்வேஷிணா த்யாயதேவ
ஸ்ரஷ்ட்ராப்ரோந்நித்ர வாஸாம்-
புஜ தலபடல ப்லோஷமுத்பச்யதேவ।
வஜ்ராக்நிர் மாஸ்ம நாசம் வ்ரஜதிதி
சகிதேநேவ சக்ரேண பத்தை:
ஸ்தோத்ரைரஸ்த்ரேச்வரஸ்ய த்யது
துரிதசதம் த்யோதமாநா த்யுதிர்வ: ।। **24**

தன்னுடைய நெற்றிக்கண் நாசம் அடையாமல் இருக்கவேண்டும் என்று எப்போதும் தியானம் செய்யும் ருத்திரனும், தன்னுடைய இருப்பிடமான தாமரை மலர் எரிந்து போய்விடாமல் இருக்கவேண்டுமே என்று சிந்திக்கும் பிரம்மாவும், தன்னுடைய வஜ்ராயுதத்தின் அக்நி நாசம் அடையாமல் இருக்கவேண்டுமே என்று பயப்படும் இந்திரனும் எப்போதும் ஸுதர்சனத்யுதியை ஸ்தோத்ரம் செய்து கொண்டே இருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஸுதர்சன தேஜஸ் உங்களுடைய நூற்றுக் கணக்கான பாவங்களைப் போக்கட்டும். *இதுவரை ஜ்வாலாவர்ணனம்.

मदनद्वेषी - மன்மதனின் சத்ரு ருத்திரன் स्रष्टा= பிரஹ்மா अम्बुजदलपटलं - தாமரை மலரின் இதழ்களின் ஸமூஹம் अस्त्रेश्वरः = ஸுதர்சநாழ்வான்.

* अस्त्रद्युतिः वः दुरितशतं द्यतु ।

## இது முதல் நேமிவர்ணனம்.

**शस्त्रास्त्रं शात्रवाणां शलभकुलमिव ज्वालया लेलिहाना**
**घोषैः स्वैः क्षोभयन्ती विघटितभगवद्योगनिद्रान् समुद्रान् ।**
**व्यूढोरः प्रौढचार त्रुटित पटुरटत्कीक सक्षुण्ण दैत्या**
**नेमिस्सौदर्शनी वः श्रियमतिशयिनीं दाशतादाशताब्दम् ॥**

*சஸ்த்ராஸ்த்ரம் சாத்ரவாணும்*
*சலபகுலமிவ ஜ்வாலயா லேலிஹாநா*
*கோஷைஸ்ஸ்வை: க்ஷோபயந்தீ விகடித*
*பகவத்யோக நித்ராந் ஸமுத்ராந் ।*
*வ்யூடோர: ப்ரௌடசாரத்ருடித*
*படுரடத்கீக ஸக்ஷுண்ணதைத்யா*
*நேமிஸ் ஸௌதர்சநீவ: ச்ரிய-*
*மதியிநீம் தாசதாதாசதாப்தம் ॥* 25

இது முதல் முப்பத்தெட்டாம் சுலோகம் வரை நேமிவர்ணம். நேமி எனப்படுவது சக்கரத்தின் மறு பக்கம், தனித்தனியாகப் பாகங்களை வர்ணித்தாலும் எல்லாம் திருவாழியின் பெருமைகளேயாகும். 'கை வண்ணம் அங்குக் கண்டேன், கால்வண்ணம் இங்குக் கண்டேன்' என்று விசுவாமித்திரர், தனித்தனியாக் கூறினும் எல்லாம் ராமனுடைய பெருமைகளே யாம் ]

விட்டில் பூச்சிகளின் கூட்டங்களைக் கவர்ந்து அழிப்பதுபோல் அஸுரராக்ஷஸர்களின் அஸ்த்ர சஸ்த்ரங்களை அழிப்பதும் எம்பெருமானின் யோக நித்திரையைத் தம் ஓசையினுல் கலைக்கும் ஸமுத்திரத்தைத் தன்கோஷங்களினுல் கலங்கச் செய்வதும், அஸுரர்களின் உடலை அழிப்பதுமான ஸுதர்சன நேமி நூருண்டுகள் உங்களுக்குச் செல்வம் அளிக்கட்டும்

*மந்த்ரஸித்தமான ஆயுதங்கள் அஸ்த்ரம், அமந்த்ரமானவை சஸ்த்ரம் எனப்படும்.

**• नेमिः श्रियं दाशतात् ।**

धारा चक्रस्य तारागणकणवितति द्योतितद्यु प्रचारा
पारावाराम्बुपूरक्वथनपिशुनितोत्ताल पातालयात्रा ।
गोत्राद्रिस्फोटशब्द प्रकटित वसुधा मण्डली चण्डयाना
पन्थानं वः प्रदिश्यात् प्रशमनकुशला पाप्मनामात्मनीनम् ॥

தாரா சக்ரஸ்ய தாராகண கண
விததி த்யோதி தத்யுப்ரசாரா
பாராவாராம்பு பூர க்வதன
பிசுனிதோத்தால பாதால யாத்ரா ।
கோத்ராத்ரி ஸ்போட சப்த ப்ரகடித
வஸுதா மண்டலீ சண்டயானா
பந்தானம வ: ப்ரதிச்யாத் ப்ரசமந-
குசலா பாப்மநாமாத்மநீநம் ॥ 26

நக்ஷத்திரக் கூட்டங்கள்போல் தன் தீப்பொறிகளினுல் வானத்தை நிறைத்துக் கொண்டு ஆகாச ஸஞ்சாரம் செய்வதும், கடல் நீரையும் வற்றச் செய்து கொண்டு பாதாள லோகத்தில் ஸஞ்சரிப்பதும், குல பர்வதங்களையெல்லாம் பிளந்து கொண்டு பூமண்டலத்தில் திரிகின்றதும், பாவங்களைத் தணியச் செய்ய வல்லதுமான திருவாழியின் நேமியானது உங்களுக்கு ஆத்மஹிதமான வழியை (அர்ச்சிராதி மார்க்கத்தை) அல்லது அதற்கு நிகரான ஸாது மார்க்கத்தையோ கொடுக்கட்டும்.

*'தாராகண கணவிததி த்யோதி தத்யுப்ரசாரா' என்கிற இடத்தில் 'தாராகண கபிச க்ருணி த்யோதி தத்யுப்ரசாரா' - என்றும் சிலர் கூறுவதுண்டு.

(தாலாத் உத்கதா - உத்தாலா) பூட்டு இல்லாமை; தட்டுத் தடங்கல் இல்லாமை என்று பொருள்.

* चक्रधारा आत्मनीनं पन्थानं वः प्रदिश्यात् ।

**यात्रा या त्रातलोका प्रकटितवरुणत्रासमुद्रे समुद्रे**
**सत्त्वासत्त्वासह्योष्मा कृतसगरुदगस्पन्ददाना ददाना ।**
**हानिं हा निन्दितानां जगति परिषदां दानवीनां नवीनां**
**चक्रे चक्रेशनेमिश्शमुपहरतु सा सप्रभावप्रभावः ॥**

*யாத்ரா யா த்ராதலோகா ப்ரகடித*
*வருண த்ராஸ முத்ரே ஸமுத்ரே*
*ஸத்வா ஸத்வா ஸஹோஷ்மா க்ருதஸ-*
*கருதக ஸ்பந்ததாநா ததாநா ।*
*ஹாநிம் ஹா நிந்திதாநாம் ஜகதி*
*பரிஷதாம் தாநவீநாம் நவீநாம்*
*சக்ரே சக்ரேச நேமி: ஸமுபஹரது*
*ஸா ஸப்ரபாவ ப்ரபாவ: ॥* 27

உலகங்களை ரக்ஷிப்பதும், 'தமக்கு என்ன ஆபத்து வந்துவிடுமோ' என்று வருணன் நடுங்குவதை விளக்கிக் கொண்டிருக்கும் கடலில் அடிக்கடி ஸஞ்சரிப்பதும், சேதநாசேதனங்களால் தாங்க முடியாத ப்ரதாபத்தைக் கொண்டதும், தன்னுடைய இறகுகளின் உதவியினால் ஆங்காங்கு பறந்து சென்று ஜனங்களுக்குப் பலவகையாகத் தொல்லைகளைக் கொடுத்துக் கொண்டிருந்த மலைகளின் இறகுகளை அழித்து மலைகளின் ஸஞ்சாரத்தை நிறுத்தி மலைகளை ஜடமாக ஆக்கியதும், அஸுரக் கூட்டங்களை அழித்து மேலும் ஒளி பெற்று விளங்குவதுமான ஸுதர்சன நேமியானது உங்களுக்கு ஸுகத்தை அளிக்கட்டும்.

*இந்திரனின் வஜ்ராயுதமே மலைகளின் இறகுகளை அழித்தன என்பது சரித்திரம். ஆயினும் ஸுதர்சன ஆழ்வானின் சக்தியே வஜ்ராயுதத்தில் அமைந்து இச்செயலைச் செய்ததாகக் கொள்ள வேண்டும்.

दानवानां इमाः - दानव्यः तासां - दानवीनाम् ।

*चक्रप्रभा वः शं उपहरतु ।

**यत्रामित्रान् दिधक्षौ प्रविशति बलिनो धाम निस्सीमधाम्नि**
**ग्रस्तापस्तापशीर्णैः प्रगुणितसिकतो मौक्तिकैश्शौक्तिकेयैः ।**
**राशिर्वारामपारां प्रकटयति पुनर्वैरिदाराश्रुपूरैः**
**वृद्धिं निर्याति निर्यापयतु दुरितान्यस्त्रराजप्रधिर्वः ॥**

*யத்ராமித்ரான் திதக்ஷெள ப்ரவிசதி*
*பலினோ தாம நிஸ்ஸீமதாம்நி*
*க்ரஸ்தாபஸ்தாபசீர்ணை: ப்ரகுணித*
*ஸிகதோ மௌக்திகைச் சௌக்திகேயை: ।*
*ராசிர்வாராமபாராம் ப்ரகடயதி*
*புநர் வைரி தாராச்ரு பூரை:*
*வ்ருத்திம் நிர்யாதி நிர்யா பயது ஸ*
*துரிதாங்யஸ்த்ர ராஜப்ரதிர்வ: ॥* 28

அபரிமிதமான தேஜஸ்ஸையுடைய ஸுதர்சன நேமியானது (ஸுதர்சனுழ்வான்) சத்ருக்களை அழிப்பதற்குக் கடல் வழியாக (மகாபலியின் இடமாகிய) பாதாள லோகத்திற்குச் சென்றபோது கடல் நீர் வற்றிப்போய், ஸுதர்சன வெப்பத்தால் சிதறி விழுந்த முத்துக்கள் எங்கும் மணலில் நிறைந்திருந்தன. அங்கு சென்று அஸுரர்களை அழித்துத் திரும்பிய பிறகு, அஸுரபத்நிகளின் கண்ணீர் பெருக்கால் மீண்டும் கடல் நிரம்பியது. அப்படிப்பட்ட பெருமை வாய்ந்த ஸுதர்சன நேமியானது உங்களுடைய பாவங்களை அழிக்கட்டும்.

**दग्धुं इच्छुः—दिधक्षुः तस्मिन् । अपां समूहः-आपं, ग्रस्तं आपं यस्य सः-ग्रस्तापः । बलिनो धाम-**

*மகாபலி புகுந்த இடம் பாதாள லோகம்.*

**अधो भुवन पाताळ बलिसद्मरसातलम् - इत्यमरः । शुक्तिकाभ्यो जातानि - शौक्तिकेयानि - तैः शौक्तिकेयैः ।**

***अस्त्रराजप्रधिः वः दुरितानि निर्यापयतु ।**

कक्ष्यातौल्येन कद्रूतनयफणमणीन् कल्पदीपस्य युञ्जन्
पातालान्तः प्रपाती निखिलमपि तमः स्वेनधाम्ना निगीर्य ।
दैतेयप्रेयसीनां वमति हृदि हतप्रेयसां भूयसा यः
चक्राग्रीयाग्रदेशो दहतु विलसितं बह्वसावंहसां वः ॥

கக்ஷ்யாதௌல்யேந கத்ரூ தநய
பணமணீந் கல்யதீபஸ்யயுஞ்ஜந்
பாதாலாந்த: ப்ரபாதீ நிகிலமபி தம:
ஸ்வேநதாம்நா நிகீர்ய ।
தைதேய ப்ரேய ஸீநாம் வமதி ஹ்ருதி
ஹத ப்ரேயஸாம் பூயஸா ய:
சக்ராக்ரீயாக்ரதேசோ தஹது
விலஸிதம் பஹ்வஸா வம்ஹஸாம் வ: ॥ 29

திருவாழியாழ்வானின் நேமியானது பாதாள லோகம் சென்று நாகங்களின் படங்களிலுள்ள (நாகப் பாம்புகளின் தலையிலுள்ள) மாணிக்கங்களை, தன்னுடைய தேஜஸ்ஸினால் ஒளி குன்றச் செய்து, அவற்றைப் பகல் விளக்குகளாக ஆக்கியது. தன் ஒளியினால் அங்கிருந்த இருளைக் கவர்ந்து, விதவைகளான அஸுர ஸ்த்ரீகளின் நெஞ்சில் கொண்டு வந்து தேக்கியது. இப்படிப்பட்ட திருவாழியாழ்வான் உங்கள் பாவங்களின் பெருமிடுக்கை எரித்து அழிக்கட்டும்.

चक्राग्रीयस्य अग्रदेश: - சக்ரராஜனுடைய நேமி. कद्रूतनया: - நாகங்கள், स्वेन धाम्ना - தன் ஒளியினாலே, वमति - கக்குகின்றது. अंहसां - பாவங்களினுடைய,

*असौनेमिः अंहसां बाहुल्यं दहतु ।

कृष्णाम्भोदस्य भूषा कृतनयननयव्याहतिर्भार्गवस्य
प्राप्तामावेदयन्ती प्रतिभटसुदृशामुद्भटां बाष्पवृष्टिम् ।
निष्टप्ताष्टापद श्रीस्सममपरचमूगर्जितैरुज्जिहाना
कीर्तिं वः केतकीभिः प्रथयतु सदृशीं चञ्चला चक्रधारा ॥

க்ருஷ்ணாம்போதஸ்ய பூஷா க்ருத
    நயந நய வ்யாஹதிர் பார்க்கவஸ்ய
ப்ராப்தாமாவேதயந்தீ ப்ரதிபட
    ஸுத்ருசாமுத்படாம் பாஷ்பவ்ருஷ்டிம் ।
நிஷ்டப்தாஷ்டாபத ஸ்ரீஸ் ஸம
    மமர சமூ கர்ஜிதைருஜ்ஜிஹாநா
கீர்த்திம் வ: கேதகீபி: ப்ரதயது
    ஸத்ருசீம் சஞ்சலா சக்ரதாரா ॥ 30

எம்பெருமானாகிற கருமேகத்திற்கு ஆபரணமாகவும், சுக்கிரனின் கண்ணை அழித்ததும், அஸுரராக்ஷஸஸ்த்ரீகளிடமிருந்து கண்ணீராகிய மழையைப் பெருகச் செய்ததும், நன்கு காய்ச்சப்பட்ட பொன் போன்று பளபளப்பாக விளங்குவதும், தேவ ஸைந்யங்களின் விஜய முழக்கங்களோடுபுறப்படுகின்றதும், மின்னல் போன்று சஞ்சலமாயும் இருக்கிற ஸுதர்சந நேமியானது உங்களுக்குத் தாழம்பூ போன்ற புகழைச் செழிப்பாக வளரச்செய்யட்டும்.

கருமேகத்தில் மின்னல் மின்னுவதுபோல், பகவானின் கருமேனியில் ஸுதர்சனாழ்வான் ப்ரகாசிக்கிறார். மின்னல் மழையின் வருகையை அறிவிக்கும்; ஸுதர்சநர் ஸுரராக்ஷஸ்த்ரீகளின் கண்ணீர் பெருக்கை அறிவிக்கிறார். மேககர்ஜனைபோல் தேவஸைந்யமுழக்கம்; மின்னல் மின்னுவதால் தாழைபூக்கும். தாழை போன்றது புகழ். भार्गव: - சுக்கிரன் चञ्चला - மின்னல் केतकी – தாழம்பூ.

* चक्रधारा कीर्तिं प्रथयतु ।

वप्राणां भेदनीयः परिणतिमखिल श्लाघनीयां दधानः
क्षुण्णां नक्षत्रमालां दिशिदिशिविकिरन् विद्युता तुल्यकक्ष्यः ।
निर्याणेनोत्कटेन प्रकटयति नवं दानवारि प्रकर्षं
चक्राधीशस्य भद्रो वशयतु भवतां स प्रधिश्चित्तवृत्तिम् ॥

வப்ராணாம் பேதநீய: பரிணதி
மகில ச்லாகநீயாம் ததாந:
க்ஷுண்ணாம் நக்ஷத்ரமாலாம் திசி
திசி விகிரந் வித்யுதா துல்யகக்ஷ்ய: |
நிர்யாணேநோத்கடேந ப்ரகடயதி
நவம் தாநவாரி ப்ரகர்ஷம்
சக்ராதீசஸ்ய பத்ரோ வசயது பவதாம்
ஸப்ரதிச்சித்தவ்ருத்திம் || 31

ஸுதர்சநநேமி 'பத்ரம்' என்னும் யானைபோன்றது. அந்த யானை தந்தங்களால் கரைகளை இடித்துத் தள்ளும்; ஸுதர்சனமும் சத்ருக்களின் பட்டணங்களிலுள்ள ப்ராகாரங்களைப் பிளக்கிறது தனக்கு அணிவிக்கப்பட்ட இருபத்தேழு முத்துக்களைக் கொண்ட நக்ஷத்திரமாலையை யானை கீழே வீழ்த்திப் பொடியாக்கி இறைத்து விடும்; ஸுதர்சனமும் மின்னல் போல் ஒளிமிக்கு இருக்கிறது. அந்த யானை (அபாங்க வழியாக) மதஜலத்தைப் பெருக்கும்; ஸுதர்சனம் ஆடம்பரமாக வெளியில் புறப்படும்போதே எம் பெருமானின் பெருமையை வெளிப்படுத்திக் கொண்டு புறப்படும். அனைவாலும் கொண்டாடத்தக்க மங்களகரமான அந்த ஸுதர்சந நேமியானது உங்களுடைய மனத்தை (இஷ்டப்படி திரியாமல்) அடக்கியாளட்டும்.

*கஜஜாதியில் (யானைசாதியில்) பத்ரம் என்பது ஒரு ஜாதி.

* चक्रप्रधिः भवतां चित्तवृत्तिं वशयतु ।

नाकौक श्शत्रु जत्रु त्रुटन विघटित स्कन्ध नीरन्ध्र निर्यत्
नव्यक्रव्यास्रहव्य ग्रसन रसलसज्ज्वाल जिह्वालवह्निम् ।
यं दृष्ट्वा सांयुगीनं पुनरपि विदधत्याशिषो वीर्यवृद्ध्यै
गीर्वाणा निर्वृणाना वितरतु स जयं विष्णुहेतिप्रधिर्वः ॥

நாகௌகச்சத்ரு ஜத்ரு த்ருடந
　　விகடித ஸ்கந்த நீரந்த்ரநிர்யத்
நவ்யக்ரவ்யாஸ்ரஹவ்ய க்ரஸந
　　ரஸ லஸஜ்ஜ்வால ஜிஹ்வால வஹ்நிம் ।
யம் த்ருஷ்ட்வா ஸாம்யுகீநம புநரபி
　　விததத்யாசிஷோவீர்ய வ்ருத்த்யை
கீர்வாணா நிர்வ்ருணாநா விதரது ஸ
　　ஜயம் விஷ்ணுஹேதி ப்ரதிர்வ: ॥ 32

தேவ சத்ருக்களான அஸுரராக்ஷஸர்களின் தோள்பட்டைகளை அறுத்து வீழ்த்துவதால், விரிந்த தோள்களிலிருந்து பெருகும் மாமிஸ ரத்தங்களைப் புதிய ஹவிஸ்ஸாகக் பெறுவதில் ஆசையோடு ஜ்வாலையாகிற நாக்கை நீட்டிக் கொண்டு இருக்கும் அக்நியை உடையதும், யுத்தம் செய்வதில் வல்லதும் 'மேன் மேலும் வீர்யம் வளர வேண்டும்' என்று தேவர்களால் மங்களாசாஸனம் செய்யப்படுவதுமான ஸுதர்சன நேமியானது எப்போதும் ஜயப்ரதமாக இருந்துகொண்டு உங்களுக்கு வெற்றியைக் கொடுக்கட்டும்.

क्रव्यम् - மாம்ஸம், अस्त्र - ரத்தம், लसत्-लास्य - நர்த்தநம், संयुगं - போர் அதில் ஸமர்த்தன், सांयुगीनः । जत्रु - தோள் பட்டை, नाकः ओकः येषां ते—नाकौकसः ।

*அக்நிக்கு ஜ்வாலையே நாக்கு, गीर्वाणाः - தேவர்கள் आशिषः - ஆசீர்வாதம்.

* वः विष्णुहेतिप्रधिः विजयं वितरतु ।

**धन्वाध्वन्यस्य धारासलिलमिव धनं दुर्गतस्येव दृष्टिः**
**जात्यन्धस्येव पङ्गोः पदविहृतिरिव प्रीणनी प्रेमभाजाम् ।**
**पत्युर्मायाः क्रियायां प्रकटपरिणतिर्विश्वरक्षाक्षमायां**
**मायामायामिनीं वस्त्रुटयतु महती नेमिरस्त्रेश्वरस्य ॥**

*தந்வாத்வந்யஸ்ய தாராஸலில மிவ*
*தநம் துர்கதஸ்யேவ த்ருஷ்டி:*
*ஜாத்யந்தஸ்யேவ பங்கோ பதவிஹ்ருதி-*
*ரிவ ப்ரீணநீ ப்ரேமபாஜாம் ।*
*பத்யுர் மாயா: க்ரியாயாம் ப்ரகட*
*பரிணதிர் விச்வ ரக்ஷாக்ஷமாயாம்*
*மாயாமாயாமிநீம் வஸ் த்ருடயது*
*மஹதீ நேமிரஸ்த்ரேச்வரஸ்ய ॥* 33

பாலைவனத்தில் நடந்து சென்று பெருந்தாகம் கொண்டவனுக்கு ஓடும் தண்ணீர் கிடைத்தது போலவும், தரித்திரனுக்கு (ஏழைகளுக்கு) பணம் கிடைத்தது போலவும், குருடனுக்குப் பார்வை கிடைத்தது போலவும், நொண்டிக்கு காலால் நடந்து விளையாடும் நிலை கிடைத்தது போலவும், பக்தர்களுக்கு ப்ரீதியை உண்டு பண்ணக் கூடியதும் ஸ்ரீய: பதியான எம்பெருமானின் இவ்வுலகங்களை ரக்ஷிக்கும சமயத்தில் எம்பெருமானுகவே பரிணமிப்பதுமான (மாறுவதுமான) ஸுதர்சன நேமியானது உங்களுடைய அவிச்சிந்நமான (தொடர்ச்சியாகவுள்ள) அவித்யையை நீக்கட்டும்.

**धन्वाध्वन्यः**-பாலைவனத்தில் நடப்பவன், **दुर्गतः** (ஏழை) தரித்திரன், **जात्यन्धः** - பிறவிக் குருடன், **पङ्गुः** நொண்டி **माया** - அவித்யை **मायाः पतिः - तस्य ।** **मा** - லக்ஷ்மீ **तस्याः पतिः - तस्य** ஸ்ரீய: பதியான எம்பெருமானுடைய **त्रुटयतु** - விச்சிந்நமாக ஆக்கட்டும்.

* अस्त्रनेमिः मायां त्रुटयतु ।

त्राणं या विष्टपानां वितरति च यया कल्प्यते कामपूर्तिः
न स्थातुं यत्पुरस्तात् प्रभवति कलयाऽप्योषधीनामधीशः ।
उन्मेषो यति यस्या न समयनियतिं सा श्रियं वः प्रदेयात्
न्यक्कृत्य द्योतमाना त्रिपुरहरदृशं नेमिरस्त्रेश्वरस्य ॥

*த்ராணம் யா விஷ்டபாநாம் விதரதி ச*
*யயா கல்ப்யதே காமபூர்த்தி:*
*ந ஸ்தாதும் யத்புரஸ்தாத் ப்ரவதி*
*கலயாப்யோஷதீநாமதீச: |*
*உந்மேஷோ யாதியஸ்யா, ந ஸமயநியதிம்*
*ஸா ச்ரியம் வ: ப்ரதேயாத்*
*ந்யக்க்ருத்ய த்யோதமாநா த்ரிபுரஹர*
*த்ருசம் நேமிரஸ்த்ரேச்வரஸ்ய ||* **34**

1 சிவன் ஸம்ஹாரத்தைச் செய்கிறவனுதலால் அவனுடைய நெற்றிக்கண் உலகங்களுக்கு நாசத்தை அளிக்கும்; ஸுதர்சநநேமியானது லோக ரக்ஷணத்தில் ஊற்றமுடையதாக இருக்கும். 2. தவ நிலையில் இருக்கும் சிவனுடைய நெற்றிக் கண்ணுல் (காமன்) மன்மதன் எரிக்கப்பட்டு சரீரம இழந்தான். 3. தக்ஷ முனிவனின் சாபத்திஞல் கலைகள் குறைந்து ஒளி குன்றிய சந்திரன் முக்கண்ணனின் கண் எதிரில் காலமாத்ரஞக நின்றுன; அந்த சந்திரன் கலாமாத்திரஞகவும் சக்ரநேமியின் எதிரில் நிற்க இயலாதவஞன். 4. முக்கண்ணனின் நெற்றிக்கண் (ஏதோ ஒரு கால விசேஷத்தில்) ஸம்ஹார காலத்தில் திறந்துப் பிரகாசமாயிற்று; சக்ரநேமியின் பிரகாசம் எல்லாக் காலத்திலும் உண்டு.

இப்படிப் பலவகைகளாலே முக்கண்ணனின் நெற்றிக் கண்ணை வென்று விளங்கும் சக்ரநேமியானது உங்களுக்குச் செல்வத்தைக் கொடுக்கும்.

*ओषधीनां अधीशः - कुमुदिनीविटः—சந்திரன்.

कामं - कामितफलं விரும்பிய பலன்.

* नेमिः वः श्रियं प्रदेयात् ।

नक्षत्रक्षोदभूतिप्रकरविकिरण श्वेतिताशावकाशा
जीर्णैः पर्णैरिवद्यां जलधरपटलैश्चूर्णितैरूर्णुवाना ।
आजावाजानवाजानतरिपुजनतारण्यमावर्तमाना
नेमिर्वात्येव चाक्री प्रणुदतु भवतां संहृतं पापतूलम् ॥

நக்ஷத்ரக்ஷோத பூதி ப்ரகர
விகிரண: ச்வேதிதாசாவாகாசா
ஜீர்ணை: பர்ணைரிவத்யாம் ஜலதர
படலைச்சூர்ணிதைரூர்ணுவாநா ।
ஆஜாவாஜாந வாஜா நதரிபுஜநதா-
ரண்ய மாவர்த்தமாநா
நேமிர்வாத்யேவ சாக்ரீ ப்ரணுதது
பவதாம் ஸம்ஹ்ருதம் பாபதூலம் ॥ 35

நக்ஷத்திரக் கூட்டங்களாகிற சாம்பலை நான்குபக்கமும் வீசி திகந்தங்களை எல்லாம் வெளுக்கச் செய்ததும், மேகக் கூட்டங்களைப் பொடியாக்கி ஆகாசத்தை மறைத்ததும், அஸுரராக்ஷஸர்களாகிற அரண்யத்தில் பெருவேகத்தோடு சுழல்வதும், பெருங்காற்று போன்றதுமான சக்ரநேமியானது உங்களுடைய பாபமாகிற பஞ்சுகளை உருவழிக்கட்டும்,

1. காற்று, நிலத்திலுள்ள நீறுகளை வாரியிறைத்துத் திசைகளை வெளுக்கடிக்கும்; சக்ர நேமியும் நக்ஷத்திரங்களைப் பொடியாக்கி வீசி திகந்தங்களை வெளுக்கச் செய்யும். 2. காற்று, பழுத்து விழுந்த இலைகளை எல்லாம் வீசி எறிந்து வானத்தை மறைக்கும்; நேமியும் மேகங்களைப் பொடியாக்கி சிதிலமாக்கி ஆகாசத்தை மறைக்கச் செய்யும். 3. காற்று, பெருங்காடுகளை செல்லும; நேமியும் சத்ருக்களாகிற அரண்யத்தை

நோக்கிச் சுழன்று நோக்கிச் சுழலும். 4. காற்று, பஞ்சுகளைப் பறக்கடிக்கும், சக்ரநேமியும் பாபராசிகளைப் பறக்கடிக்கும்.

वातानां समूहः - वात्या । चक्रस्य इयं चाक्री । आजिः யுத்தம்.

* नेमिः भवतां; पापतूलं प्रणुदतु ।

क्षिप्त्वा नेपथ्यशाटीमिव जलदघटां जिष्णुकोदण्डचित्रां
तारापुञ्जं प्रसूनाञ्जलिमिव विपुले व्योमरङ्गे विकीर्य ।
निर्वेदग्लानिचिन्ता प्रभृतिपरवशानन्तरा दानवेन्द्रान्
नृत्यन्नानालयाढ्यं नट इव तनुतां शर्मचक्रप्रधिर्वः ॥

க்ஷிப்த்வா நேபத்ய சாடீமிவ ஜலதகடாம்
ஜிஷ்ணு கோதண்டசித்ராம்
தாராபுஞ்ஜம் ப்ரஸூநாஞ்ஜலிமிவ
விபுலே வ்யோம ரங்கே விகீர்ய ।
நிர்வேத க்லாநி சிந்தா ப்ரப்ருதி
பரவசாநந்தரா தாநவேந்த்ராந்
ந்ருத்யந் நாநாலயாட்யம் நட இவ
தநுதாம் சர்ம சக்ரப்ரதிர்வ: ॥ 36

நடன அரங்கில் நாட்டியமாடும் நாட்டியக்காரனைப் போன்றது சக்ரநேமி.

1. நாட்டியமாடுகிறவன் நடன அரங்கில் புகும்போது பல வண்ணங்களைக் கொண்ட திரையைத் தள்ளிவிட்டு புஷ்பாஞ்சலி செய்வான் (அரங்கில் மலர்களை இறைப்பான்); சக்ரநேமியும் ஆகாசத்தில் புகும்போது. வானவில்லால் பல நிறங்களோடு காட்சியளிக்கும் மேகமண்டலத்தை நீக்கிக் கொண்டு நக்ஷத்திரக் கூட்டங்களை வாரி இறைக்கும்.

2. நடன் நாட்டிய மாடும்போது அபிநயத்தினுல் ஸபையில் சிலருக்கு துக்கம், சிலருககு முகவாட்டம். சிலருக்கு விசாரம் முதலியவற்றை ஏற்படுத்துவான்; சக்ரநேமியும் அஸுர ராக்ஷஸர்களிடையே துக்கம் வாட்டம் விசாரம் முதலியவற்றை ஏற்படுத்திக் கொண்டு பலவகை லயங்களோடு கூத்தாடுகிறது அப்படிப்பட்ட சக்ரநேமியானது உங்களுக்கு ஸுகத்தை உண்டுபண்ணட்டும்

* गीतिवाद्य पादादिन्यासानां क्रियाकालयोः साम्यं - लयः । என்பது பரதசாஸ்த்ரம். तारापुञ्जं நக்ஷத்திரக்கூட்டம். जिष्णुकोदण्ड - இந்திரதனுஸ் (வானவில்). चक्रप्रधिः - சக்ர நேமி.

* चक्रप्रधिः वः शर्म तनुताम् ।

दौर्गत्य प्रौढताप प्रतिभट विभवा वित्तधारास्सृजन्ती
गर्जन्ती चीत्क्रियाभिर्ज्वलदनल शिखोद्दाम सौदामनीका ।
अव्यात्क्रव्याद्वधूटी नयनजलभरैर्दिक्षु नव्याननाव्यान्
पुष्यन्ती सिन्धुपूरान् रथचरणपतेर्नेमिकादम्बिनी वः ॥

தெளர்கத்ய ப்ரௌடதாப ப்ரதிபட-
விபவா வித்ததாராஸ் ஸ்ருஜந்தீ
கர்ஜந்தீ சீத்க்ரியாபிர் ஜ்வலதநல
சிகோத்தாம ஸௌதாமநீகா !
அவ்யாத் க்ரவ்யாத்வதூடீ நயன
ஜலபரைர் திக்ஷு நவ்யாந நாவ்யாந்
புஷ்யந்தீஸிந்துபூராந் ரதசரண-
பதேர் நேமிகாதம்பிநீ வ: ॥ 37

ஸுதர்சநநேமியை மேகமாலையாக உருவகித்துக் கூறும் சுலோகம் இது

1. மேகமாலை, தாங்கமுடியாத தாபத்தையும் தணிக்கக்கூடிய (மழையை) வர்ஷதாரைகளைக்

கொடுக்கும்: ஏழ்மையினால் ஏற்படும் அளவற்ற துக்கத்தைப் போக்கடிக்கும் வகையில் ஸுதர்சனநேமி தனவர்ஷத்தை (செல்வவர்ஷத்தை)க் கொடுக்கும்.

2. மேகங்கள் இடி இடித்துக்கொண்டு (கர்ஜித்துக் கொண்டு)க் கிளம்பும்; பளபளப்பானமின்னல்களைக் கொண்டிக்கும்; சக்ரநேமியும் கர்ஜித்துக் கொண்டு கிளர்ந்து எழும், அக்நி ஜ்வாலை மின்னும்.

3 மேகங்கள் மழைபொழிந்து நதிகளில் பிரவாஹத்தை (வெள்ளத்தை) ஏற்படுத்தும்; சக்ரநேமியும் அஸுரராக்ஷஸபத்னிகளின் கண்களில் கண்ணீர் பிரவாஹத்தை ஏற்படுத்தும். இப்படிப்பட்ட ஸுதர்சநநேமியானது உங்களைக் காப்பற்றட்டும்.

*वित्तधारा - செல்வ மழை सौदामनीका - மின்னல்,

क्रव्यं (मांसं) अत्तीति क्रव्यादः, असुराः तेषां वधूट्यः- स्त्रियः । नाथा नार्यो - नाथ्यः, न नाथ्याः - अनाथ्याः । ஸிந்து - கடல், நதி.

* नेमिकादम्बिनो वः अव्यात् ।

**सन्दोहं दानवानामजसमजमिवाऽऽलभ्य जाज्वल्यमाने**
**वह्नावह्नाय जुह्वत्रिदशपरिषदे स्वस्वभागप्रदायी ।**
**स्तोत्रैर्ब्रह्मादिगीतैर्मुखरपरिसरं श्लाघ्यशस्त्रप्रयोगं**
**प्राप्तस्संग्रामसत्रं प्रधिर सुररिपोः प्रार्थितं प्रस्नुतां वः ॥**

ஸந்தோஹம் தாநவாநா ((ஜஸமஜமி-
வாऽऽலப்ய ஜாஜ்வல்ய மாநே
வஹ்நாவஹ்நாய ஜுஹ்வத் த்ரிதச
பரிஷதே ஸ்வஸ்வ பாகப்ரதாயீ ।
ஸ்தோத்ரைர் ப்ரஹ்மாதிகீதைர்
முகரபரிஸரம் ச்லாக்யசஸ்த்ர ப்ரயோகம்
ப்ராப்தஸ்ஸங்க்ராம ஸத்ரம் ப்ரதிர
ஸுரரிபோ: ப்ரார்த்திதம் ப்ரஸ்நுதாம் வ ॥ 38

ஸுதர்சந நேமியை (யாகம் செய்யும் யஜமானனாக) யஜ்வாவாக உருவகப்படுத்துகிறது இந்த சுலோகம்.

1. யஜமானன், 'பசூந் ஆலபேத' என்கிற விதிக்குச்சேர ஆடுகளை வெட்டி யாகாக்நியில் ஆஹுதியைச் செய்கிறான்; ஸுதர்சந நேமியானது அஸுரவர்க்கங்களை வெட்டி வீழ்த்தி யுத்தாக்நியில் இடுகிறது.

2. பிரம்மா, உத்காதா முதலானவர்கள் உச்சரிக்கும் ஸ்தோத்திரம் (மந்திர) ஒலிகள் நிறைந்த இடம் யாகபூமி; பிரம்மா முதலான தேவர்களால் துதிக்கப்படும் ஸ்தோத்திர ஒலிகள் நிறைந்தது யுத்தபூமி.

3. சாஸ்திரரூபமான மந்த்ரவாக்யமும், சஸ்த்ரரூபமான வேதவாக்கியமும் கேட்கப்படும் இடம் யாகபூமி; கத்தி முதலான சஸ்திரங்களின் சப்தங்கள் கேட்கும் இடம் யுத்த பூமி. இவ்வாறு அஸுரராக்ஷஸர்களை வீழ்த்துவதும், தேவஸமூஹம் விரும்புவதைக் கொடுக்கின்றதுமான திருவாழியின் நேமியானது உங்களுடைய அபேக்ஷித்தைப் பெருக்கட்டும்.

* गानविशिष्टमन्त्रोच्चारणं - स्तोत्रम् । गानरहितं एव श्रुतिरूपोच्चारणं - शस्त्रम् ।

* चक्रप्रधिः वः प्रार्थितं प्रस्तुताम् ।

उत्पातालातकल्पान्यसुरपरिषदामाहवे प्रार्थिनीनां
अध्वानध्वान्तबोध क्षपणचणतमः क्षेपणोपमानि ।
त्रैलोक्यागार भारोद्वहन सहमणिस्तम्भ संपत्सखानि
त्रायन्तामन्तिमायां विपदि सपदि वोऽराणि सौदर्शनानि ॥

உத்பாதாலாத கல்பாந்யஸுர
பரிஷதா மாஹவ ப்ரார்த்திநீநாம்
அத்வாந த்வாவபோத க்ஷபண
சணதம: க்ஷேபதீபோபமாநி ।

த்ரைலோக்யாகார பாரோத்வஹந
ஸஹமணிஸ்தம்ப ஸம்பத்ஸகாநி
த்ராயந்தாமந்திமாயாம் விபதி
ஸபதிவோ ஸராணி ஸௌதர்சநாநி || 39

இது முதல் பன்னிரண்டு சுலோகங்கள் (ஐம்பதாம் சுலோகம் வரை அரவர்ணனம்). யுத்தத்தை விரும்புகின்ற அஸுரக்கூட்டங்களுக்கு ஏற்படப்போகும் விநாசத்தை முன்கூட்டியே தோற்றுவிக்கும் ஆகாசக் கொள்ளிக்கட்டை போன்றவைகளாயும், நல்லவழி தீயவழிகளை தெரிந்து கொள்வதைக் கெடுக்கும் இருளை நீக்குவதில் தீவட்டிகள் போன்றவைகளாயும், மூவுலகமாகிற மாளிகையின் சுமைகளைத் தாங்கும் ரத்ன ஸ்தம்பம் போன்றவைகளாயும் இருக்கிற திருவாழியாழ்வானின் அரங்கள் உங்களைக் கடைசிகால ஆபத்திலிருந்து காப்பாற்றட்டும்.

திருவாழியாழ்வானின் அவயவங்களில் அரம் என்பதும் ஒன்று; குடைகளில் கம்பிகள் போலே சக்கரத்தில் விளங்கும் பாகம். அரங்களை வர்ணித்தாலும் அது திருவாழியாழ்வானையே துதித்ததாக ஆகும்.

உத்பாதம்:-திடீரென்று தோன்றும் அசுபநிமித்தங்கள். அந்திமகாலம்: - தொண்டையடைப்பு ஏற்பட்டுத்துவளும் காலம். (ப்ராண ப்ரயாண ஸமயம்).

* अराणि वः अन्तिम विपदि त्रायन्ताम् ।

ज्वालाजाल प्रबालस्तबकित शिरसो नाभिमाबालयन्त्यः
सिक्तारब्धाम्बुपूरै शकलितवपुषां शात्रवानीकिनीनाम् ।
चक्राक्रीड प्ररूढा भुजगशयभुजोपघ्ननिघ्नप्रचाराः
पुष्यन्त्यः कीर्तिपुष्पाण्यरकनकलताः प्रीतये वः प्रथन्ताम् ॥

ஜ்வாலாஜால ப்ரவாள ஸ்தபகித
சிரஸோ நாபிமாவால யந்த்ய:
ஸிக்தா ரக்தாம்பு பூரைச் சகலித
வபுஷாம் சாத்ரவாநீகிநீநாம் |
சக்ராக்ரீட ப்ரரூடா புஜகசய
புஜோபக்ந நிக்ந ப்ரசாரா:
புஷ்யந்த்ய: கீர்த்தி புஷ்பாண்யர-
கநகலதா: ப்ரீதயே வ: ப்ரதந்தாம் || 40

திருவாழியாகிய தோட்டத்தில் முளைத்தவையாய் நாபி என்னும் அவயவத்தைப் பாத்திகளாகக் கொண்டு, சத்ரு ஸேனைகளின் ரத்தமாகிற ஜலத்தினுல் நனைக்கப்பட்டு, அரவணைமேல் பள்ளி கொண்டிருக்கும் பெரிய பெருமாளின் புஜத்தையே (திருக்கையையே) தான் வளர்வதற்குக் கொழுகொம்பாக நாடிச் செல்வதுமாயும், ஜ்வாலைகளாகிற கொழுந்துகளைக் கொத்தாக நுனியில் கொண்டும், கீர்த்தியாகிற புஷ்பங்களைக் கொண்டும் விளங்கும் அரங்களாகிற பொற் கொடிகள் (கநகலதைகள்) உங்களுடைய ப்ரீதி அதிகமாவதற்காக வளர்ந்து வ்ருத்தி அடையட்டும்.

आवालं - आलालं - செடிகளுக்கு தண்ணீர் பாய்வதற்காகக் கட்டும் பாத்தி.

अनीकिनी - अनीकं - ஸேனை, आक्रीड - உத்யானம், कीर्ति - पुष्पाणि – சத்ரு த்வம்ஸத்திலுல் ஏற்படும் யசோராசிகளாகிற புஷ்பங்கள்.

*கோல் தேடியோடும் கொழுந்ததே போன்றதே. அரக்கொடிகள், இவையும் அரங்கனின் புஜமாகிற கொழு கொம்பைத் தேடிச் செல்கின்றன. சக்ர அரங்கள் கநகலதைகளாக இதில் கூறப்படுகின்றன.

* अरकनकलताः प्रीतये वः प्रथन्ताम् ।

ज्वालाजालाभिघप्तं क्षितिवलयमिवाऽऽबिभ्रतीनेमिचक्रं
नागेन्द्रस्येव नाभेः फणपरिषदिव प्रौढरत्नप्रकाशा ।
दत्तां वो दिव्यहेतेर्मतिमरविततिः ख्यातसाहस्रसङ्ख्या
सङ्ख्यावत्सङ्कसिद्ध श्रवणहरगुणस्यन्दि सन्दर्भ गर्भाम् ॥

ஜ்வாலா ஜாலாப்தி முத்ரம் க்ஷிதி-
வலயமிவா஽஽பிப்ரதீநேமிசக்ரம்
நாகேந்த்ரஸ்யேவ நாபே: பண-
பரிஷதிவ ப்ரௌடரத்ன ப்ரகாசா ।
தத்தாம் வோ திவ்ய ஹேதேர்
மதிமரவிததி: க்யாத ஸாஹஸ்ர ஸங்க்யா
ஸங்க்யாவத் ஸங்கசித்த ச்ரவண
ஹரகுண ஸ்யந்தி ஸந்தர்ப்ப கர்ப்பாம் ॥ 41

சக்கரத்தின் அரங்களும் ஆதிசேஷனின் படங்களும் ஒன்று.

1. ஆதிசேஷனின் பணங்கள் பூமண்டலத்தைத் தாங்கிக் கொண்டிருக்கும். அரங்களும் சக்கரத்தின் நேமியைத் தாங்கி நிற்கும். 2. பூமண்டலம் ஸமுத்திரத்தினுல் சூழப்பட்டு இருக்கும்; நேமியும் ஜ்வாலையால் சூழப்பட்டிருக்கும். 3. சுருண்டிருக்கும் பாம்பின் உடம்பிலிருந்து பல படங்கள் (பரவி) பரந்து இருக்கும்; ஸுதர்சன நாபியிலிருந்து பல அரங்கள் பிணைத்திருக்கும் 4. (பாம்புப் பணங்களில் ரத்தினங்கள் இருக்குமாதலால்) பணங்கள் (படங்கள்) ரத்தின ப்ரகாசமாக இருக்கும்; அரங்களும் ரத்தின ப்ரகாசங்கள் நிறைந்தவையாக இருக்கும்.

இப்படிப்பட்ட அரங்கள் உங்களுக்கு, பண்டிதர்களின் நெஞ்சையும் காதுகளையும் கவரக் கூடிய சொற்களைச் சொல்லும்படியான வாக்விலாஸங்களைப் பெருக்கும் புத்தியை அளிக்கட்டும்.

•ஆதிசேஷன்–'ஆயிரம் பைந்தலைய அனந்தன்' सहस्रपेयवाहनं - திருவாழி. नागेन्द्रः - திருவனந்தாழ்வான்.

* अरविततिः वः वाणीविलासं दत्ताम् ।

ब्रह्मेशोपक्रमाणां बहुविधविमतक्षोदसम्मोदितानां
सेवायै देवतानां दनुजकुलरिपोः पिण्डिकाद्यङ्गभाजाम् ।
तत्तद्धामान्तसीमा विभजनविधये मानदण्डायमाना
भूमानं भूयसा वो दिशतु दशशती भास्वराणामराणाम् ॥

*ப்ரஹ்மேசோபக்ரமாணும் பஹுவித-*
*விமத க்ஷோத ஸம்மோதிதாநாம்*
*ஸேவாயை தேவதாநாம் தநுஜ-*
*குலரிபோ: பிண்டிகாத்யங்க பாஜாம் |*
*தத்தத் தாமாந்தஸீமா விபஜந*
*விதயே மாநதண்டாயமாநா*
*பூமாநம் பூயஸாவோ திசது*
*தசசதீ பாஸ்வராணுமராணும் ||* **42**

தங்கள் தங்களுடைய சத்ருக்களைத் திருவாழி வாழ்வான் பங்கப்படுத்தி (அழித்து) அருளினுர் என்கிற காரணத்திஞல் (க்ருதஜ்ஞதையோடு) நன்றி தெரிவிக்கும் வகையில் அத்திருவாழியாழ்வானை எப்போதும் ஸ்தோத்ரம் பண்ணிக் கொண்டு ஸேவிப்பதற்காக பிரம்மாசிவன் இந்திரன் முதலிய தேவர்கள் சக்கரத்தின் நாபி முதலிய அவயவங்களை வந்து அடைந்திருக்கிறுர்கள். அவரவர்களுக்கு உரிய இடங்களை (உலகத்தை) அளந்து கொடுக்கும் அளவு கோல்களோ என்னும்படி இருக்கும் அரங்கள் உங்களுக்கு (அதிசயமான) வியக்கத்தக்க பெருமையை அளிக்கட்டும்.

*சக்கரத்தாழ்வாரின் நாபி முதலான அவயங்களில் பிரம்மேசாதி தேவர்களை ஆவாஹநம் பண்ணி இருப்பதாக பகவத் சாஸ்த்ரம் கூறுகிறது.

भूमानं भूयसा दिशतु - महिमानं पुनः पुनः ददातु ।

अराणांसहस्रं-ஆயிரம் அரங்கள்.

* अराणि वः भूयसा भूमानं दिशतु ।

**ज्वालाकल्लोलमालानिबिडपरिसरां नेमिवेलां दधाने**
**पूर्वेणाक्रान्तमध्ये भुवनमयहविर्भोजिना पूरुषेण ।**
**प्रस्फूर्जत्प्राज्यरत्ने रथपदजलधौ वेधमानैः स्फुलिङ्गैः**
**भद्रं वो विद्रुमाणां श्रियमरविततिर्विस्तृणाना विधत्ताम् ॥**

ஜ்வாலா கல்லோலமாலா நிபிட
பரிஸராம் நேமிவேலாம் ததானே
பூர்வேணுக்ராந்த மத்யே புவநமய
ஹவிர்போஜிநா பூருஷேண ।
ப்ரஸ்பூர்ஜத் ப்ராஜ்ய ரத்நே ரதபத-
ஜலதா வேதமாநை: ஸ்புலிங்கை:
பத்ரம் வோ வித்ருமாணும் ஸ்ரீயமர-
விததிர் விஸ்த்ருணுநா விதத்தாம் ॥ 43

ஸ்ரீ ஸுதர்சநாழ்வான் ஒரு ஸமுத்ரமாக ரூபிக்கப் படுகிறுர்.

1. ஸமுத்ரம் அலைகள் மோதுகின்ற கரையை யுடையதாக இருக்கும்; ஸ்ரீஸுதர்சநாழ்வான், ஜ்வாலை களாகிற அலைகள் மோதும் நேமியாகிற கரையை யுடையவர்.

2. ஜலரூபமான ஹவிஸ்ஸைப் புஜிக்கின்ற பூர்வ புருஷனை (தன் நடுவில்) கொண்டிருக்கும் ஸமுத்ரம்; உலகங்களை எல்லாம் புஜிக்கும் ஸுதர்சன புருஷன் வீற்றிருக்கும் மத்தியப் பிரதேசத்தைக் கொண்டிருக் கும் சக்கரம். 3. கடலில் பவழங்கள் இருக்கும்; பவழம்போன்ற தீப்பொறிகளையுடைய அரங்களைக்

கொண்டிருக்கும் திருவாழி; அரங்களே பவழ ஜ்வாலையை ஒத்திருக்கும், 4. கடலில் ரதனங்கள் இருக்கும்; திருவாழியிலும் ரத்னங்களே அமைந்திருக்கின்றன இப்பப்பட்ட அரங்கள் உங்களுக்கு க்ஷேமத்தை அளிக்கட்டும்.

* தன்னை வைச்வாநரன் என்று சொல்லிக் கொள்ளும் பகவானை (கடலில் வடவாக்நியாக இருந்துக் கொண்டு) ஜலமாகிற ஹவிஸ்ஸைப் புஜிக்கும் பூர்வபுருஷன். 'अत्ता चराचरग्रहणात्' என்று பிரம்ம ஸூத்ரம். வித்ருமம் - பவழம், कल्लोलमाला அலைவரிசை.

* अरविततिः वः भद्रं वितनुताम् ।

नासीर स्वैरभाव प्रतिभट रुधिरासार धारावसेकान्
एकान्तस्मेरपद्म प्रकरसहचरच्छायया प्राप्य नाभ्या ।
मुक्तानीवांकुराणि स्फुरदनलशिखादर्शित प्राक्प्रवालानि
अव्याघातेन भव्यं प्रददतु भवतां दिव्यहेतेरराणि ॥

நாஸீரஸ்வைரபக்ந ப்ரதிபட
ருதிராஸார தாராவஸேகாந்
ஏகாந்த ஸ்மேரபத்ம ப்ரகர ஸஹசரச்
சாயயா ப்ராப்யநாப்யா ॥
முக்தாநீவாங்குராணி ஸ்புரதநல-
சிகாதர்சித ப்ராக் ப்ரவாளாநி
அவ்யாகாதேந பவ்யம் ப்ரததது
பவதாம் திவ்யஹேதேரராணி ॥ 44

ஸுதர்சந நாபியும் தாமரையும் (பத்மமும்) ஒன்று.

1. தாமரையிலிருந்து அங்குரங்கள் தோன்றும்; அதுபோல் நாபியிலிருந்து வெளியில் தோன்றும அரங்கள் காட்சியளிக்கின்றன. நாபியே தாமரைப்பூ.

2. தண்ணீர் பாய்ச்சப் பெற்று (தண்ணீரில் நனைந்த) விதையிலிருந்தே முளைகள் தோன்றும். போர்க்களத்தில் அழிக்கப்பட்ட அஸுரராக்ஷஸர் களின் ரக்ததாரைகளையே தண்ணீராகப் பெற்று அரங்களாகிய அங்குரங்கள் தோற்றுவிக்கப்பட்டன வாம். 3. அங்குரங்கள் தோன்றும் போது நுனியில் சிவந்த தளிர்களைக் கொண்டிருக்கும்; இங்கும் ஆரங் களின் அக்நி ஜ்வாலைகள் தளிர்கள் போல் சிவந் திருக்கின்றன.

(நன்றாக மலர்ந்த தாமரைகளின் சோபைகளைக் கொண்டது ஸுதர்சன நாபிகமலம்.) இப்படிப்பட்ட ஸுதர்சந அரங்கள் உங்களுக்கு இடையூறு இன்றி க்ஷேமத்தை அளிக்கட்டும்.

* अराणि भवतां भव्यं प्रददतु ।

दावोल्कामण्डलीव द्रुमगणगहने वाडवस्येव वह्नेः
ज्वालावृद्धिर्महाप्सो प्रचयसि तमसि प्रातरर्कप्रभेव ।
चक्रे या दानवानां हयकरटिघटा सङ्कटे जाघटीति
प्राज्यं सा वः प्रदेयात् पदमरपरिषत् पद्मनाभायुधस्य ॥

தாவோல்காமண்டலீவ த்ருமகண
கஹநே பாடபஸ்யேவ வஹ்நே:
ஜ்வாலா வ்ருத்திர் மஹாப்தெள
ப்ரவயஸிதமஸி ப்ராதரர்க்கப்ரபேவ |
சக்ரேயா தாநவாநாம் ஹயகரடி-
கடா ஸங்கடே ஜாகடீதி
ப்ராஜ்யம் ஸாவ: ப்ரதேயாத்
பதமரபரிஷத் மத்ப நாபாயுதஸ்ய ॥ 45

காட்டுத் தீ பற்றியெரிந்து மரங்கள் அடர்ந்த காட்டை அழிப்பது போலவும், கடலில் படபாக்நி ஜ்வலித்து மிகுதியான தண்ணீரை உட்கொள்வது

போலவும், சூரியன் உதயமாகிப் பேரிருளை அழிப்பது போலவும், திருவாழியாழ்வானின் அரஸமூஹம், யானைக்கூட்டம் குதிரைக் கூட்டங்கள் நிறைந்த அஸுரமண்டலத்தில் புகுந்து அசுரர்களை அழிக்கின்றது. அப்படிப்பட்ட அரங்கள் உங்களுக்கு உயர்ந்த பதவிகளைக் கொடுக்கட்டும்.

अरपरिषत् - அரஸமூஹம் प्रातरर्कः - விடியற்காலை சூரியன் (உதயஸூர்யன்). आघटीति - सम्यक् चेष्टते। दावोल्का - காட்டுத்தீ प्राज्यंपदं - மிகவுயர்ந்த பதவி.

* अरपंक्तिः वः प्राज्यं पदं प्रदेयात् ।

तापात् दैत्यप्रतापातपसमुपचितात् त्रायमाणं त्रिलोकीं
लोलैर्ज्वालाकलापैः प्रकटयदमित श्चीनपट्टाञ्जलानि ।
छत्राकारं शलाका इव कनककृताश्शौरिदोर्दण्डलग्नं
भूयासुर्भूषयन्त्यो रथचरणमरस्फूर्तयः कीर्तये वः ॥

தாபாத் தைத்ய ப்ரதாபாதப
ஸமுபசிதாத் த்ராயமாணம் த்ரிலோகீம்
லோலைர் ஜ்வாலா கலாபை:
ப்ரகடயதபிதச் சீநபட்டாஞ் ஜலாநி।
ச்சத்ராகாரம் சலாகா இவ
கநக க்ருதாச் சௌரிதோர்தண்டலக்நம்
பூயாஸுர் பூஷயந்த்யோ ரதசரண
மரஸ்ப்பூர்த்தய: கீர்த்தயே வ: ॥ 46

திருவாழியே குடை:

1. வெய்யிலிலிருந்து குடை நம்மைக் காப்பாற்றுகிறது; ஆதலால் குடைக்கு ஆதபத்ரம் என்று பெயர். திருவாழி, அஸுரராக்ஷஸர்களின் ப்ரதாபமாகிற தாபத்திலே அகப்பட்டுக் கொண்டு வருந்துகிற உலகங்களைக் காப்பாற்றுகிறது. 2. குடையில் குடைக்

கம்பிகள் இருக்கும்; அதுபோல சக்ரத்திலும் பொற் கம்பிகள் போன்ற அரங்கள் இருக்கும். 3. குடையில் சீனப்பட்டு ஜாலர்கள் தொங்கவிடப்பட்டு இருக்கும்; சக்ரத்தைச் சுற்றி ஜ்வாலைகள் சுழன்று கொண்டிருக்கும். அவை ஜாலர்களாக இருக்கும். 4. ஒரு காம்பில் குடை மாட்டப்பட்டு இருக்கும்; சக்ரமும் பகவானின் திருக்கையாகிற மணிக்காம்பில் மாட்டப் பட்டுள்ளது. இப்படிப்பட்ட அரங்கள் உங்களுக்குக் **கீர்த்தி**யை (புகழை) உண்டு பண்ணட்டும்.

चीनपट्टाञ्चलानि என்றும் பாடபேதம் உண்டு, **कनक-शलाकाः** - பொற்கம்பிகள்.

* अरस्फूर्तयः वः कीर्तये भूयासुः

**नाभीशालानिखातां नहन समुचितां वैरिलक्ष्मीवशानां**
**संयद्वारीहृतानां समनुविदधती काञ्चनालान पङ्क्तिम् ।**
**राज्या च प्राज्यदैत्य व्रजविजयमहोत्तम्भितानां भुजानां**
**तुल्या चक्रारमाला तुलयतु भवतां तूलवच्छत्रुलोकम् ॥**

நாபீசாலா நிகாதாம் நஹந
 ஸமுசிதாம் வைரிலக்ஷ்மீ வசாநாம்
ஸம்யத்வாரீ ஹ்ருதாநாம் ஸமநு-
 விதததீ காஞ்சநாலாந பங்க்திம் |
ராஜ்யா ச ப்ராஜ்ய தைத்ய வ்ரஜ
 விஜய மஹோத்தம்பிதாநாம் புஜாநாம்
துல்யா சக்ராரமாலா துலயது
 பவதாம் துலவச்சத்ரு லோகம் || 47

ஸ்ரீ ஸுதர்சனத்தின் அரங்கள், யானை கட்டும் கம்பங்களைப் போன்றவை.

1. ஒரு பெரிய சாலையில் யானைகளைக் கட்டுவதற்கென்று பல கட்டுத்தறிகள் நாட்டப்பட்டிருக்கும்;

அதுபோல் சக்ரநாபியாகிற சாலையில் பல அரங்கள் இருக்கின்றன. போர்க்களமே யானைப்படுகுழி. அதில் வீழ்த்தப்பட்டு அழிக்கப்பட்ட யானைகள் (களிறுகள்) அஸுரராக்ஷஸர்கள். அவர்களுடைய ஸம்பத்துகளே யானைப் பேடைகள். அவற்றைக் கட்டும் ஆலாந பங்க்தியே ஸ்வர்ணமயமான அரங்கள்.

1. பகைவர்களை வெல்லும் காலத்தில் கைகளை உயரே தூக்கி ஆரவாரம் செய்வது உண்டு; அஸுர வர்க்கங்களை வெல்லும் சந்தோஷத்தில் ஆரவாரம் செய்ய உயரே தூக்கிய புஜபங்க்திகள் போல் இருக்கின்றன அரங்கள்.

இப்படிப்பட்ட சக்கரத்தாழ்வாரின் அரங்கள் உங்களுடைய சத்ருவர்க்கத்தை பஞ்சு போல் பறக்கடிக்கட்டும்.

संयत् - யுத்தம், वारी - யானை பிடிக்கும் இடம், आलानं - கட்டுத்தறி.

* चक्रारमाला भवतां शत्रुलोकं तूलयतु ।

आनेमेश्चक्रवालात् त्विष इव वितताः पिण्डिकाचण्डदीप्तेः
दीप्ता दीपा इवाऽराद्गहनरणतमो गाहिनः पूरुषस्य ।
शाणे रोषाणितानां रथचरणमये शत्रुशौण्डीर्यहेम्नां
रेखाः प्रत्यग्रलग्ना इव भुवनमरं श्रेणयः प्रीणयन्तु ॥

ஆநேமேச்சக்ரவாலாத் த்விஷ
இவவிததா: பிண்டிகா சண்ட தீப்தே:
தீப்தாதீபா இவாராத் கஹந-
ரணதமீ காஹிந: பூருஷஸ்ய ।

சாணே ரோஷாணிதாநாம் ரதசரண-
மயே சத்ரு சௌண்டீர்ய ஹேம்நாம்
ரேகா: ப்ரத்யக்ரலக்ஷ்மா இவ
புவநமரச்ரேணய: ப்ரீணயந்து ॥ 48

நேமியாகிற லோக பர்வதம் வரை பரவி இருக்கும் நாபியாகிற சூரிய கிரணங்கள் போன்றவையும், போர்க்களத்தில் நள்ளிரவில் புகும் ஸுதர்சந புருஷன் அருகில் விளங்கும் தீவட்டிகள் போன்றவையும், சக்கரமாகிற உரைகல்லில் உரைக்கப்பட்ட ஸத்ரு பராக்ரமமாகிற ஸ்வர்ணத்தின் ரேகைகள் போன்றவையுமான ஸ்ரீ ஸுதர்சந அரங்கள் உலகை மகிழ்வுடன் வாழவைக்கட்டும்.

*சக்ரவாளம்:-லோகாலோக பர்வதம். அங்கு ஸூர்யகிரணமே ப்ரவேசிக்காத பாகம் உண்டு.

लोकश्च, अलोकश्च अत्र स्तः इति - लाकालोक: ।

लोक:-ப்ரகாசம் अलोक:-இருள். உள்ளும் புறமும் இரண்டும் இடைவெளியின்றி உள்ளமை பற்றி லோகாலோகம் எனப்படுகிறது. சக்ரவாலம்-பூமியைச் சுற்றி இருக்கும் மலை, चक्र - பூமண்டலம் वलते वेष्टयते इति चक्रवाल: இங்கும் நேமி சக்கரத்தைச் சுற்றி இருப்பதால் சக்ரவாலமாக ரூபிக்கப்பட்டது. शाणे रेखायितानां - என்றும் பாடபேதம்.

*अरश्रेणय: भुवनं प्रीणयन्तु ।

दीप्तैरर्चि: प्ररोहैर्दलवति विधृत बाहुनालेन विष्णो:
उद्यत्प्रद्योतनाभं प्रथयति पुरुषं कर्णिकावर्णिकायाम् ।
चूडालं वेदमौलि कलयति कमले चक्रनाम्नोपलक्ष्ये
लक्ष्मीं स्फारामराणि प्रतिविदधतु व: केसर श्रीकराणि ॥

தீப்பதைரர்ச்சி: ப்ரரோஹைர் ஜ்வலதி
வித்ருதே பாஹு நாலேன விஷ்ணோ:
உத்யத் ப்ரத்யோத நாபம் ப்ரதயதி
புருஷம் கர்ணிகா வர்ணிகாயாம் ।
சூடாலம் வேதமௌளிம் கலயதி-
கமலே சக்ரநாம்நோபலக்ஷ்யே
லக்ஷ்மீம் ஸ்பாராமராணி ப்ரதி-
விதததுவ: கேஸர ஸ்ரீகராணி ॥ 49

திருவாழியைத்தாமரையாக (கமலமாக) ரூபிக்கிறார்.

1. தாமரை பல இதழ்களைக் கொண்டிருக்கும், திருவாழியின் வர்த்துலாகாரமான ஜ்வாலையின் ஸமூஹமே (தளங்கள்) இதழ்கள்

2. தாமரை மலர் நாளத்தின் (தாமரைத்தண்டின்) நுனியில் இருக்கும்; திருவாழியும் எம்பெருமானின் திருக்கைகளாகிற நாளத்திலால் தரிக்கப்பட்டு இருக்கிறது.

3. தாமரையின் நடுவில் கர்ணிகை என்று (மகரந்தம் அடங்கிய பாகம்) ஒன்று இருக்கும்; சக்ரமாகிய கமலத்தின் நடுவில் மிகவும் ப்ரகாசமுடைய ஸுதர்சந புருஷன் இருக்கிறார்.

4. தாமரை சிரோபூஷணமாக இருந்து அலங்கரிக்கும்; திருவாழியும் வேதசிரஸ்ஸான உபநிஷத்தை அலங்கரிக்கிறார்.

5. கமலத்தில் செந்நிறமான தாதுக்கள் உள்ளன; திருவாழிக் கமலத்தில் அரங்கள் கேஸரங்களாக இருக்கின்றன. அந்த அரங்கள் உங்களுக்கு லக்ஷ்மீ கடாக்ஷத்தை (ஸம்பத்துகளை) அளிக்கட்டும்.

*மஹோபநிஷத் சதபதம் முதலான வேதாந்த பாகங்களில் திருவாழியின் பெருமை கூறப்படுகிறது.

प्रथयति - प्रकाशयति ।

*अराणि वः लक्ष्मीं प्रतिविदधत् ।

**धातुस्यन्दैरमन्दैः कलुषितवपुषो निर्झराम्भः प्रपातान् ।**
**अर्चिष्मत्या स्वमूर्त्या रथचरणगिरेर्नेमिनाभीतटस्य ।**
**व्याकुर्वाणाऽरपङ्क्तिर्वितरतु विभुता विस्तृति वित्तकोटी-**
**कोटीरच्छत्रपीठी कटककरिघटा चामरस्रग्विणीं वः ॥**

தாது ஸ்யந்தை ரமந்தை: கலுஷித-
வபுஷோ நிர்ஜராம்ப: ப்ரபாதாந்
அர்ச்சிஷ் மத்யா ஸ்வமூர்த்யா
ரதசரணகிரேர் நேமி நாபீதடஸ்ய,
வ்யாகுர்வாணாரபங்க்திர் விதரது
விபுதா விஸ்த்ருதிம் வித்தகோடீ
கோடீரச்சத்ரபீட கடக கரி
கடா சாமர ஸ்ரக்விணீம் வ: || 50

நேமியும் நாபியுமாகிற தாழ்வரையைக் கொண்ட சக்ரமாகிற பர்வதத்திலிருந்து, கைரிகாதி தாதுப் பொருள்களால் கலங்கி மேலிருந்து கீழேவிழும் மலையருவி வீழ்ச்சிகளைப் போன்ற ஒளிமிக்க அரங்கள் உங்களுக்கு தன ராசிகளையும், கிரீடம் தோள்வளை மாலை முதலியவற்றை அணிந்து கொண்டு, திவ்ய ஸிம்ஹாஸநத்தின் மேல் ஒற்றைக் குடையின் நிழலில் இருபுறமும் சாமரம் வீசப் பெற்று அமரும் பாக்யத்தையும், பல்லாயிரம் யானைகளைக் கட்டிக் காப்பாற்றி வாழும் வைபவத்தையும் விளைவிக்கட்டும்.

*சக்ரமே மலை, நேமியும் நாபியும் அதன் தாழ்வரை, சிவந்த மலையருவிகளே அரங்கள்.

नट-தாழ்வரை, अमन्द-அளவற்ற, विस्तृति-செல்வப் பெருக்கை, अराङ्क्तिः அரஸமூஹம்.

*अरपङ्क्तिः वः विस्तृति वितरतु ।

## நாபி வர்ணனம் 4

**ऐक्येन द्वादशानामशिशिरमहसां दर्शयन्ती विवृत्तिं**
**दत्तः स्वर्लोकलक्ष्म्यास्तिलक इव मुखे पद्मरागद्रवेण ।**
**दैत्याद्दैतेयदर्पक्षतिकरणरण प्रीणिताम्भोजनाभिः**
**नाभिर्नाभित्वमृच्छ्यास्सुरपति विभवस्पर्शि सौदर्शनी वः ॥**

ஐக்யேந த்வாதசாநா மசிசிர
    மஹஸாம் தர்சயந்தீ விவ்ருத்திம்
தத்த: ஸ்வர்லோக லக்ஷ்ம்யாஸ்திலக
    இவ முகே பத்ம ராகத்ரவேண ।
தேயாத்தைதேய தர்ப க்ஷதி கரண
    ரண ப்ரீணிதாம் போஜ நாபி:
நாபிர் நாபித்வ முர்வ்யாஸ்ஸுரபதி
    விபவ ஸ்பர்சி ஸௌதர்சநீ வ: ॥ 51

இது முதல் அறுபத்தொன்ரும் சுலோகம் முடிய நாபி வர்ணனம். ஸுதர்சநாழ்வானின் அவயவங்களில் ஒன்று நாபி. அவயவங்களுக்குத் தனித்தனியாகப் பெருமையைச் சொன்னாலும், அது ஸுதர்சநாழ்வானுக்கே சொன்னதாக ஆகும்.

திருவாழியின் நாபி, த்வாதச ஆதித்யர்களும் ஒன்று சேர்ந்து சக்ர நாபியாக ஆயிற்ரோ என்று சொல்லும்படி ப்ரகாசமாக இருக்கிறது. ஸ்வர்கலோக ஸாம்ராஜ்ய லக்ஷ்மியின் முகத்தில் (பத்மராக மணியின் திரவத்தால்) இடப்பட்ட திலகம் போன்று இருக்கிறது. அசுரர்களின் கொழுப்பை அடக்கவல்ல

போர் முறையினால் எம்பெருமானை (பகவானை) மகிழ் விப்பதாக இருக்கிறது இப்படிப்பட்ட நாபியானது செல்வச் சிறப்பு மிக்க இந்திரனுடைய ஆட்சிக்கு ஸமமான அரசாட்சியை உங்களுக்கு அளிக்கட்டும்.

*திலகா: ஸௌமங்கல்ய லக்ஷணம். அஸுரர் களை அழிக்கும் வகையில் ஸ்வர்கலோக லக்ஷ்மியின் வாழ்ச்சிக்கு ஸுதர்சந நாபி காரணமாக இருக்கிறது.

*नाभिः वः नाभिघ्नं देयात् ।

शस्त्रश्यामे शताङ्गक्षितिभृति तरलैस्तुरङ्गे तुरङ्गैः
त्वङ्गन्मातङ्गनक्रे कुपितभटमुखच्छायमग्न प्रवाले ।
अस्तोकं प्रस्नुवाना प्रतिभटजलधौ पाटवं बाडवस्य
श्रेयो वस्संविधत्तां श्रितदुरितहरा श्रीधरास्त्रस्य नाभिः ।

சஸ்த்ரச்யாமே சதாங்க க்ஷிதிப்ருதி
தரலைஸ்துத்தரங்கே துரங்கை:
த்வங்கந் மாதங்க நக்ரே குபித-
படமுகச் சாயமுக்த ப்ரவாலே |
அஸ்தோகம் ப்ரஸ்நுவாநா ப்ரதி-
படஜலதௌ பாடவம் பாடபஸ்ய
ச்ரேயோ வஸ்ஸம்விதத்தாம் ச்ரித
துரித ஹரா ஸ்ரீதராஸ்த்ரஸ்ய நாபி: || 52

ஸுதர்சந நாபியை படபாக்நியாக ரூபகம் செய் கிறார்.

1. ஸமுத்ரம் கறுத்து இருக்கும்; சத்ரு ஸைந்ய மாகிற கடலும் சஸ்திரங்களால் கறுத்திருக்கும். 2. மைநாகம் முதலிய மலைகளைக் கொண்டது ஸமுத் திரம்; மலைபோன்ற தேர்களைக் கொண்டது சத்ரு ஸைந்யம். 3. கடலில் பெரிய பெரிய அலைகள்

தாவிவரும்; சத்ருஸைந்யத்தில் பெரிய பெரிய வெண் குதிரைகள் தாவிவரும் 4 கடலில் மிகப் பெரிதாக கறுத்த முதலைகள் இருக்கும்; சத்ருஸைந்யத்திலும் போர்வீ;ர்களின் முகங்கள் சீறிச் சிவந்து காணப்படுகின்றன. இப்படிப்பட்ட சத்ருஸைந்யக் கடலில் இருந்து கொண்டு (ஸைந்யத்தையே விழுங்கும்) படபாக்நி போன்ற சக்ரநாபியானது உங்களுக்கு மங்களத்தை உண்டுபண்ணட்டும்.

*रथाङ्गं - தேர் क्षितिभृत् - மலை मातङ्गनक्रं - யானைகளாகிற முதலை, கடலில் சீறிவரும் அலைகளைக் குதிரைகளாகக் கூறுவர் கவிஞர்.

*नाभि: व: श्रेय: संविधत्ताम् ।

**ज्वालाचूडालकालानल चलन समाडम्बरा साम्परायं**
**यासावासाद्य माद्यत्सुरसुभटभुजास्फोट कोलाहलाढ्यम् ।**
**दैत्यारण्यं दहन्ती विरचयति यशोभूतिशुभ्रां धरित्रीं**
**सा वश्चक्रस्य नक्रस्यदमृदित गजत्रायिणी नाभिरव्यात् ।।**

ஜ்வாலா சூடால காலாநல சலந
ஸமாடம்பரா ஸாம்பராயம்
யாஸாவாஸாத்ய மாத்யத் ஸுரஸுபட
புஜாஸ்போடகோலாஹலாட்யம் ।
தைத்யாரண்யம் தஹந்தீ விரசயதி
யசோபூதிசுப்ராம் தரித்ரீம்
ஸா வச் சக்ரஸ்ய நக்ரஸ்யத ம்ருதித
கஜத்ராயிணி நாபிரவ்யாத் ।। 53

தேவாஸுரர்கள் போர் செய்யும் போர்க்களத்தில் புகுந்து, காலாக்நிபோல் ஜ்வாலைகளினல் அஸுர ராக்ஷஸ ஸைந்யமாகிற பெருங்காட்டைக் கொளுத்தி சத்ருஸைந்யத்தை அழித்ததால் ஏற்பட்ட புகழாகிற

சாம்பலை பூமி முழுதும் பரப்பி வெளுப்பாக ஆக்கிய சக்ரநாபியானது, முதலை வாயில் அகப்பட்டுத்துடித்த கஜேந்திராழ்வானை ரக்ஷித்ததுபோல் உங்களை ரக்ஷிக்கப்கட்டும்.

साम्परायं - போர்க்களம் सुर सुभट भुजास्फोट कोलाहलाढ्यं - தேவர்கள் (திருவாழியாழ்வானின் துணையினால்) மகிழ்ந்து தோள் தட்டும் கோலாஹலம் (ஆரவாரம்) நிறைந்த, धरित्री - பூமி गजत्रायिणी - யானையை ரக்ஷித்த

*चक्रनाभिः वः अव्यात् ।

**विन्दन्ती सान्ध्यमार्चिर्विदलितवपुषः प्रत्यनीकस्य रक्तैः**
**स्फायन्नक्षत्रराशिर्दिशिदिशि कणशः कीकसैः कीर्यमाणैः ।**
**नाकौकः पक्ष्मलाक्षी नवमदहसितच्छायया चन्द्रपादान्**
**राथाङ्गी विस्तृणाना रचयतु कुशलं पिण्डिका यामिनी वः ॥**

விந்தந்தி ஸாந்த்யமாச்சிர் விதலித
வபுஷ: ப்ரத்யநீகஸ்ய ரக்தை:
ஸ்பாயந்நக்ஷத்ர ராசிர்திசிதிசிகணச:
கீகஸை: கீர்ய மாணை: ।
நாகௌக: பக்ஷ்மலாக்ஷீ நவமத
ஹஸிதச்சாயயா சந்த்ரபாதாந்
ராதாங்கீ விஸ்த்ருணாநா ரசயது
குசலம் பிண்டிகாயாமிநீ வ: ॥ 54

சக்ரநாபி, ராத்ரியாக வர்ணிக்கப்படுகிறது:- (1) ராத்ரியானது ஸாயங்காலத்தில் ஸந்தியா வேளையின் சிவந்த ஒளியைப் பெற்றுச்சிவந்திருக்கும்; சக்ர நாபியானது, ராக்ஷஸர்களின் உடல்களைச் சிதைத்து, அவற்றிலிருந்து தோன்றிய ரக்தங்களால் நனைக்கப்பட்டு சிவந்திருக்கும். (2) ராத்ரியானது நக்ஷத்திரக் கூட்டங்களால் வியாபிக்கப்பட்டு இருக்கும். (நக்ஷத்திரங்கள் நிறைந்திக்கும்). சக்ரநாபி

யானது சத்ருக்களின் எலும்புகளைப் பொடியாக்கி எங்கும் இறைத்து இருப்பதால் நக்ஷத்திரங்களால் நிரப்பப்பட்டது போல் இருக்கும். (3 ராத்ரியானது சந்திரனின் ஒளியைப் பெற்றிருக்கும்; சக்ரநாபியும், தேவநாஸ்த்ரீகளின் சிரிப்பொளியால் நிலவு ஒளி வீசுவது போல் இருக்கும். இப்படிப்பட்ட சக்ர நாபியானது உங்களுக்கு க்ஷேமத்தை உண்டு பண்ணட்டும்.

नाकौकसां - देवानां, पक्ष्मकाक्ष्य: - स्त्रिय: । यामिनी रात्रि:, कीकसै: எலும்புகளால் दिशिदिशि - திசைகள் தோறும்.

*रथाङ्गी व: कुशलं रचयतु ।

**निस्सीमं निस्सृताया भुजधरणिधराघाटत: कैटभारे:**
**आशाकूलङ्कषर्द्धे रहितबलमहाम्भोधिमासादयन्त्या: ।**
**चक्रज्वालापगायाश्चलदरलहरीमालिकादन्तुराया:**
**बिभ्रत्यावर्तभावं भ्रमयतु भुवने पिण्डिका व: प्रशस्तिम् ॥**

நிஸ்ஸீமம் நிஸ்ஸ்ருதாயா புஜதரணி
தராகாடத: கைடபாரே:
ஆசாகூலங்கஷர்த்தே ரஹிதபல-
மஹாம் போதிமாஸாதயந்த்யா: ।
சக்ரஜ்வாலாபகாயாச் சல-
தரலஹரீ மாலிகா தந்துராயா:
பிப்ரத்யாவர்த்தபாவம் ப்ரமயது
புவநே பிண்டிகா வ: ப்ரசஸ்திம் ॥ 55

சக்ரநாபியானது சக்ரஜ்வாலையாகிற நதியில் ஏற்பட்ட சுழிபோல் இருக்கிறது. 1. பெரிய ஆறு கள் எல்லாம் மலைகளிலிருந்தே தோன்றி வெளிவரும்;

பெருகும்; எம்பெருமானின் மலைபோன்ற புஜத்திலிருந்தே சக்ரஜ்வாலையாகிற நதி வெளிவருகிறது. 2. மஹாநதிகள் கரைபுரண்டு ஓடும்; ஜ்வாலா நதியும் திசைகளை மறைத்துக் கொண்டு பரவியுள்ளது. 3. நதிகள் கடலில் போய் சேரும்; சக்ர ஜ்வாலையும் தேவாஸுரஸைன்யமாகிற பெருங்கடலில் கலந்திருக்கும்; பரவி இருக்கும். 4. நதிகள் அலைகளைக் கொண்டிருக்கும்; சக்ரஜ்வாலா நதியும் பல ஆரங்களாகிற அலைகளைக் கொண்டிருக்கும். இப்படிப்பட்ட சக்ரநாபியானது உலகமெங்கும் உங்கள் புகழைப் பரப்பட்டும்.

पिण्डिका - (சக்ர) நாபியானது. प्रशस्ति - புகழை. आपगा - நதி. लहरी - அலை. பகவானின் திருத்தோள்களே மலைகள். 'சிரிரண்டு மால்வரைத்தோள்' आषाटः सीमा - எல்லை. भुवनं பூமி, நன்னீர்

*पिण्डिका वः प्रशस्ति भुवन भ्रमयतु ।

पाणौ कृत्वाहवाग्रे प्रतिभट विजयोपार्जितां वीरलक्ष्मीं
मानीतायास्ततोऽस्याः स्वसविधमसुरद्वेषिणा पूरुषेण ।
प्रासादं वासहेतोर्विरचितमरुणैरश्मिभिस्सूचयन्ती
नाभिर्वो निर्मिमीतां रथचरणपतेर्निर्वृतिं निर्विघाताम ॥

பாணௌ க்ருத்வாஹவாக்ரே ப்ரதிபட
விஜயோ பார்ஜிதாம் வீரலக்ஷ்மீம்
ஆநீதாயாஸ்ததோஸ்யா: ஸ்வஸவித
மஸுரத்வேஷிணா பூருஷேண ।
ப்ராஸாதம் வாஸஹேதோர் விரசித
மருணை ரச்மிபிஸ்ஸூசயந்தீ
நாபிர்வோ நிர்மிமீதாம் ரதசரண
பதேர் நிர்வ்ருதிம் நிர்விகாதாம். 56

ஸுதர்சந நாபியானது, ஒரு மாடமாளிகையாக வருணிக்கப்படுகிறது. சத்ருக்களை வென்று ஸம்பாதித்துக் கொள்ளப்பட்ட வீரஶ்ரீயை (வீரலக்ஷ்மியை)ப் போர்க்களத்தில் பாணிக்ரஹணம் செய்து கொண்டு அழைத்து வந்து அவள் சுகமாக வாழ் வாழ்வதற்காக ஸுதர்சந புருஷனுல் சிவந்த கிரணங்களால் அமைத்துக் கொடுக்கப்பட்ட மாடமாளிகை போன்ற ஸுதர்சன நாபியானது உங்களுக்கு இடையூறு இல்லாத ஸுகத்தை உண்டு பண்ணட்டும்.

अरुणैः अश्मिभिः, अरुणैः रश्मिभिः ।

என்று பிரித்துப் பொருள் கொள்ள வேண்டும். प्रासाद செங்கற்களாலே கட்டப்படும் மேல் நிலை (மாடி)-சக்ர நாபியாகிற प्रासाद சிவந்த கிரணங்களால் அமைக்கப் பட்டது.

•नाभिः वः निर्विघाता निर्वृतिं निर्मिमीताम् ।

**डिण्डीरापाण्डुगण्डैररियुवतिमुखैः पिण्डिका कृष्णहेतेः**
**उच्चण्डाश्रुप्रवर्षैरुपरत तिलकं रक्तशौण्डीर्य चर्या ।**
**द्वित्रग्रामाधिपत्य द्रुहिणमदमषी दूषिताक्ष क्षमाभृत्**
**सेवाहेवाकपाकं शमयतु भवतां कर्म शर्म प्रतीपम् ॥**

டிண்டீரா பாண்டு கண்டை ரரியுவதி-
முகை: பிண்டிகா க்ருஷ்ணஹேதே:
உச்சண்டாச்ரு ப்ரவர்ஷை ருபரததிலகை
ருக்த சைளண்டீர்ய சர்யா,
த்வித்ர க்ராமாதிபத்ய த்ருஹிண
மதமஷீ தூஷிதாக்ஷ க்ஷமாப்ருத்
ஸேவஹேவா கபாகம் சமயது
பவதாம் கர்ம சர்ம ப்ரதீபம். 57

பர்த்தாக்களின் விரஹத்தினால் வெளுத்திருக்கிற சத்ரு ஸ்த்ரீகளின் கன்னங்களும், அவர்கள் எப்போதும் அழுது கொண்டே இருப்பதும், நெற்றியில் மங்களகரமான திலகம் இல்லாததுமான நிலைகள் சக்ர நாபியின் மிடுக்கை அறுதி இடுகின்றன. இரண்டு மூன்று கிராமங்களுக்கு அதிபதியாக இருப்பதைக் கொண்டே, தங்களை பிரம்மாவாக நினைத்துக் கொண்டும், அஹங்கார மமகாரங்களால் இந்திரியங்கள் கெட்டு இருக்கும் (அரசர்களுக்கு) பிரபுக்களுக்கு அடிமைப்பட்டிருக்க வேண்டும் என்ற துர்புத்தியைத் தோற்றுவிக்கும் துஷ்கர்மாவை சக்ர நாபியானது போக்கி அருளாட்டும்.

सेवा - பிறர்க்கு (ஸேவை) அடிமை செய்தல்; அதில் ஆசை கொண்டிருப்பது - सेवाहेवाक। அதனையே பலமாகக் கொண்ட கர்ம (துஷ்கர்ம) - सेवाहेवाक पाक।

*पिण्डिका सेवाहेवाकपाकं भवतां कर्म शमयतु।

पर्याप्तामुन्नतिं या प्रथयति कमलं या तिरोभाव्य भाति
स्रष्टुस्सृष्टेर्दवीयः कुवलयमहितं या बिभर्ति स्वरूपम्।
भूम्नास्वेनान्तरिक्षं कबलयति च या साविचित्रा वितत्तां
दैतेयारातिनाभिर्द्रविणपतिपदद्वेषिणीं सम्पदं वः॥

பர்யாப்தா முந்நதிம்யா ப்ரதயதி
கமலம் யாதிரோபாவ்ய பாதி
ஸ்ஷ்டுஸ்ருஷ்டேர்தவீய: குவலய
மஹிதம் யா பிபர்த்தி ஸ்வரூபம்।
பூம்நா ஸ்வேநாந்தரிக்ஷம் கபலயதி
ச யா ஸா விசித்ராவிதத்தாம்
தைதேயாராதிநாபிர் த்ரவிண பதி- 58
பத த்வேஷிணீம் ஸம்பதம் வ:॥

பரிபூர்ணமான உயர்வை விளக்கிப் பிரகாசப்படுத்திக் கொண்டிருப்பதும். தாமரைப்பூவையும் திரஸ்கரித்து விளங்குவதும், பிரம்ம ஸ்ருஷ்டிக்கும் எட்டாததும், பூமண்டலத்திலுள்ளவர்களாலும் பூஜிக்கப்படும் ஸ்வரூபத்தை உடையதும், தன் பெருமையினால் அந்தரிக்ஷ லோகத்தையும் வெல்வதுமாகிற விசித்திரமான ஸுதர்சந நாபியானது உங்களுக்குக் குபேர செல்வத்தினும் மேலான செல்வத்தை அளிக்கட்டும்.

दैतेय: अराति: - (அஸுர (ராக்ஷஸர்களின் பகைவன்) இப்பெயர் பகவானுக்கும். சக்ர நாபிக்கும் பொருந்தும். பகவானும் திருவாழியானும் தைத்யர்களை த்வஸம் செய்பவர்கள். தைத்யர்களின் த்வம் ஸத்திற்குப் பகவான் பிரயோஜக கர்த்தா; திருவாழியாழ்வான் ப்ரயோஜ்ய கர்த்தா. भूमा - பெருமை. पर्यात्तं - பரிபூர்ணமான - भाति - ப்ரகாசிக்கிறது द्रविणपति : குபேரன்.

*दैतेयारतिनाभि: व: संपदं विधत्ताम् ।

**वाणीवाङ्गैश्चतुर्भिस्सदसि सुमनसां द्योतमानस्वरूपा**
**बाह्वन्तस्था मुरारेरभिमतमखिलं श्रीरिव स्पर्शयन्ती ।**
**दुर्गेवोग्राकृतिर्या त्रिभुवनजननस्थेमसंहारधुर्या**
**मर्यादालङ्घनं व: क्षपयतु महती हेतिवर्यस्य नाभि: ॥**

வாணி வாங்கைச் சதுர்ப்பிஸ்ஸதஸி
ஸுமநஸாம் த்யோதமாந ஸ்வரூபா
பாஹ்வந்தஸ்த்தா முராரேரபிமத
மகிலம் ஸ்ரீரிவ ஸ்பர்சயந்தீ ।
துர்கேவோக்ராக்ருதிர்யா த்ரிபுவந
ஜனனஸ்ஸ்தேம ஸம்ஹார துர்யா
மர்யாதாலங்கநம் வ: க்ஷபயது
மஹதீ ஹேதி வர்யஸ்ய நாபி: ॥ 59

பிரம்ம விஷ்ணு ருத்ரர்களாகிற த்ரிமூர்த்திகளின் பத்நீ ஸாதர்ம்யம் சக்ர நாபிக்கு உண்டு என்று இதில் கூறப்படுகிறது.

1. வாக்தேவதையான ஸரஸ்வதியானவள் பண்டிதர்கள் ஜிஹ்வாக்ரத்தில் பரா, பச்யந்தீ, மத்யமா, வைகரீ என்ற நான்கு அவயவங்களோடு கூடினவளாய் விளங்குவாள்; சக்ர நாபியும், ஜ்வாலா, நேமி; அரம், அக்ஷம் என்கிற சக்ராவயவங்களோடு கூடினதாய் தேவ ஸதஸ்ஸில் விளங்கும்.

2. மஹா லக்ஷ்மியானவள் பகவானின் திருமார்பில் 'அகலகில்லேன் இறையும்' என்று இருந்து கொண்டு எல்லா அபீஷ்டங்களையும் கொடுப்பாள், சக்ர நாபியானது பகவானின் கை நுனியில் இருந்து கொண்டு வேண்டியதெல்லாம் தரும்.

3. பார்வதிபோல் உக்ரமான ரூபத்தோடு இருந்து கொண்டு (அஸுர ராக்ஷஸர்களின்) ஸம்ஹார காரியத்தைக் கொண்டிருக்கும். அப்படிப்பட்ட சக்ர நாபியானது உங்களுடைய ஸ்வாதந்த்ரிய அபிமானத்தைப் போக்கி சேஷத்வ மர்யாதையை வளர்க்கட்டும்.

•हेतिवर्यस्य नाभिः वः मर्यादालङ्घनं क्षपयतु ।

स्रग्भिस्सन्तानजाभिर्मधुर मधुरसस्यन्दसन्दोहिनीभिः
पाटीरैः प्रौढ चन्द्रातपचय सुषमालोपनैर्लेपनैश्च ।
धूपैः कालागरूणामपि सुरसुदृशो विस्मयर्चासु यस्याः
गन्धं बध्नन्ति साबश्चिरम सुरभिवो नाभिरव्याद भव्यात् ॥

ஸ்ரக்பிஸ்ஸந்தாந ஜாபிர் மதுர
மதுரஸ ஸ்யந்த ஸந்தோஹிநீபி:
பாடீரை: ப்ரௌட சந்த்ரா தப சய
ஸுஷமாலோபநைர்லேபநைச்ச ।

தூபை: காலாகருணுமபி ஸுர
ஸுத்ருசோ விச்ரமர்ச்சாஸு யஸ்யா:
கந்தம் ருந்தந்தி ஸா வ: சிரம
ஸுரபிதோ நபிரவ்யாத பவ்யாத் || 60

தேவதா ஸ்த்ரீகள் திருவாராதனங்களில் தேன் மணம வீசும் கற்பக மலர் மாலைகளாலும், (பாரிஜாத புஷ்பங்களாலும்) நிலாவின் ஒளியையும் வெல்லும் சந்தனப் பூச்சுக்களாலும், காரகில் தூபங்களாலும், ஆராதிப்பதால், அஸுர ராக்ஷஸ சரீரங்களின் மாம்ஸ ஸம்பந்தத்தால் ஏற்பட்ட துர்கந்தங்கள் நீங்கிப் பரிமளம் வீசும் சக்ர நாபியானது நெடுநாட்கள் வரை உங்களை அசுபத்திலிருந்து ரக்ஷிக்கட்டும்.

स्रक् - மாலை (புஷ்ப மாலை), विस्रगन्ध - துர்கந்தம், தேவலோக வ்ருக்ஷங்கள் ஐந்து:—

पञ्चैते देवतरवः मन्दारः पारिजातकः ।
सन्तानः कल्पवृक्षश्च पुंसि वा हरिचन्दनम् ॥

*नाभिः वः चिरं अभव्यात् अव्यात् ।

**अंहस्संहृत्य दत्त्वा प्रतिजनिजनितं प्रौढसंसारवन्या**
**दूरात्वन्यानधन्यान् महति विनतिभिर्धामनि स्थापयन्ती ।**
**विश्रान्तिं शाश्वतीं या नयति रमयतां चक्रराजस्य नाभिः**
**संयन्मोमुह्यमान त्रिदशरिपुदृशा साक्षिणी साऽक्षिणी वः ॥**

அம்ஹஸ் ஸம்ஹத்ய தத்த்வா ப்ரதிஜநி
ஜநிதம் ப்ரௌட ஸம்ஸாரவந்யா
தூராத்வந்யாந தந்யாந் மஹதி
விநதிபிர்தாமநி ஸ்தாபயந்தீ |

*விச்ராந்திம் சாச்வதீம் யா நயதி*
*ரமயதாம் சக்ராஜஸ்ய நாபி:*
*ஸம்யங்மோமுஹ்யமாந த்ரிதச*
*ரிபுதசா ஸாக்ஷிணீ ஸாக்ஷிணீ வ: ॥* 61

ஸம்ஸாரமாகிற மருகாந்தாரத்தில் காதம் பலவும் திரிந்துழன்று வருந்தினவர்களின் பல ஜன்மங்களில் செய்து ஒன்று சேர்ந்த பாவங்களைக் கொளுத்திவிட்டு, பாபமில்லாதவர்கள் அடையும் இடமாகிய பரமதத்திற்கு அழைத்துச் சென்று, அங்கு அவர்களை நிலைநிறுத்தி முடிவில்லாத பேரின்பத்தைக் அளிக்கின்ற சக்ர நாபியானது (அநிஷ்டத்தை நீக்குவதிலும், இஷ்டத்தைக் கொடுப்பதிலும் வல்லமை பொருந்திய சக்ர நாபியானது) உங்கள் கண்களை மகிழ்விக்கட்டும்.

महद्-धाम - பரமபதம், विश्रान्तिः - சுகம், प्रतिजनि - ஜன்மம் தோறும், अक्षिणी - கண்களை

*கோடி ஸூர்ய ப்ரகாசமான திருவாழியாழ்வானை ஸேவிப்பதே கண்களுக்கு ஆனந்தம்.

*चक्रराजस्य नाभिः वः अक्षिणी रमयताम् ।

## அக்ஷ வர்ணனம்

**श्रुत्वा यन्नामशब्दं श्रुतिपथकटुकं देवनक्रीडनेषु**
**स्वर्वैरिस्वैरवत्यो भयविवशधियः कातरग्यस्तसाराः ।**
**मन्दाक्षं यान्त्यमन्दं प्रतियुवतिमुखैर्दर्शितोत्प्रासदर्पैः**
**अक्षं सौदर्शनं तत् क्षपयतु भवतामंघमानां घनायाम् ॥**

*ச்ருத்வா யந்நாமசப்தம் ச்ருதி*
*பத கடுகம் தேவநக்ரீடநேஷு*
*ஸ்வர்வைரிஸ்வைரவத்யோ பய*
*விவசதிய: காதரங்யஸ்தசாரா: ।*

மந்தாக்ஷம் யாந்த்யமந்தம் ப்ரதி
யுவதி முகைர் தர்சிதோத்ப்ராஸ தர்பை:
அக்ஷம் ஸௌதர்சநம் தத் க்ஷபயது
பவதாமேத மாநாம் தநாயாம் || 62

சக்கரத்தின் நடுவில் குழிபோன்று ஓரிடம் உள்ளது. இது ஸுதர்சந அவயங்களில் ஒன்று, இதற்கு அக்ஷம் என்று பெயர். த்யூதம் (சொக்கட்டான்) என்ற விளையாட்டிற்கும் அக்ஷம் என்று பெயர். அக்ஷம் என்ற பெயரைக் கேட்டாலே அஸுரர்களுக்கும் ராக்ஷஸர்களுக்கும் நடுக்கம். ஒரு சமயம் அஸுர ஸ்த்ரீகள் தேவமாதர்களோடு த்யூதம் விளையாடினார்கள். அப்போது தேவமாதர்களில் ஒருத்தி எதிர்பாராத விதமாக 'அக்ஷம்' என்று சொன்னாள். ஸுதர்சநத்தால் தாங்கள் விதவைகளாக ஆனபடியால் அக்ஷம் என்ற சொல்லைக் கேட்டவுடனே ஸுதர்சநாழ்வானின் பெயர் மீண்டும் ஒலிக்கத் தொடங்கிவிட்டது என்று அஞ்சி நடுங்கி ஆட்டக் காய்களை வீசி எறிந்தார்கள். இவர்களுக்கு அஸ்தானே பயசங்கை ஏற்படுவதைக் கண்ட தேவமாதர்கள் சிரிக்க, இவர்கள் வெள்கித்தலை குனிந்தார்கள். இப்படிப்பட்ட சக்ராக்ஷமானது உங்களுக்கு மேன்மேலும் ஏற்படும் பொருளாசையைத் தணிக்கட்டும்.

*सौदर्शनं अक्षं धनायां एधमानां क्षपयतु ।

व्यस्तस्कन्धं विशीर्णप्रसवपरिकरं प्रत्तपत्रोपमर्दं
संयद्वर्षासु तर्षातुरखगपरिषत्पीतरक्तोदकासु ।
अक्षं रक्षस्तरूणामशनिवदशनैरापतन्मूर्ध्नि मूर्ध्नि
स्तादस्त्राधीशितुर्वः स्तबकितयशसो द्वेषिणां प्लोषणाय ॥

வ்யஸ்த ஸ்கந்தம் விசீர்ண ப்ரஸவ
பரிகாரம் ப்ரத்த பத்ரோப மர்தம்
ஸம்யத் வர்ஷாஸு தர்ஷாதுர கக
பரிஷத் பீத ரக்தோதகாஸு ।
அக்ஷம் ரக்ஷஸ்தருணும் அசநிவதசநை
ராபதந் மூர்த்நி மூர்த்நி
ஸ்தாதஸ்த்ராதீசிதுர்வ: ஸ்தபகித
யசஸோ த்வேஷிணும் ப்லோஷணுய ॥ 63

ஸ்ரீ ஸுதர்சனத்தின் அக்ஷத்தை வானத்தில் முழங்கும் இடியாக உருவகம் செய்கிருர்.

1. மழை காலங்களில் இடியானது வானத்திலிருந்து மரங்களின் மீது விழுந்து மரக்கிளைகளை முறிக்கும்; ஸுதர்சநாக்ஷம் போர்க் காலங்களில் அஸுரராக்ஷஸர்களின் மீது விழுந்து அவர்களுடைய தோள்பட்டைகளை முறிக்கும். 2. இடியானது புஷ்பங்களைச் சிதற அடித்துக் கொண்டுவிழும்; அக்ஷமும் அஸுரராக்ஷஸர்களின் பிரஜைகளையும் பரிஜநங்களையும் சிதற அடிக்கும். 3. இடியானது மரங்களில் இருக்கும் இலைகளுக்கு நாசத்தை உண்டு பண்ணும்; அக்ஷமும் அஸுரராக்ஷஸர்களின் ரத கஜ துரக பதாதிகளாகிற ஸேனைகளுக்கு நாசத்தை உண்டு பண்ணும். 4. மழை காலத்தில் நீர் நிலைகளில் சேரும் தண்ணீர் சிவந்திருக்கும்; தாஹத்தோடு திரியும் பக்ஷிகள் அந்தத் தண்ணீரைப் பருகும்; அது போல் போர்க்களங்களில் ஏற்படும் ரக்த தாரைகளை (தேவஸமூஹம்) பாணங்கள் பருகுவது போல் இருக்கின்றன. இப்படிப்பட்ட மஹாயசஸ்வியான சக்ராக்ஷமானது உங்களுடைய சத்ருக்களை அழித்து உங்களுக்கு ஸம்ருத்தியான கீர்த்தியை உண்டாக்கட்டும். स्वर्गपरिषत् - தேவஸமூஹம், பாணஸமூஹம், स्तबक - பூங்கொத்து, புகழ்;

*अक्षं द्वेषिणां प्लोषणाय स्तात् ।

दीक्षां संग्रामसत्रे महति कृतवतो दीप्तिभिस्संहताभिः
जिह्वाले सप्तजिह्वे दनुजकुलहविर्जुह्वतोनेमिजुह्वा ।
वैकुण्ठास्त्रस्य कुण्डं महदिव विलसत्पिण्डिकावेदिमध्ये
दिश्यात् दिव्यर्द्विदेश्यं पदमिह भवतामक्षतोन्मेषमक्षम् ।।

தீக்ஷாம் ஸங்க்ராம ஸத்ரே மஹதி
க்ருதவதோ தீப்திபிஸ்ஸம்ஹதாபி:
ஜிஹ்வாலே ஸப்தஜிஹ்வே தநுஜகுல-
ஹவிர் ஜுஹ்வதோ நேமிஜுஹ்வா ।
வைகுண்டாஸ்த்ரஸ்யகுண்டம்
மஹதிவ விலஸத் பிண்டிகாவேதிமத்யே
திச்யாத்திவ்யர்த்விதேச்யம் பதமிஹ-
பவதா மக்ஷதோந்மேஷ மக்ஷம் ॥ 64

திருவாழியாழ்வானை யுத்தமாகிறயக்ஞத்தில் தீக்ஷிதனாகவும், சக்ரநாபியை யாகவேதியாகவும் சக்ர நேமியை தர்வியாகவும், அஸுரகுலத்தை ஹவிஸ்ஸாகவும், அக்ஷத்தை ஹோம குண்டமாகவும் இதில் கூறுகிறார்.

1. மஹாஸத்ரம் என்னும் யாகத்தில் (பெரிய யக்ஞத்தில்) தீக்ஷிதன் அக்நியில் ஹவிஸ்ஸை இடுவான்; அதுபோல் திருவாழியாழ்வானும் தன்னிடத்தில் உள்ள அக்நியில் அஸுரராக்ஷஸர்களாகிற ஹவிஸ்ஸை இடுகிறார். 2. ஹோமஸாதன பாத்ரங்களில் ஒன்று 'ஜுஹூ' என்பது அது ஹோமத்திற்கு உரிய பொருள்களை அக்நியில் கொண்டு வந்து சேர்க்கும்; சக்ரநேமியும் அஸுரராக்ஷஸர்களைத் திரட்டிப் பிடித்துக் குண்டத்தில் சேர்க்கிறது. 3. அக்ஷமே ஹோமகுண்டம், 4. ஹோமகுண்டம் ஹோமம் முடிந்த பிறகு நேரம் செல்லச் செல்ல ஒளி குறைந்து கரியாய் கிடக்கும்; இங்கு சக்ராக்ஷம் எப்போதும் ஒளி குன்றுமல் இருக்கும். இந்த அக்ஷம் உங்களுக்கு

திவ்யபதவியை கொடுக்கட்டும். सप्तजिह्वा - அக்நி - 'காளீ, கராளீ, மநோஜவா, ஸுலோஹிதா, ஸுதூம்ர வர்ணு, ஸ்புலிங்கிநீ, விச்வதாஸா' என்று அக்நிக்கு ஏழுநாக்குகள்.

*अक्षं भवतां दिव्यं पदं दिश्यात् ।

**तुङ्गाद्दोरद्रिशृङ्गाद्दनुजविजयिनः स्पष्टदानोद्यमानां**
**शत्रुस्तम्बेरमाणां शिरसि निपततः स्रस्तमुक्तास्थिपुञ्जे ।**
**रक्तैरभ्यक्तमूर्तेर्विदलनगलितैर्व्यक्तवीरायितर्द्धेः**
**हर्यक्षस्यारिभङ्गं जनयतु जगतामीडितं क्रीडितं वः ॥**

துங்காத்தோரத்ரி ச்ருங்காத் தநுஜ
விஜயிந: ஸ்பஷ்ட தாநோத்யமாநாம்
சத்ருஸ்தம்பேரமாணும் சிரஸிநிபதத:
ஸ்ரஸ்த முக்தாஸ்தி புஞ்ஜே ।
ரக்தைரப்யக்த மூர்த்தேர் விதலந-
கலிதைர் வ்யக்த வீராயிதர்த்தே:
ஹர்யக்ஷஸ்யாரி பங்கம் ஜநயது
ஜகதாமீடிதம் க்ரீடிதம் வ: ॥ 65

திருவாழியின் அக்ஷமும் ஸிம்ஹமும் ஒன்றே; அக்ஷத்தின் செயலும் ஸிம்ஹத்தின் செயலும் ஒன்ருகவே இருக்கிறது. ஸிம்ஹம் மலைச்சிகரத்திலிருந்து யானைகளின் தலைமீது பாய்ந்து, அவற்றின் தலைகளிலிருந்து முத்துக்களை உதிர்த்து ரத்தத்தில் அளைந்து தன் வீர்யத்தைக் காட்டும், (அக்ஷமும்) திருவாழியும் எம்பெருமானுடைய ஈரிரண்டு மால்வரைத்தோளிலிருந்து (புஜத்திலிருந்து) அஸுர ராக்ஷஸர்களாகிற யானைகளின் மீது பாய்ந்து, எலும்புகளைச் சிதற அடித்து ரத்தத்தில் அளைந்து தன் வீர்யத்தைக் காட்டுகிறது. எல்லாலோகங்களாலும் புகழப்படுகிற

திருவாழியின் திருவிளையாடல் உங்களுடைய சத்ருக் களுக்குத் தோல்வியை உண்டுபண்ணட்டும்.

हरेः अक्षं हर्यक्षं - तस्य. திருமாலின் சக்ரா அக்ஷத்தி னுடைய, हरिणी अक्षिणी यस्य - तस्य (மஞ்சள் நிறமான கண்களை உடையது சிங்கம்) ஸிம்ஹத்தினுடைய. भङ्गं - கண்டனம் उद्यमः - முயற்சி.

*हर्यक्षस्य क्रीडितं वः अरिभङ्गं जनयतु ।

उन्मीलत्पद्मरागं कटकमिव धृतं बाहुना यन्मुरारेः
दीप्तान् रश्मीन् दधानं नयनमिव यदुत्तारकं विष्टपस्य ।
चक्रेशार्कस्य यद्वा परिधिरभिदधद्दैत्यहत्यामिवद्राक्
अक्षं पक्षे पतित्वा परिघटयतु वस्तद्द्रढिष्ठां प्रतिष्ठाम् ।

உன்மீலத் பத்மராகம் கடகமிவ-
த்ருதம் பாஹு்நா யந்முராரே:
தீப்தாந் ரச்மீந் ததாநம் நயனமிவ
யதுத்தாரகம் விஷ்டபஸ்ய ।
சக்ரேசார்க்கஸ்ய யத்வா பரிதி
ரபிதத் தைத்ய ஹத்யாமிவத்ராக்
அக்ஷம் பக்ஷேபதித்வா பரிகடயது
வஸ் தத்த்ரடிஷ்டாம் ப்ரிதிஷ்டாம் (66)

1. எம்பெருமான் அணிந்து கொள்ளும் தோள்வளை பத்மராகக்கற்களால் இழைக்கப்பட்டிருக்கும்; திரு வாழியாழ்வானின் அக்ஷம் தாமரைபோல் சிவந் திருக்கும்.

2. உலகுக்கு ஓர் கண்ணுக இருக்கும்; இன்னுர் இணையார் என்று இல்லாமல் ஆச்ரிதரை ஆபத்தி லிருந்து காப்பாற்றி உஜ்ஜீவிக்கச் செய்யும்.

3. சூரியனைச் சுற்றி இருக்கும் அக்ஷம், அஸுர ராக்ஷஸர்களின் அழிவை அறிவிக்கும் பரிவேஷம்

போல் இருக்கிறது. இப்படிப்பட்ட அக்ஷமானது உங்களுக்கு நிலையான பெருமதிப்பை விரைவில் அளித்திடுக.

परिवेष: - ஊர்கோள் मण्डलं हृदा - द्रविष्ठा, पक्षपतितया पक्षपाती भूत्वा ஸ்ரீ ஸுதர்சனாழ்வான் பகவானுக்கு உத்தமான திருவாபரணமாகவும், பகவானுக்குத் திருமேனிக் காவல் புரியும் நித்ய ஸூரியாகவும், ஆச்ரித ஸம்ரக்ஷக ராகவும் இருக்கிறார்.

*अक्षं वः द्रढिम्ना प्रतिष्ठां परिघटयतु ।

क्रीडत्प्राक्क्रोडदंष्ट्राहति दलितहिरण्याक्ष वक्षः कवाट-
प्रादुर्भूत प्रभूतक्षतजसमुदितारुण्यमुद्रं समुद्रम् ।
उन्मीलत्किंशुकाभैरुपहसदमितैरंशुभिस्संशयघ्नीं
अक्षं चक्रस्य दत्तामघशतशमनं दाशुषीं शेमुषीं वः ॥

க்ரீடத் ப்ராக் க்ரோட தம்ஷ்ட்ரா
ஹதி தலித ஹிரண்யாக்ஷவக்ஷ: கவாட
ப்ராதுர்பூத ப்ரபூத க்ஷதஜ-
ஸமுதிதாருண்ய முத்ரம் ஸமுத்ரம் ।
உந்மீலத் கிம்சுகாபை ருபஹஸ-
தமிதை ரம்சுபிஸ்ஸம்சயக்நீம்
அக்ஷம் சக்ரஸ்ய தத்தாமக-
சதசமநம் தாசுஷீம் சேமுஷீம் வ: ॥ 67

இந்த சுலோகத்தின் முதலிரண்டு அடிகள் வராஹாவதார சரித்திரத்தைக் கூறுகிறது. [ஹிரண்யாக்ஷன் என்னும் அஸுரன் தன் வலிமையி னால் பூமியைப் பாயாகச் சுருட்டி எடுத்துக் கொண்டு கடலில் மூழ்கி மறைந்துவிட்டான். தேவர்கள், மஹ ரிஷிகள் ஆகியோரின் வேண்டுகோளை ஏற்றுத் திரு மால் வராஹாவதாரத்தை மேற் கொண்டு கடலுள்

சென்று அவ்வஸுரனைத் தேடிப் பிடித்துப் போர் சென்று அவனை தன் தந்தங்களினால் குத்திக் கொன்று, பாதாளத்தோடு சேர்ந்திருந்த பூமியைத் தன் கோடு களினால் மேலே கொண்டு வந்து ஜல தத்வத்தின் மேல் விரித்தனன்]. முருக்க மலர் போன்று செந்நிற மான தேஜஸ்ஸை உடைய கோலவராஹம் தன் கோடு களினால் ஹிரண்யாக்ஷனின் மார்பில் குத்தியபோது ரத்தம் கிளர்ந்து கடல் நீரையே செந்நிறமாக்கியது. அந்த நிறத்தையும் தோற்கடிப்பதாக இருந்தது ஸுதர்சந அக்ஷத்தின் நிறம். அந்த அக்ஷம் உங் களது பாவஸமூஹத்தையும் அழித்து ஸம்சயங்களைப் போக்க வல்ல புத்தியைக் கொடுக்கட்டும்.

आक्रोड-ஆதிவராஹம், வராஹநாயனார். வானத் தெழுந்த மழைமுகில் போல் எங்கும் கானத்து மேய்ந்து களித்து விளையாடி ஏனத்துருவாய்' என்றார் ஆழ்வார்.

*अक्षं वः अघघतशमनं संशयघ्नीं च शेमुषीं दत्ताम् ।

**पद्मोल्लासप्रदं यज्जनयति जगतीमेधमान प्रबोधां**

**यस्यच्छायासमाना लसति परिसरे रोहिणी तारकाग्र्या ।**

**नानाहेत्युन्नतत्वं प्रकटयति च यत्प्राप्तकृष्णप्रयाणं**

**त्रेधा भिन्नस्य धाम्नस्समुदय इव तत्पातु वश्चाक्रमक्षम् ॥**

பத்மோல்லாஸ ப்ரதம் யஜ்ஜநயதி
ஜகதீமேதமாந ப்ரமோதாம்
யஸ்யச்சாயா ஸமாநா லஸதி
பரிஸரே ரோஹிணீ தாரகாக்ர்யா ।
நாநாஹேத்யுந்நதத்வம் ப்ரகடயதி ச
யத் ப்ராப்த க்ருஷ்ணப்ரயாணம்
த்ரேதா பிந்நஸ்ய தாம்நஸ் ஸமுதய
இவ தத் பாது வஸ்சாக்ரமக்ஷம் ॥ 68

உலகில் தேஜஸ்ஸானது, சூர்யன் சந்திரன் அக்நி என்று மூவகைப்பட்டிருக்கும் அந்த மூன்றும் சேர்ந்து அக்ஷமாக இருக்கிறது என்று இந்த சுலோகத்தில் கூறப்படுகிறது.

1. சூரியன் தாமரையை மலர்விக்கிறது. இருளை நீக்கிப் பிரகாசத்தை வளர்க்கிறான். தீயோரை அழித்து நல்லோரை ரக்ஷிப்பது என்ற ஸங்கல்பம் கொண்ட பெரிய பிராட்டியாரின் திருவுள்ளத்தை உகப்பிக்கிறான். உத்க்ருஷ்டமான ஞானத்தை வளர்க்கிறான்.

2. கிருத்திகா நக்ஷத்திரங்கள் ஏழு; மற்ற அச்விநி முதலான நக்ஷத்திரம் இருபத்தாறு; ஆக மொத்தம் முப்பத்து மூன்று நக்ஷத்திரங்கள். இவற்றுள் ரோஹிணீ நக்ஷத்திரத்தின் மீது சந்திரனுக்கு ப்ரேமம் அதிகம். ஸுதர்சந யந்திர அமைப்பில் ப்ரணவஸ்தாபநம் உண்டு என்று கூறப்படுகிறது. இப்படி ச்ரேஷ்டமாய் சிவந்த ஒளியுடன் அக்ஷம் விளங்குகிறது.

3. பல ஜ்வாலைகளில் அக்நி ஜ்வாலையே உயர்ந்தது; புகையைப் பின்பற்றிப் புகை வழியே அக்நி செல்லும்; அஸ்த்ரங்களில் சிறந்தது திருவாழி; க்ருஷ்ணனின் (எம்பெருமானின்) திருவுள்ளத்தைப் பின் பற்றியே இது செல்லும். இப்படிப்பட்ட ஸுதர்சந அக்ஷம் உங்களை ரக்ஷிக்கட்டும். रोहिणी - சிவந்தது; நக்ஷத்திரம், சிவப்பு, தூம: - கருமையான புகை; கிருஷ்ணன், अक्षमध्ये प्रणव: प्रणवमध्ये देव: तारका - நக்ஷத்திரம்; உத்தாரகா.

*अक्षं व: पातु ।

शोचिर्भिः पद्मरागद्रवसमसुषमैश्शोभमानावकाशं
प्रत्यग्राशोकरागप्रतिभटवपुषा भूषितं पूरुषेण ।
अन्तः स्वच्छन्दमग्नोत्थितभृगुतनयं क्षत्रियाणां क्षतानां
आरब्धं शोणितौघैस्सर इव भवतो दिव्यहेत्यक्षमव्यात् ॥

சோசிர்பி: பத்மராகத்ரவ ஸம
ஸுஷமைச் சோபமாநாவகாசம்
ப்ரத்யக்ராசோகராக ப்ரதிபட
வபுஷா பூஷிதம் பூருஷேண ।
அந்த: ஸ்வச்சந்த மக்நோத்தித
ப்ருகுதனயம் க்ஷத்ரியாணும் க்ஷதாநாம்
ஆரப்தம் சோணிதௌகைஸ்ஸர
இவபவதோ திவ்யஹேத்யக்ஷமவ்யாத் ॥ 69

இந்த ச்லோகத்தில் பரசுராம வ்ருத்தாந்தம் கூறப்படுகிறது. [ஸ்ரீமந்நாராயணன் ஜமதக்னி மஹரிஷிக்கும் ரேணுகைக்கும் குமாரனுக அவதரித்தவர். இவர் (பரசு எனப்படும்) கோடாலிப் படையை ஆயுதமாக வைத்திருந்தார். தந்தையைக் கொன்ற கார்த்த வீர்யார்ஜுனன் மீது கொண்டிருந்த கோபத்தினுல் அவனையும் அழித்து இருபத்தொரு தலை முறை க்ஷத்திரிய அரசர்களையும் கொன்று, அவர்களுடைய ரத்தத்திருல் ஏற்பட்ட குளத்தில் நீராடி, அதில் பித்ரு தர்ப்பணம் செய்ததாக வரலாறு.] பத்ம ராகத்ரவம் போல் சிவந்து பெரிய குழிபோல் இருக்கிறது சக்ராக்ஷம். அசோக மலர்போல் சிவந்த ஒளியையுடைய ஸுதர்சன புருஷன் அக்ஷத்தின் நடுவில் இருப்பதானது. ரக்த தடாகத்தில் மூழ்கிக் கிளம்பும் பரசுராமனே என்று சொல்லும்படி இருந்தது. அப்படிப்பட்ட சக்ராக்ஷம் உங்களை ரக்ஷிக்கட்டும்.

'रोचिर्भिः' என்ற பாடமும் உண்டு; எனினும் 'शोचिर्भिः' என்ற பாடம் யுக்தமாம்.

*अक्षं भवतः अव्यात् ।

मत्तानामिन्द्रियाणां कृतविषयमहा काननक्रीडनानां
सृष्टं चक्रेश्वरेण ग्रहणधिषणया वारिवद्वारणानाम् ।
गम्भीरं यन्त्रगर्तं कमपि कृतधियो मन्वते यत्प्रदेयात्
अस्थूलां संविदं वस्त्रिजगदभिमतस्थूललक्षं तदक्षम् ॥

மத்தாநாமிந்த்ரியாணும் க்ருத-
விஷய மஹா காநநக்ரீடநாநாம்
ஸ்ருஷ்டம் சக்ரேச்வரேண க்ரஹண
திஷணயா வாரிவத் வாரணுநாம் ।
கம்பீரம் யந்த்ர கர்த்தம் கமபி
க்ருததியோ மந்வதே யத்ப்ரதேயாத்
அஸ்தூலாம் ஸம்விதம் வஸ்த்ரிஜக
தபிமத ஸ்த்தூல லக்ஷம் ததக்ஷம் ॥ 70

பெரிய காடுகளில் கொழுத்துத் திரியும் மதயானைகளை (மத்த கஜங்களை)ப் பிடிப்பதற்காக அரசர்கள் மிகவும் ஆழமான பெரும் பள்ளத்தை வெட்டுவிப்பார்கள் இந்த யானைவிழும் பள்ளத்திற்கு 'வாரீ' என்று பெயர். விஷயாந்தரங்களாகிற காடுகளில் மதம் கொண்டு திரியும் ஐம்புலன்களாகிற இந்த்ரியங்களை மடக்கிப்பிடிக்கும் குழியாக இருக்கிறது சக்ராக்ஷம். இந்தக் குழியை வெட்டினவர் திருவாழியாழ்வான். அப்படிப்பட்ட ஸுதர்சநாக்ஷமானது உங்களுக்கு ஸூக்ஷ்ம புத்தியை அளிக்கட்டும்.

चक्र - பூமண்டலம், திருவாழி. गम्भीर-ஆழமான. वारी - கஜ பந்தநீ, யானை பிடிக்கும் பள்ளம். திருவாழியாழ்வானின் அநுக்ரஹம் இருந்தால் ஐம்புலன்களையும் அடக்கி மனத்தை நல்வழியில் செலுத்த முடியும்.

*अक्षं वः अस्थूलां संविदं प्रदेयात् ।

प्राणादीन् संनियम्य प्रणिहितमनसां योगिनामन्तरङ्गे
तुङ्गं संकोच्यरूपं विरचित दहराकाशकृच्छ्रासिकेन ।
प्राप्तं यत्पूरुषेण स्वमहिम सदृशं धामकामप्रदं वः
भूयात् तद्भूर्भुवस्स्वस्त्रयवरिवसितं पुष्कराक्षायुधाक्षम् ॥

ப்ராணதீந் ஸம்நியம்ய ப்ரணிஹித
மநஸாம் யோகிநாமந்தரங்கே
துங்கம் ஸங்கோச்யரூபம் விரசித
தஹராகாச க்ருச்ச்ராஸிகேந ।
ப்ராப்தம் யத்பூருஷேண ஸ்வ-
மஹிம ஸத்ருசம் தாமகாமப்ரதம் வ:
பூயாத்தத் பூர்புவஸ்வஸ்த்ரய
வரி வஸிதம் புஷ்கராக்ஷாயுதாக்ஷம் ॥ 71

ப்ராணன் முதலான வாயுக்களை அடக்கி மனே திடத்துடன் இருக்கும் யோகிகளின் ஹ்ருதயத்தில் உள்ள மிகவும் ஸூக்ஷ்மமான தஹராகாசத்தில், தன் பெரிய வடிவைச் சுருக்கிக் கொண்டு திருவாழியாழ் வான் மிகவும் சிரமப்பட்டுக்கொண்டு வீற்றிருக்கிருர். அவருக்குத் தன் பெருமைக்கு ஏற்றவாறு தாராளமாக வீற்றிருக்க அக்ஷ ஸ்தானம் கிடைத்தது. அதில் திருவாழியாழ்வான் விசாலமான திருமேனியுடன் மிக வும் மகிழ்வுடன் இருக்கிருர். மூவுலகங்களிலும் பூஜிக் கப்படுகிற செங்கண்மாலின் திவ்யாயுதத்தினுடைய மிகப் பெரிய சக்ராக்ஷமானது உங்களுக்கு ஸர்வா பீஷ்டங்களையும் கொடுக்கட்டும்.

भूर्भुवस्स्वः - பூலோக புவர்லோக ஸ்வர்லோகங்கள்.
पुष्कराक्षः - செங்கண்மால்.

*पुष्कराक्षायुधाक्षं वः कामप्रदं भूयात् ।

विद्वान् वीध्रेण धाम्ना चरणनखभुवा बद्धवासस्य मध्ये
चक्राध्यक्षस्य बिभ्रत्परिहसितजपापुष्पकोशान् प्रकाशान् ।
शुभ्रैरभ्रैरदभ्रैश्शरदि तत इतो व्योम विभ्राजमानं
प्रातस्त्यादित्यरोचिस्ततमिव भवतः पातुराथाङ्गमक्षम् ॥

வித்வான் வீத்ரேண தாம்நா
சரணநகபுவா பத்தவாஸஸ்ய மத்யே
சக்ராத்யக்ஷஸ்ய பிப்ரத் பரிஹஸித
ஜபா புஷ்பகோசாந் ப்ரகாசாந்,
சுப்ரை ரப்ரை ரதப்ரைச் சரதி
தத இதோ வ்யோம விப்ராஜமாநம்
ப்ராத ஸ்த்யாதித்ய ரோசி ஸ்தத-
மிவ பவத: பாது ராதாங்கமக்ஷம் ॥ 72

சரத் காலத்தில் ஸூர்யோதய ஸமயத்தில் தோற்றமளிக்கும் ஆகாசம் போல் சக்கரத்தின் அக்ஷம் இருக்கிறது.

சரத் காலத்தில் ஸூர்யோதய ஸமயத்தில் ஆகாசத்தில் வெண்ணிறமான மேகக் கூட்டங்கள் நிறைந்திருக்கும். சில இடங்களில் வெண்மையான நிறமும், சில இடங்களில் (அடி வானத்தில் தோன்றும்) ஸூரியனின் செஞ்சுடர் பரவி இருக்கும். அதுபோல் திருவாழியாழ்வானின் திருவடி நகங்களிலிருந்து தோன்றும் வெண்சுடர்களும், ஜபாகுஸூமம் என்ற புஷ்பம் போன்ற செஞ்சுடர்களும் எங்கும் கலந்து காணப்படுகின்றன. அப்படிப்பட்ட ஆகாசம் போல் இருக்கும் திருவாழியின் அக்ஷம் உங்களைக் காப்பாற்றட்டும்.

व्योम - ஆகாசம், शुभ्रैः अभ्रैः अदभ्रैः - வெளுத்த பல மேகங்களால், प्रातस्त्य - உதய காலத்திய, वीध्रं - நிர்மலம்.

*राथाङ्गं अक्षं भवतः पातु ।

**श्रीवाणी वाङ् मृडान्यो विदधति भजनं शक्तयो यस्य दिक्षु**
**प्राहु र्व्यूहं यदाद्यं प्रथममपि गुणं भारती पाञ्चरात्री ।**
**घोरां शान्तां च मूर्तिं प्रथयति पुरुषः प्राक्तनः प्रार्थनाभिः**
**भक्तानां यस्यमध्ये विशतु तदनघामक्षमध्यक्षतां वः ॥**

*ஸ்ரீ வாணீ வாங் ம்ருடாந்யோ விதததி*
*பஜநம் சக்தயோ யஸ்ய திக்ஷு*
*ப்ராஹு வ்யூஹம் யதாத்யம்*
*ப்ரதமமபிகுணம் பாரதீ பாஞ்ச ராத்ரீ,*
*கோராம் சாந்தாம் ச மூர்த்திம் ப்ரதயதி*
*புருஷ: ப்ராக்தந: ப்ரார்த்தநாபி:*
*பக்தாநாம் யஸ்ய மத்யே திசது*
*ததநகாம் அக்ஷமத்யக்ஷதாம் வ: ||* 73

ஸ்ரீ ஸுதர்சனுக்ஷமானது, வாஸுதேவ, ஸங்கர்ஷண, ப்ரத்யும்ன, அநிருத்தர்கள் என்று சொல்லப்படுகிற ப்ரதம வ்யூஹமாகவும், ஞானம், பலம், ஐச்வர்யம் வீர்ய சக்தி தேஜஸ் என்கிற ஆறு குணங்களுள் ஞானம் என்கிற ப்ரதம (முதல்) குணமாக அஹிர்புத்ந்ய ஸம்ஹிதைகளிலே சொல்லப்படுகிறது. ஸ்ரீ, வாணீ, வாக், ம்ருடாநீ ஆகிய நான்கும் வாசுதேவாதிகளான நான்கு மூர்த்திகளின் சக்திகள். இவை நான்கும் நான்கு திசைகளிலும் இருந்து கொண்டு ஸுதர்சநரின் அக்ஷத்தை ஸ்தோத்ரம் செய்கின்றன என்று பாஞ்ச ராத்ர சாஸ்திரம் கூறுகிறது. பக்தர்கள் மங்களாசாஸனம் செய்வதற்காக ஸேவிக்கும்போது, சாந்தமூர்த்தியாக ஸுதர்சனுழ்வான் ஸேவை ஸாதிக்கிறுர். பக்தர்கள் அநிஷ்ட நிவாரணத்திற்காகப் பிரார்த்திக்கும்போது பயங்கர உருவத்துடன் ஸேவை ஸாதிக்கிறுர். அப்படிப்பட்டவர் உங்களுக்கு ஆதிக்கம் செலுத்தும் தன்மையை அளிக்கட்டும்.

*अक्षं वः अध्यक्षतां विशतु ।

**रक्षः पक्षेण रक्षत् क्षतममरगणं लक्ष्यवैलक्ष्यमाजो**
**लक्ष्मीमक्षीयमाणां बलमथनभुजे वज्रशिक्षानपेक्षे ।**
**निक्षिप्य क्षिप्रमध्यक्षयति जगति यद्दक्षतां दिव्यहेतेः**
**अक्षामामक्षमक्षमां तत् क्षपयतु भवतामक्षजिल्लक्षमक्षम् ॥**

*ரக்ஷ: பக்ஷேண ரக்ஷத் க்ஷதமமர-*
*கணம் லக்ஷ்ய வைலக்ஷ்ய மாஜௌ*
*லக்ஷ்மீ மக்ஷீய மாணும் பலமதன*
*புஜே வஜ்ர சிக்ஷாநபேக்ஷே ।*
*நிக்ஷிப்ய க்ஷிப்ரமத்யக்ஷயதி*
*ஜகதியத் தக்ஷதாம் திவ்யஹேதே:*
*அக்ஷாமாமக்ஷமாம் தத் க்ஷபயது*
*பவதாம் அக்ஷ ஜில்லக்ஷ மக்ஷம் ॥* **74**

போர்க்களத்தில் ராக்ஷஸர்களாலே தாக்கப்பட்டு வெட்கமடைந்து தலைகுனிந்து நிற்கும் தேவகணத்தை ரக்ஷித்து நிற்கிறது சக்கரத்தின் அக்ஷம். வஜ்ராயுதத்தைப் பிரயோகிக்கும் முறை அறிய இசையாத இந்திரனுடைய கையிலும் குன்றாத விஜய லக்ஷ்மியைக் கொண்டு வந்து சேர்த்து (வஜ்ராயுதத்தினால் ஆகவேண்டிய காரியத்தைத் தானே நிர்வஹித்து) தன் ஸாமர்த்தியத்தைச் சக்ராக்ஷம் உலகுக்கு உணர்த்துகிறது. இப்படிப்பட்ட ஸுதர்சனத்தின் அக்ஷத்தினால் கொடிய வியாதி போன்ற பொருமை நீங்கட்டும்.

दिव्यहेतेः - ஸுதர்சநாழ்வான் दक्षता - வல்லமை अक्षमां - பொருமையை, अक्षजिल्लक्षमक्षम् – अक्षं - இந்த்ரிய ஸமூஹம், அதை ஜயித்தவர்கள் अक्षजित् । அஹிர் புத்ந்யாதிகள் அவர்களுக்கு लक्ष्यं - லக்ஷ்யம். 'भजदहिर्बुध्न्यलक्ष्य' - என்ருர் வேதாந்த தேசிகன்.

*अक्षं भवतां अक्षमां क्षपयतु ।

अथ पुरुषवर्णनम् ।

ज्योतिश्चूडाललमौलि स्त्रिनयनवदनष्षोडशोत्तुङ्गबाहुः
प्रत्यालीढेनतिष्ठन् प्रणवशशधराधार षट्कोणवर्ती ।
निस्सीमेन स्वधाम्ना निखिलमपि जगत् क्षेमवन्निर्मिमाणः
भूयात् सौदर्शनो वः प्रतिभटपरुषः पूरुषः पौरुषाय ॥

ஜ்யோதிச்சூடாலமௌலி ஸ்த்ரிநயன
வதனஷ்ஷோடசோத்துங்க பாஹு:
ப்ரத்யாலீடேந திஷ்டந் ப்ரணவ
சச தராதார ஷட்கோண வர்த்தீ ।
நிஸ்ஸீமேந ஸ்வதாம்நா நிகிலமபி
ஜகத் க்ஷேமவந்நிர்மிமாண:
பூயாத் ஸௌதர்சநோவ ப்ரதிபட
பருஷ: பூருஷ: பௌருஷாய ॥ 75

(இது முதல் 100 சுலோகம் வரை ஸுதர்சந புருஷ வர்ணநம்)

ஜ்யோதிர்மயமான ஊர்த்வாக்ரமான ஜடா முடியையுடையவராய், மூன்று கண்களைக் கொண்டவராய், பதினாறு திருக்கைகளைக் கொண்டவராய், இடத்திருவடியை நீட்டிக்கொண்டு வலத்திருவடியைக் குறுக்கி நிற்பதாகிற ப்ரத்யாலீடஸ்திதியில் நிற்பவராய், ப்ரணவத்தையும் சந்திர மண்டலத்தையும் ஆதாரமாகக் கொண்ட ஷட் கோணத்தில் இருப்பவராய், எல்லையில்லாத தன் தேஜஸ்ஸால் எல்லாவுலகங்களுக்கும் க்ஷேமத்தை அளிப்பவராய், அஸுர ராக்ஷஸர்களுக்குக் கொடியவராயும் இருக்கும் திருவாழியாழ்வான் உங்களுக்கு பௌருஷத்தை அளிக்கட்டும்.

முன் பக்கத்தில் சந்திர மண்டலத்தையும், அதில் பிரணவத்தையும், அதன்மேல் ஷட்கோணத்தையும்

எழுதி, அதன்மேல் ஸுதர்சநாழ்வானை ப்ரதிஷ்டா பனம் செய்வது ஸுதர்சனயந்த்ரம் அமைக்கும் முறையாகும்.

वामपाद प्रसारेण, दक्षिणपाद सङ्कोच स्थितिः-प्रत्यालीढं ।

*सौदर्शनः पूरुषः वः पौरुषाय भूयात् ।

वाणी पौराणिकी यं प्रथयति महितं प्रेक्षणं कैटभारेः
शक्तिर्यस्येषु दंष्ट्रानखपरशुमुखव्यापिनी तद्विभूत्याम् ।
कर्तुं यत्तत्त्वबोधो न निशितमतिभिर्नारदाद्यैश्च शक्यः
दैवीं वो मानुषीं च क्षिपतु स विपदं दुस्तरामस्त्रराजः ॥

வாணீ பௌராணிகீ யம் ப்ரதயதி
மஹிதம் ப்ரேக்ஷணம் கைடபாரே:
சக்திர்யஸ்யேஷு தம்ஷ்ட்ரா நக-
பரசுமுக வ்யாபிநீதத்விபூத்யாம் ।
கர்த்தும் யத்தத்வ போதோ
ந நிசிதமதிபிர் நாரதாத்யைஸ்ச சக்ய:
தைவீம்வோ மாநுஷீம் ச க்ஷிபது
ஸவிபதம் துஸ்தராமஸ்த்ர ராஜ: ॥ 76

பகவத் சாஸ்த்ரங்கள் திருவாழியாழ்வானை பரவாஸுதேவனுடைய ஸங்கல்பமாகத் தெரிவிக்கின்றன. திருவாழியாழ்வானுடைய சக்தியானது எம்பெருமானின் விபவாவதாரங்களில் ராமாவதாரத்தில் அவனுடைய பாணங்களிலும், வராஹாவதாரத்தில் கோரப் பற்களிலும், நரஸிம்ஹாவதாரத்தில் நகங்களிலும், பரசுராமாவதாரத்தில் கோடாலியிலும், மற்ற அவதாரங்களில் அந்தந்த அவதாரங்களில் மேற்கொண்ட ஆயுதங்களிலும் ஆவேசித்து இருந்தது, வாமனாவதாரத்தில் வாமனனின் கை பவித்

திரத்திலும் திருவாழியின் சக்தி ஆவேசித்து இருந்தது. திருவாழியின் உண்மையான ஸ்வரூபத்தை நாரதாதி மஹரிஷிகளாலும் அறிந்து கொள்ள முடியாது. அப்படிப்பட்ட திருவாழியாழ்வான் தைவாதீநமும், மநுஷ்யாதீநமுமான ஆபத்தைப் போக்கட்டும்.

'சுக்கிரன் கண்ணைத் துரும்பால் கிளறிய, சக்கரக் கையன்' என்றார் பெரியாழ்வார்.

* सः अस्त्रराजः वः दैवीं मानुषीं च विपदं क्षिपतु ।

रूढस्ताराल्वाले रुचिरदलचयः श्यामलैश्शस्त्रजालैः
ज्वालाभिस्सप्रवालः प्रकटितकुसुमो बद्धसंघैः स्फुलिङ्गैः ।
प्राप्तानां पादमूलं प्रकृतिमधुरया च्छायया तापहृद्धः
दत्तामुद्दोः प्रकाण्डः फलमभिलषितं विष्णुसंकल्पवृक्षः ॥

ரூடஸ்தாராலவாலே ருசிரதலசய:
ச்யாமளைச் சஸ்த்ர ஜாலை:
ஜ்வாலாபிஸ்ஸப்ரவாள: ப்ரகடித-
குஸுமோ பத்தஸங்கை: ஸ்புலிங்கை: ।
ப்ராப்தாநாம் பாதமூலம் ப்ரக்ருதி
மதுரயா ச்சாயயா தாபஹ்ருத்த:
தத்தாமுத்தோ: ப்ரகாண்ட: பலமபி-
லஷிதம் விஷ்ணுஸங்கல்ப வ்ருக்ஷ: ॥ 77

விரும்பிய பலன்களைக் கொடுக்கும் விஷ்ணு ஸங்கல்பமும், சக்கரத்தாழ்வாராகிற கல்ப விருக்ஷமும் ஒன்றே. 1. திருவடிகளை ஆச்ரயித்தவர்க்கு, இயற்கையான தன்னுடைய இனிய நிழலால் (ஒளியால்) ஸமஸாரதாபத்தைப்போக்கி பகவத்ஸங்கல்பமானது (விஷ்ணு ஸங்கல்பமானது) விரும்பியபலன்களைக்

கொடுக்கும். 2. 'ஓம்' என்கிற ப்ரணவமாகிறபாத்தியில், கறுத்த ஆயுத ஸமூகங்களாகிற இலைகளையும், ஜ்வாலைகளாகிற தளிர்களையும் தீப்பொறிகளாகிற புஷ்பங்களையும் கொண்டிருக்கும் திருவாழியாழ்வானாகிற கற்பகமரம், தன்னை அடைந்தவர்களுக்கு நிழல் தந்து வெப்பத்தைப் போக்கி, உயர்ந்த கிளைகளாகிற திருக்கைகளால் உங்களுக்கு வேண்டிய பலனைக் கொடுக்கட்டும்.

वार आलवालं - ப்ரணவமாகிற பாத்தி प्रकाण्डः - கிளை पादमूलं - திருவடிவாரம், மரத்தடி. प्रवालः - தளிர். 'विविध संकल्प कल्पक' என்றார் தேசிகன்.

* विष्णुसंकल्पवृक्षः वः अभिलषितं फलं दत्ताम् ।

धाम्नामैरम्मदानां निचयमिव चिरस्थायिनां द्वादशानां
मातंण्डानां समूढं मह इव बहुलां रत्नभासामिवर्द्धिम् ।
अर्चिस्संघातमेकीकृतमिव शिखिनां बाडवाग्रेसराणां
शङ्कन्ते यस्य रूपं स भवतु भवतां तेजसे चक्रराजः ॥

தாம்நாமைரம்மதாநாம் நிசயமிவ
சிரஸ்த்தாயிநாம் த்வாதசாநாம்
மார்த்தண்டாநாம் ஸமூடம் மஹ
இவ பஹுலாம் ரத்நபாஸாமிவர்த்திம் ।
அர்ச்சிஸ்ஸங்காதமேகீ க்ருதமிவ
சிகிநாம் பாடவாக்ரேஸாணும்
சங்கந்தே யஸ்ய ரூபம் ஸபவது
பவதாம் தேஜஸே சக்ரராஜ: ॥ 78

நிலைத்து மிளிரும் மின்னலொளிகளின் திரளோ! த்வாதச ஆதித்யர்களின் திரண்ட தேஜஸ்ஸோ! ரத்னங்களின் ஒளி ஸம்ருத்தியோ! படபாக்நிகளைக்

காட்டிலும், ச்ரேஷ்டமான அக்நிகளின் தேஜோ ராசியோ! என்று மஹான்களும் கலங்கிக் கூறும்படி யான ரூபத்தையுடைய திருவாழியாழ்வான் உங் களுக்கு தேஜஸ்ஸை அளிக்கட்டும்.

मेघज्योतिः इरम्मदः - इत्यमरः, इरम्मदस्य संबन्धीनि ऐरम्मदानि इति तद्धितवृत्तिः.

மின்னல் நிலைத்திராது, ஆனால் चिरस्थायिनां என்று விசேஷணம் இட்டுக் கூறியது अभूतोपमा (அபூதோ பமை).

* चक्रराजः भवतां तेजसे भवतु ।

उग्रं पश्याक्षमुद्यद् भ्रुकुटि समुकुटं कुण्डलि स्पष्टदंष्ट्रं
चण्डास्त्रैर्बाहुदण्डै र्लसदनलसमक्षौमलक्ष्योरुकाण्डम् ।
प्रत्यालीढस्थपादं प्रथयतु भवतां पालनव्यग्रमग्रे
चक्रेशोऽकालकालेरितभटविकटाटोपलोपाय रूपम् ॥

உக்ரம் பச்யாக்ஷமுத்யத் ப்ருகுடி
ஸமுகுடம் குண்டலி ஸ்பஷ்ட தம்ஷ்ட்ரம்
சண்டாஸ்த்ரைர் பாஹுதண்டைர்
லஸதநல ஸமக்ஷௌம லக்ஷ்யோருகாண்டம் ।
ப்ரத்யாலீடஸ்த்த பாதம் ப்ரதயது
பவதாம் பாலந வ்யக்ரமக்ரே
சக்ரேசோ (அ) கால காலேரித
பட விகடாடோப லோபாய ரூபம் ॥ 79

தீப்பொறி பறக்கும் கண்களையும், நெறித்த புருவங்களையும், கிரீடம், காதணிகள் (கர்ணாபரணம்) முதலியவற்றையும், கோரப்பற்களையும், கைகளில் பயங்கரமான ஆயுதங்களையும், மெல்லிய பட்டு

வஸ்திரம் அணிந்திருப்பதால் விரும்பிக்காணும் தொடைகளையும், இடக்காலை நீட்டி வலக்காலைக் குறுக்கி நின்று, ரக்ஷிப்பதில் ஊக்கமுடையதுமான ரூபத்தையுடைய திருவாழியாழ்வான், அகாலத்தில் ம்ருத்யுவினுல் ஏவப்பட்ட யமபடர்களுடைய கோலாஹலங்களை (அட்டஹாஸங்களை) ஒழிப்பதற்கு ப்ரகாசிப்பிக்கவேணும். யம படர்களை வெருட்டி ஓட்டி அருள வேண்டும்.

उग्रं यथा तथा पश्यन्तीति - उग्रं पश्यानि, उग्रपश्यानि अक्षीणि यस्य तत् उग्रंपश्याक्षम् । कुण्डले अस्यस्तः इति कुण्डलि ।

*चक्रेशः भवतां पालनव्यग्रं रूपं अप्रथयत् ॥

चक्रं कुन्तं कृपाणं परशुहुतवहावङ्कुशं दण्डशक्ती
शंखं कोदण्डपाशौ हल मुसलगदा वज्रशूलांश्चहेतीन् ।
दोर्भिस्सव्यापसव्यैर्दधदतुलबल स्तम्भिताराति दर्पैः
व्यूहस्तेजोभिमानी नरकविजयिनो जृम्भतां संपदे वः ॥

சக்ரம் குந்தம் க்ருபாணம் பரசு-
ஹுதவஹாவங்குசம் தண்டசக்தீ
சங்கம் கோதண்டபாசௌ ஹலமுஸல
கதா வஜ்ரசூலாம்ச ஹேதீந் ॥
தோர்ப்பிஸ்ஸவ்யாப ஸவ்யைர்
ததததுலபல ஸ்தம்பிதாராதி தர்ப்பை!
ஸ்யூஹஸ்தேஜோபிமாநீ நரக
விஜயிநோ ஜ்ரும்பதாம் ஸம்பதே வ: ॥ 80

சக்ரம் முதலிய பதினுறு ஆயுதங்களையும் (ஒப் பற்ற பலத்தினுல் சத்ருக்களின் கொழுப்பை அடக்

கினை) தன்னுடைய இடக்கை வலக்கைகளால் தாங்கி நிற்பவரும், நரகாசுரனை அழித்த எம்பெருமானுடைய தேஜஸ் எல்லாம் தன்னுடையது என்று அபிமானிக்கும் அவதாரமான திருவாழியாழ்வான் உங்களுடைய ஸம்பத்துகளுக்காக ஓங்கி விளங்கட்டும். 'திகிரிமழு உயர்குந்தம் தண்டங்குசம்' - என்றார் தேசிகன், திருவாழியாழ்வானுக்கு வலப்பக்கம் எட்டு திருக்கைகள்; இடப்பக்கம் எட்டு திருக்கைகள். அவர் ஒவ்வொரு திருக்கையிலும் ஒவ்வொரு ஆயுதமாக, பதினாறு திருக்கைளிலும் பதினாறு ஆயுதங்களை ஏந்தி இருக்கிறார்.

வலப்பக்கம்: சக்கரம், ஈட்டி, கத்தி, கோடாலி, சதமுகாக்கனி, மாவட்டி, தண்டு, வேல். இடப்பக்கம்:- சங்கு, வில், கண்ணி, கலப்பை, உலக்கை, கதை, வஜ்ரம், சூலம்,

*नरकविजयिन: तेजोभिमानी व्यूह: व: संपदे जृम्भताम् ।

पीतं केशे रिपोरप्यसृजिरथपदे संश्रितेऽप्युत्कटाक्षं
चन्द्राध: कारियन्त्रे वपुषिच दलने मण्डले च स्वराङ्कम् ।
हस्ते वक्त्रे च हेतिस्तबकितमसमं लोचने मोचने च
स्तावस्तोकाय धाम्ने सुरवरपरिषत्सेवितं दैवतं व: ॥

பீதம் கேசே ரிபோரப்யஸ்ருஜி
ரதபதே ஸம்ச்ரிதேப்யுத் கடாக்ஷம்
சந்த்ராத: காரியந்த்ரே வபுஷிச
தலநே மண்டலே ச ஸ்வராங்கம்,
ஹஸ்தே வக்த்ரே ச ஹேதிஸ்தபகித-
மஸமம் லோசநேமோசநே ச
ஸ்தாதஸ்தோகாய தாம்நே ஸுரவர
பரிஷத் ஸேவிதம் தைவதம் வ: ॥ 81

1. ஸுதர்சனம் பொன்மயமான கேசத்தையுடையது; சத்ருக்களின் ரத்தத்தைக் குடித்தது (पीतं - பொன்மயம், பானம் பண்ணியது)

2. சக்கரத்தில் கம்பீரமான அக்ஷத்தையுடையது; ஆச்ரிதர்கள் பால் தோன்றும் கடாக்ஷத்தையுடையது, (அக்ஷம், உத்கடாக்ஷம்)

3. யந்திரத்தில் சந்திரனைத்தாழ்த்தியது; ஒளியினால் சந்திரனை வென்றது.

(चन्द्रारि: காரி - ஸுதர்சநயந்திரத்தில் சந்திரனை எழுதி அதன்மேல்யந்த்ரஸ்தாபனம் செய்வது வழக்கம்)

4. சத்ருக்களைக் கண்டிக்கும்போது வெற்றியை உணர்த்தும் ஸிம்ஹநாதம்; சந்திரமண்டலம் ப்ரணவத்தை அடையாளமாகக் கொண்டிருக்கும். स्वरं - ஒலி, ப்ரணவம்.

5. ஆயுதத்தைவைத்துக் கொண்டிருக்கும். கை; (हेतिः - ஆயுதம், ஜ்வாலை),

6. திருக்கண்களில் ஸமமில்லாத பார்வை; ஒப்பற்றது, (असमं - விஸமம், ஒப்பற்றது) தேவர்களின் தலைவர்களால் ஸேவிக்கபடும் திருவாழியாகிற தெய்வம் உங்களுக்கு அளவற்ற தேஜஸ்ஸைக் கொடுக்கட்டும்.

* दैवतं वः अस्तोकायधाम्ने स्तात् ।

**चित्राकारैः स्वचारैर्मितसकलजगज्जागरूकप्रतापः**

**मन्त्रं तन्त्रानुरूपं मनसि कलयतो मानयन्नात्मगुह्यान् ।**

**पश्चाज्जृस्फूर्ति निर्वर्तित रिपुविजयो धामषण्णां गुणानां**

**लक्ष्मीं राजासनस्थो वितरतु भवतां पूरुषश्चक्रवर्ती ॥**

சித்ராகாரை: ஸ்வசாரைர் மித
ஸகல ஜகஜ்ஜாக ரூகப்ரதாப:
மந்த்ரம் தந்த்ராநுரூபம் மநஸி
கலயதோ மாநயந்நாத்ம குஹ்யாந் ।
பஞ்சாங்க ஸ்பூர்த்தி நிர்வர்தித
ரிபுவிஜயோ தாமஷண்ணும் குணாநாம்
லக்ஷ்மீம் ராஜாஸநஸ்த்தோ விதரது
பவதாம் பூருஷச் சக்ரவர்த்தீ ॥ 82

*திருவாழியாழ்வான் சக்ரவர்த்தீ

1. திருவாழியாழ்வான் கண்டநலுண்டன ப்ரஹரணம் ஆகியவற்றைச் செய்து கொண்டு, ஸஞ்சாரங்களால் எல்லா லோகங்களிலும் வியாபித்து இருப்பார்; சக்ரவர்த்தி (ராஜ புருஷன்) தன்னுடைய ஒற்றர்களை (சாரர்களை) உலகமெங்கும் பரவச் செய்வான்.

2. அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை முதலானவற்றில் சொல்லியபடி ஸு தர்சன மந்திரத்தை மறைத்து வைத்துக் கொண்டு தியானிப்பவர்களிடம் திருவாழி யாழ்வான் திருவுள்ளம் இரங்குவார். ராஜ ரஹஸ்ய மான விஷயங்களை வெளியிடாமல் அந்தரங்கமாக வைத்துப் பேசும் ராஜாங்க புருஷர்களை அரசன் பஹு மானிப்பான்.

3. திருவாழியாழ்வான் ஜ்வாலை, நாபி, நேமி, அரம், அக்ஷம் என்ற ஐந்து அங்கங்களால் சத்ருக் களை வெல்வார்.

कर्मणामारम्भोपाय:, पुरुषद्रव्यसम्पत् विनिपातप्रती-
कार:, देशकालविभाग: कार्यसिद्धि:

ஆகிய ஐந்து செயல்களால் அரசன் சத்ருக்களை வெல்வான்.

4. ஞான, சக்தி, பலம், ஐச்வர்யம், வீர்யம், தேஜஸ் ஆகிய ஆறு குணங்களுக்கு இருப்பிடமான வர் திருவாழி. ஸந்தி விக்ரஹ யாந ஆஸன த்வைதீ பாவ ஸம்ச்ரயங்களுக்கு இருப்பிடமானவன் அரசன்.

5. திருவாழி சந்த்ர மண்டல ஆஸனத்திலும் அரசன் ஸிம்ஹாஸனத்திலும் அமர்ந்திருப்பான். சக்ர வர்த்தியான இத்தகைய திருவாழி உங்களுக்குச் செல்வத்தை அளிக்கட்டும்.

*चक्रवर्तीपुरुषः भवती लक्ष्मीं वितरतु ।

अक्षावृत्ताभ्रमालाम्बरविवरलुठच्चन्द्रचण्डद्युतीनि
ज्वालाजालावलीढ स्फुटतुडुपटली पाण्डुदिङ्मण्डलानि ।
चक्रान्ताक्रान्तचक्राचलचलितमही चक्रवालार्तशेषाणि
अस्त्रग्रामाग्रिमस्य प्रददतु भवतां प्रार्थितं प्रस्थितानि ॥

அக்ஷாவ்ருத்தாப்ரமாலாம்பர
விவர லுடச்சந்த்ர சண்டத்யுதீநி
ஜ்வாலா ஜாலாவலீட ஸ்புடதுடு
படலீ பாண்டு திங்மண்டலாநி ।
சக்ராந்தாக்ராந்த சக்ராசல சலித
மஹீசக்ரவாலார்த்தசேஷாணி
அஸ்த்ர க்ராமாக்ரிமஸ்ய ப்ரததது
பவதாம் ப்ரார்த்திதம் ப்ரஸ்திதாநி ॥ 83

ஸ்ரீ ஸுதர்சநாழ்வானின் யாத்திரை (ஸஞ்சார) வேகத்தை இந்த சுலோகத்தில் வருணிக்கிறார். ஸ்ரீ ஸுதர்சநர் வேகமாகச் செல்லும்போது மேகக் கூட்டங்கள் அக்ஷங்களில் சுழன்று வரும்; சூரியனும் சந்திரனும் அரங்களுக்கு இடையே புரளும்; நக்ஷத் திரக் கூட்டங்கள் ஸுதர்சந ஜ்வாலைகளால் மோதப் பட்டு திசைகளின் எல்லையில் சிதறிப்பரவி வெளிச்

சத்தை (வெண்மையை) உண்டாக்கும். சக்ரநேமி யானது சக்ரவாள பர்வதம் வரை செல்வதால் மலை நடுங்கி, அதனால் பூமியும் நடுங்கி, பூமியைத் தாங்கும் அரவரசனும் (திருவனந்தாழ்வானும்) துன்பமடைவார். இத்தகைய திருவாழியின் ஸஞ்சாரமானது நீங்கள் விரும்பியவற்றை உங்களுக்குக் கொடுக்கட்டும்.

* अस्त्रग्रामाग्रिमप्रस्थितानि भवतां प्रार्थितं प्रददतु ।

**शूलं त्यक्तात्मशीलं सृणिरणुकघृणिः पट्टिसः स्पष्टसादः**
**शक्तिश्शालीनशक्तिः कुलिशमकुशलं कुण्ठधारः कुठारः ।**
**दण्डश्चण्डत्वशून्यो भवति तनु धनुर्यत्पुरस्तात्सवः स्तात्**
**ध्वस्ताशेषास्त्रगर्वो रथचरणपतिः कर्मणे शार्मणाय ।।**

சூலம் த்யக்தாத்மசீலம் ஸ்ருணிரணுக-
க்ருணி: பட்டிஸ: ஸ்பஷ்ட ஸாத:
சக்திச் சாலீநசக்தி: குலிசமகு-
சலம் குண்டதார: குடார: ।
தண்டச்சண்டத்வசூந்யோ பவதி
தநுதநுர்யத்புரஸ்தாத்ஸவ: ஸ்தாத்
த்ரஸ்தாசேஷாஸ்த்ர கர்வோ
ரதசரணபதி: கர்மணே சார்மணாய ॥ 84

மிகப்ரஸித்தமான ஆயுதங்கள் எல்லாம் திருவாழியின் முன்னே இருந்தும் இல்லாதது போல் ஆயின. சூலம் சத்ருக்களை அழிக்கும் ஸாமர்த்யத்தை விட்டது; அங்குசம் (மழுங்கிப் போனது) ஒளி மழுங்கிப் போயிற்று; பட்டிஸம் (பட்டாக்கத்தி) களைத்துப் போய்விட்டது. சக்தி என்ற ஆயுதம் வலிமையற்று வெட்கமடைந்து தலைகுனியப் பெற்றது; வஜ்ராயுதம் ஸாமர்த்யம் அற்றுப்போய் விட்டது; கோடாலி

கூர்மை மழுங்கப் பெற்றது. தண்டாயுதம் ஸாது வாகிவிட்டது; வில் இளைத்துப் போய்விட்டது! இப்படி எல்லா அஸ்த்ரங்களுடைய செருக்கையும் கொள்ளை கொண்ட திருவாழியாழ்வான் ப்ரஹ்மானந்த ஸாதனமான நல்ல காரியங்களில் (ஸுகம் தரும் காரியங்களில்) உங்களுக்கு முயற்சியை உண்டுபண்ணட்டும்.

सृणि: - அங்குசம், पट्टिश: - பட்டாக்கத்தி, कुलिशं - வஜ்ராயுதம், कुठार: – கோடாலி

• रथचरणपति: व: शर्मणाय कर्मणे स्यात् ।

**क्षुण्णाजानेयबृन्दं क्षुभितरथगणं सन्नसान्नाह्य (ह्य) यूथं**
**क्ष्वेलासंरम्भहेलाकलकलबिगलत्पूर्वगीर्वाणगर्वम् ।**
**कुर्वाणस्सांपरायं रथचरणपति: स्थेयसीं व: प्रशस्तिं**
**दुग्धां दुग्धाब्धिभासं भयविवशशुनासीरनासीरवर्ती ॥**

க்ஷுண்ணாஜாநேய ப்ருந்தம் க்ஷுபித-
ரதகணம் ஸந்ந ஸாந்நாஹ்யய்ய யூதம்
க்ஷ்வேலா ஸம்ரம்ப ஹேலா கலகல-
விகலத் பூர்வகீர்வாண கர்வம் ।
குர்வாண ஸ்ஸாம்பராயம் ரதசரண-
பதி: ஸ்தேயஸீம் வ: ப்ரசஸ்திம்
துக்தாம் துக்தாப்தி பாஸம் பயவிவச
சுநாஸீர நாஸீரவர்த்தீ ॥ 85

சத்ருக்களால் ஏற்படும் பயத்திற்கு அஞ்சி இந்திரன் ஓடிவந்து ஸுதர்சநாழ்வானைச் சரணடைந்தான். அதனால் தேவா ஸுரயுத்தத்தில் ஸுதர்சநாழ்வான் இந்திரனுடைய ஸேனைகளுக்கு ஸஹாயமாகச் சென்று சத்ருக்களின் ரதகஜதுரகபதாதிகள் அழியும்

படியாக ஸிம்ஹநாத லீலாகோலாஹலங்களைச் செய்து போர்செய்தார். அப்படிப்பட்ட திருவாழியாழ்வான் பாற்கடல் போன்ற வெண்மையான புகழை (கீர்த்தியை) மேன்மேலும் வளரச் செய்யட்டும்.

(கீர்த்தியை வெண்மையாகக் கூறுவது கவிமரபு) आजानेयाः-சிறந்த குதிரைகள். सन्नाः - विशीर्णाः, सान्नाह्ययूथं-போர்செய்யத் தயாராக இருக்கும் போர் வீரர்களின் கூட்டம், क्ष्वेडा-ஸிம்ஹநாதம், हेलाकलकलं - க்ரீடாகோலாஹலம், க்ரீடையாவது தேரினைத் தேரால் அழித்தல், குதிரையைக் குதிரையினுல் அழித்தல் முதலியன.

* रथचरणपतिः वः स्थेयसीं प्रशस्तिं दुग्धाम् ।

द्रुह्यद्दोश्शालिमालि प्रहरण रभसोत्तानिते वैनतेये
विद्राति द्राक्प्रयुक्तः प्रधनभुवि परावर्तमानेन भर्त्रा ।
निर्जित्य प्रत्यनीकं निरवधिकचरद्वास्तिकाश्वीय रथ्यं
पथ्यं विश्वस्य दाश्वान् प्रथयतु भवतो हेतिरिन्द्रानुजस्य ।

த்ருஹ்யத்தோச்சாலிமாலி ப்ரஹரண
ரபஸோத்தாநிதே வைநதேயே
வித்ராதி த்ராக் ப்ரயுக்தः ப்ரதன புவி
பராவர்த்த மாநேந பர்த்ரா ।
நிர்ஜித்ய ப்ரத்யநீகம் நிரவதிக
சரத்வாஸ்திகாச்வீய ரத்த்யம்
பத்த்யம் விச்வஸ்ய தாச்வாந் ப்ரதயது
பவதோ ஹேதிரிந்த்ராநுஜஸ்ய ॥ 86

பிறர்க்குத் தீங்கு இழைக்கும் புஜ பலத்தையுடைய மாலி என்ற அரக்கனுடைய ஆயுதத்தினுல் போர்க்களத்தில் தாக்கப்பட்டு கருடன் (போர்க்களத்தைவிட்டு) ஓடிச் சென்றவளவில், பகவான் அக்

கருடன் மேல் ஏறிக்கொண்டு போர்க்களத்திற்கு வந்துத் திருவாழியினுல் பகைவர்களின் ரதகஜதுரக பதாதிகளை அழித்து மாலியின் தலையை அறுத்துத் தள்ளி வென்ருன். அப்படிப்பட்ட பகவானின் திருவாழியாழ்வான் உங்களைப் புகழுடையவராக ஆக்கட்டும். (இந்த சரித்திரம் உத்தர ஸ்ரீ ராமாயணம் ஏழாவது ஸர்கத்தில் உள்ளது).

हस्तिनां समूहः - हास्तिकम् । अश्वानां समूहः - अश्वीयम् । रथानां समूहः - रथ्यम् ।

* हेतिः भवतः प्रथयतु ।

नन्दिन्यानन्दशून्ये गलति गणपतौ व्याकुले बाहुलेये
चण्डे चाकित्यकुण्ठे प्रमथपरिषदि प्राप्तवत्यां प्रमाथम् ।
उच्छित्याजौ बलिष्ठं बलिज भुजवनं योददावादि भिक्षोः
भिक्षां तत्प्राणरूपां स भवदकुशलं कृष्णहेतिः क्षिणोतु ॥

நந்திந்யா நந்த சூந்யே கலதி கணபதௌ-
வ்யாகுலே பாஹு‍லேயே
சண்டே சாகித்யகுண்டே ப்ரமத
பரிஷதி ப்ராப்தவத்யாம் ப்ரமாதம் ।
உச்சித்யாஜௌ பலிஷ்டம் பலிஜ
புஜவநம் யோததாவாதி பிக்ஷோ:
பிக்ஷாம் தத் ப்ராணரூபாம் ஸபவ-
தகுசலம் க்ருஷ்ண ஹேதி: க்ஷிணோது ॥ 87

(மஹாபலியின் வம்சத்தில் பிறந்தவன் பாணுசுரன். இவன் பரமசிவனிடமிருந்து வரபலங்களைப் பெற்றவன், ஆயிரம் கைகளையும், தன் நகரத்தைச் சுற்றி ரக்ஷகமாக இருக்கும்படி நெருப்பு மதில்களையும் அளவற்ற செல்வத்தையும் பெற்றவன். சிவன் தன் கணங்

களோடு பாணாசுரனின் மாளிகையைப் பாது காத்து வந்தான், ஒரு சமயம் தன் பெண்ணாகிய உஷையின் காரணமாகக் கண்ணனின் பேரனாகிய அநிருத்தனைச் சிறையில் வைத்தான். இதை அறிந்த கண்ணன் வாணாஸுரனோடு போர் செய்தான்) அப்போரில் நந்தி மகிழ்ச்சி இழந்தான்; விநாயகர் போரிலிருந்து பின் வாங்கினார் ஸுப்ரமணியன் கலங்கினான்; சண்டன் செயலற்றுப் போனான்; ப்ரமத கணங்களெல்லாம் பயந்தோடின. அப்போது ஸுதர்சநாழ்வான் வாணா சுரனின் ஆயிரம் தோள் துணித்தார்; உயிர்பிச்சை அளித்தார். அப்படிப்பட்ட திருவாழி உங்கள் தீமை களை அழிக்கட்டும்.

बहुलानां कृत्तिकानां अपत्यं पुमान् बाहुलेयः=

ஸுப்ரமணியன்.

* कृष्णहेतिः भवदकुशलं क्षिणोतु ।

रक्तौघाभ्यक्तमुक्ता फललुलितलसद्वीचिवृद्धो महाब्धौ
सन्ध्या संबद्धताराजलधरशबलाकाशनीकाशकान्तौ ।
गम्भीरारम्भमम्भश्चरमसुरकुलं वेदविघ्नं विनिघ्नन्
निर्विघ्नं वः प्रसूतां व्यपगतविपदं संपदं चक्रराजः ॥

ரக்தௌகாப்யக்த முக்தாபல லுலித
லலத் வீசி வ்ருத்தௌ மஹாப்தௌ
ஸந்த்யா ஸம்பத்த தாரா ஜலதர
சபலாகாச நீகாச காந்தௌ ।
கம்பீராரம்பமம்பச்சரம ஸுரகுலம்
வேத விக்நம் விநிக்நன்
நிர்விக்னம் வ: ப்ரஸூதாம் வ்யபகத
விபதம் ஸம்பதம் சக்ரராஜ: ॥ 88

ஒரு காலத்தில் பிரம்மாவினிடமிருந்து அஸுரர்கள் வேதங்களைக் கவர்ந்து சென்று கடலுக்குள் ஒளிந்து கொண்டார்கள். ஸுதர்சனாழ்வான் அதனுள் புகுந்து அவர்களைக் கொன்றார் அப்போது அஸுரர்களின் உடம்பிலிருந்து கிளம்பிய ரத்ததாரைகள், கடலில் இருக்கும் முத்துக்களோடு சேர்ந்து முத்துக்களை செந்நிறமாக்கிக் கொண்டு அலைகளோடு சேர்ந்து வீசின. (அந்தக் காட்சி நக்ஷத்திரங்களாலும் காளமேகங்களாலும் சூழப்பட்ட ஸந்த்யா கால ஆகாசம் போல் இருந்ததாம்.) இப்படி வேதாபஹார அஸுரர்களை அழிப்பதில் கம்பீரமான முயற்சியைக் கொண்ட திருவாழியாழ்வான், உங்களுக்கு அபாயமற்ற செல்வத்தை இடையூறு இன்றி அளிக்கட்டும்.

•கறுப்பும் சிவப்பும் கலந்த வர்ணம் [illegible] எனப்படும்.

• चक्रराजः वः व्यपगतविपदं संपदं निर्विघ्नं प्रसूताम्।

काशीविप्लोषचैद्य क्षपण धरणिजध्वंससूर्यापिधान-
ग्राहद्वेधात्वमालिब्रुटनमुखकथावस्तुसत्कीर्तिगाथाः ।
गीयन्ते किन्नरीभिः कनकगिरिगुहागेहिनीभिर्यदीयाः
देयाद्वैतेयवैरी स सकलभुवनश्लाघनीयां श्रियं वः ॥

காசீ விப்லோஷ சைத்ய க்ஷபண
தரணிஜ த்த்வம்ஸ ஸூர்யாபிதாந-
க்ராஹத்வேதாத்வ மாலி த்ருடநமுக
கதா வஸ்து ஸத்கீர்த்தி காதா: ।
கீயந்தேகிந்நரீபி: கனக
கிரிகுஹா கேஹிநீபிர்யதீயா:
தேயாத் தைதேயவைரீ ஸ ஸகல
புவன ச்லாகநீயாம் ச்ரியம் வ: ॥

மேரு மலைக்குகைகளில் வாழும் கிந்நரஸ்த்ரீ களால் காசீதஹனம், சிசுபாலவதம், நரகாஸுரவதம் ஸூரியனை மறைத்த வரலாறு, கஜேந்திரனைக் காப்பாற்ற முதலையை அழித்தல், மாலிகவதம் ஆகி யவை எந்த ஸுதர்சநாழ்வானின் வெற்றிச் சரித்திரங் களாக பாடப்படுகின்றனவோ அப்படிப்பட்ட சக்கரத் தாழ்வார், எல்லோரும் புகழும் ஸம்பத்தை உங்களுக்கு கொடுக்கட்டும்.

*"சீமாலிகனவனோடு' என்ற பாசுரத்தில் பெரி யாழ்வார் மாலிகவதம் கூறுகிறார். இந்த சுலோகத் தில் வரும் சரித்திரங்களை ஆங்காங்கு அறிந்து கொள்க.

*सः दैतेयवैरी वः श्लाघनीयां श्रियं देयात् ।

नानावर्णान्विवृण्वन् विरचितभुवनानुग्रहान् विग्रहान् यः
चक्रेष्वष्टासु मृष्टासुरवरतरुणी कण्ठकस्तूरिकेषु ।
आताराद्वर्णमालावधिषु वसति यः पूरुषो वस्सदेयात्
व्यक्तैरद्भूतसत्वै रुपहितमबहिर्ध्वान्तमध्वान्तवर्ती ॥

நாநாவர்ணாந் விவ்ருண்வந் விரசித
புவநாநுக்ரஹாந் விக்ரஹாந் ய:
சக்ரேஷ்வஷ்டாஸு ம்ருஷ்டா
ஸுர வர தருணீ கண்ட கஸ்தூரிகேஷு ।
ஆதாராதர்ண மாலாவதிஷு வஸதி
ய: பூருஷோ வஸ்ஸதேயாத்
வ்யத்வை ருத்தூத ஸத்வை ருபஹிதம-
பஹிர் த்வாந்த த்வாந்த மத்வாந்த வர்த்தீ ॥

ஸ்ரீ ஸுதர்சந புருஷன் எட்டுச் சக்கரங்களில் வீற் றிருக்கிறார் என்றும், ஆறு சக்கரங்களில் வீற்றிருக் கிறார் என்றும் பல ஸந்நிவேசங்கள் சொல்லப்படு

கின்றன. முதல் சக்ரம் ப்ரணவ சக்ரம்; எட்டாம் சக்ரம் மாத்ருகா சக்ரம் எனப்படும். இந்த எட்டு சக்கரங்களும் அஸுரர்களை அழித்தமையால் அவர்களுடைய பத்னிகள் தம் கழுத்தில் அணிந்த கஸ்தூரி அழிந்து போய் விதவையானார்கள். ஸாத்விகர்களின் நெஞ்சில் வசிக்கும் ஸ்ரீ ஸுதர்சநாழ்வான் உலக மக்களை அநுக்ரஹிப்பதற்காக நீலம், மஞ்சள் முதலிய நிறங்களைக் கொண்ட திருமேனியுடன் இந்த எட்டு சக்கரங்களிலும் எழுந்தருளி இருப்பார். ரஜோ குணத்தினாலும், தமோ குணத்தினாலும் கெட்ட வழிகளில் சென்று நீங்கள் ஏற்படுத்திக் கொண்ட அக்ஞாநாந்தகாரத்தை (இந்த) ஸுதர்சநாழ்வான் அழிக்கட்டும்.

न विद्यते ध्वान्तं (तमः) येषां ते अध्वान्ताः=निस्तमस्काः, सात्त्विकाः, तेषु वर्तते-अध्वान्तवर्ती ।

* सः अध्वान्तवर्ती वः अबहिर्ध्वान्तं देयात् ।

द्वात्रिंशत् षोडशाष्टप्रभृति पृथु भुज स्फूर्तिभिर्मूर्तिभेदैः
कालाद्ये चक्रषट्के प्रकटितविभवः पञ्चकृत्यानुरूपम् ।
अर्थानामर्थितानामहरहरखिलं निर्विलम्बैर्विलम्बैः
कुर्वाणो भक्तवर्गं कुशलिनमवतादायुधग्रामणीर्वः ॥

த்வாத்ரிம்சத் ஷோட சாஷ்டப்ரப்ருதி
ப்ருது புஜ ஸ்பூர்த்திபிர் மூர்த்திபேதை:
காலாத்யே சக்ரஷட்கே ப்ரகடித
விபவ: பஞ்ச க்ருத்யாநுரூபம் |
அர்த்தாநாமர்த்திதாநாமஹரஹ
ரகிலம் நிர்விலம்பைர் விலம்பை:
குர்வாணோ பக்த வர்கம் குசலிநம
வதா தாயுதக்ராமணீர் வ: || 91

'ஷடரம் கால சக்ரம். பஞ்சாரம் ப்ருதிவீ சக்ரம், சதுரரம் அப்சக்ரம் த்ரிஅரம் தேஜஸ் சக்ரம், த்விஅரம் வாயு சக்ரம், ஏகாரம் ஆகாச சக்ரம்' ஆகிய ஆறு சக்கரங்களிலும், உத்பத்தி-ஸ்திதி-ஸம்ஹாரம்-நிக்ரஹம்-அநுக்ரஹம் ஆகிய ஐந்து தொழில் (வகை) களுக்கு ஏற்றவாறு முப்பத்திரண்டு, பதினாறு-எட்டு-நான்கு-இரண்டு புஜங்களோடும் கூடிய திருமேனியுடன் ஸ்ரீ ஸுதர்சநாழ்வான் எழுந்தருளி இருப்பார். இவ்வாறு இருப்பது பக்தர்கள் விரும்பிய பலனை விரைவாகக் கொடுத்து அவர்களை ரக்ஷிப்பதற்காகவே யாம். இவ்வாறு க்ஷேமத்தை அளிக்கும் திருவாழி உங்களைக் காப்பாற்றுவாராக. நிர்விளம்பம்-கால தாமதமின்றி

* कुशलिनं कुर्वाण: आयुधग्रामणी: व: अवतात् ।।

**कोणैरर्णैस्सरोजैरपि कपिशगुणैष्षड्भिरङ्गैश्शोभे**
**श्रीवाणीपूर्विकाभिर्दधति विलसतः शक्तिभिः केशवादीन् ।**
**तारान्ते भूपुरादौ रथचरणगदाशार्ङ्गखड्गाङ्किताशे**
**यन्त्रे तन्त्रोदिते वः स्फुरतु कृतपदं लक्ष्म लक्ष्मीसखस्य ।।**

கோணைரர்ணைஸ்ஸரோஜைரபி
கபிசகுணைஷ்ஷட் பிருத்பிங்ந சோபே
ஸ்ரீவாணீ பூர்விகாபிர் தததி
விலஸத: சக்திபி: கேசவாதீந் ।
தாராந்தே பூபுராதௌ ரத சரண
கதா சார்ங்க கட்காங்கிதாசே
யந்த்ரே தந்த்ரோதிதே வ: ஸ்புரது
க்ருதபதம் லக்ஷ்ம லக்ஷ்மீ ஸகஸ்ய ॥ 92

ஷட்கோணங்களும் ஷட் அக்ஷரங்களும், ஷட் பத்மங்களும் அமைந்தது ஸுதர்சனயந்திரம். யந்திரத்தின் நடுவில் இருக்கும் ஸுதர்சன புருஷன் சிவந்த

உடலும், சிவந்த வஸ்திரமும், சிவந்த தலைமயிரும், சிவந்த கண்களும கொண்டவராய் இருப்பார். அதனால் (அந்த நிறவொளியால்) பத்மங்கள் எல்லாம் செம்பட்டை நிறமுடையதாக (கபிசகுணம்) இருக்கும். இந்த யந்திரத்தில் கேசவன் முதல் தாமோதரன் வரையிலுள்ள பன்னிரண்டு மூர்த்திகள்,

| (1) | (2) |
|---|---|
| கேசவன் | கோவிந்தன் |
| நாராயணன், மாதவன் | விஷ்ணு, மதுஸூதனர் |
| இவர்கள் | இவர்கள் |
| வாசுதேவ வ்யஷ்டி பூதர்கள் | ஸங்கர்ஷண வ்யஷ்டி பூதர்கள் |
| இவர்களுக்கு | இவர்களுக்கு |
| மூன்று ஸ்ரீ சக்திகள் | மூன்று வாணீ சக்திகள் |
| (3) | (4) |
| திரிவிக்ரமன் | ஹ்ருஷீகேசன் |
| வாமனன், ஸ்ரீதரன் | பத்மநாபன்-தாமோதரன் |
| இவர்கள் | இவர்கள் |
| ப்ரத்யும்ன வ்யஷ்டி பூதர்கள் | அநிருத்த வ்யஷ்டி பூதர்கள் |
| இவர்களுக்கு | இவர்களுக்கு |
| மூன்று வாக்சக்திகள் | மூன்று, ம்ருடாநீ சக்திகள் |

என்ற முறையில் அமர்ந்திருப்பார்கள். யந்திரத்தை அமைக்கும்போது முதலில் பூபுரத்தையும் முடிவில் ப்ரணவத்தையும் அமைப்பர். யந்திரத்தின் கிழக்கு முதலிய நான்கு திசைகளிலும், சக்கரம், கதை, வில், கத்தி ஆகிய நான்கு ஆயுதங்களை அமைப்பர். இப்படிப்பட்ட யந்திரத்தில் இருக்கும் ஸுதர்சநர் ச்ரிய: பதிரூபமாக இருப்பவர். இவர் உங்களுக்குப் ப்ரத்யக்ஷமாகட்டும்.

* लक्ष्मीसखस्य लक्ष्म वः स्फुरतु ।

दंष्ट्राकान्त्या कडारे कपटकिटितनोः कैटभारेरधस्तात्
ऊर्ध्वं हासेन विद्धे नरहरिवपुषो मण्डले वासवीये ।
प्राक्प्रत्यक्सान्ध्यसान्द्रच्छविभरभरिते व्योम्नि विद्योतमानः
दैतेयोत्पातशंसी रविरिव रहयत्वस्त्रराजो रुजं वः ॥

தம்ஷ்ட்ரா காந்த்யா கடாரே
கபடகிடிதநோ: கைடபாரே ரதஸ்தாத்
ஊர்த்வம் ஹாஸேந வித்தே நரஹரி
வபுஷோ மண்டலே வாஸவீயே ।
ப்ராக் ப்ரத்யக் ஸாந்த்ய ஸாந்த்ரச்
சவிபரபரிதே வ்யோம்நி வித்யோதமாந:
தைதேயோத் பாத சம்ஸீ ரவிரிவ
ரஹயத்வஸ்த்ர ராஜோ ருஜம் வ: ॥ 93

அஹிர் புத்ந்ய ஸம்ஹிதையில் சொல்லப்படும் 'மாஹேந்த்ர மண்டலம்' என்ற யந்த்ர அமைப்பை இந்த ச்லோகம் கூறுகிறது.

யந்திரத்தின் கீழ் பாகத்தில் வராஹ நாயனுரையும் மேல் பாகத்தில் நரசிம்ம மூர்த்தியையும் தியானிக்க வேண்டும் என்று விதிக்கப்பட்டுள்ளது. கீழே வராஹத்தின் தந்த காந்தியும், மேலிருந்து நரஸிம்மனுடைய சிரிப்பொளியும் கலசி (யந்திரம்) கடாரவர்ணம் பெற்றிருக்கும்; கிழக்கு, மேற்கு ஸந்த்யாகாலம்போல் சிவந்திருக்கும். [வராஹத்தின் தந்தகாந்தி இயற்கையிலே வெளுத்ததாயினும், ஹிரண்யாக்ஷனைக் கொல்லும்போது அவனுடைய உடலில் தோன்றிய ரத்தத்தின் ஒளியினுல் சிவந்ததாயிற்று. நரசிம்ம சிரிப்பொளியும் ஹிரண்யனின் ரத்த ஒளியால் சிவந்ததாயிற்று இவை இரண்டும் ஸந்த்யாகாலம் போல் தோற்றமளித்தது.] இதன் நடுவில் இருக்கும் திருவாழியாழ்வான், அசுரகுலம் அழிய ஆகாசத்தில் தோன்றும் உத்பாத ஸூர்யன்

போல் தோன்றுவார். இப்படிப்பட்ட ஸுதர்சநாழ்வான் உங்களுடைய ரோகத்தை (வியாதியை) நீக்கட்டும். கடாரவர்ணம் - கபிலவர்ணம்.

* अस्त्रराजो वः रुजं रहयतु ।

कोणे क्वापि स्थितोपि त्रिभुवनविततश्चन्द्रधामापि रूक्षः
रुक्मच्छायोपि कृष्णाकृतिरनलमयोप्याश्रितत्राणकारी ।
धारासारोपिदीप्तो दिनकर रुचिरोऽप्युल्लसत्तारक श्रीः
चक्रेशश्चित्रभूमा वितरतु विमतत्रासनं शासनं वः ॥

கோணே க்வாபி ஸ்திதோபி த்ரிபுவந
விததச் சந்த்ர தாமாபி ரூக்ஷ:
ருக்மச்சாயோபி க்ருஷ்ணாக்ருதி
ரநல மயோ ப்யாச்ரித த்ராண காரீ।
தாராஸாரோபி தீப்தோ தினகர
ருசிரோப்யுல்லஸத் தாரக ஸ்ரீ:
சக்ரேசச் சித்ர பூமா விதரது
விமத த்ராஸனம் சாஸநம் வ: ॥ 94

திருவாழியாழ்வான் யந்திரத்தின் ஏகதேசத்தில் எழுந்தருளி இருந்தாலும் மூன்று லோகங்களையும் வ்யாபித்தவராயும் இருக்கிறார். சந்தோஷத்தை அளிப்பவராயினும் தீக்ஷ்ண ஸ்வபாவத்தை உடையவராயும், சந்திரனை இருப்பிடமாகக் கொண்டிருந்தாலும் சத்ருக்களுக்கு பயத்தை அளிப்பவராயும், பொன்நிறம் கொண்டவராயினும் பகவானைப்போல் நீலநிறமுடையவராயும், அக்நிமயமாக இருந்தாலும் ஆச்ரித ரக்ஷகராயும், குளிர்ந்த மழையைக் கொடுப்பவராயினும் ஜ்வலித்துக்கொண்டு இருப்பவராயும், சூரியன் போல் ப்ரகாசிப்பவராயினும் நக்ஷத்திர சோபையை உடையவராயும் இருக்கிறார். (இவ்வாறு விருத்த தர்மங்களின் உறைவிடமாக இருந்து கொண்டு) ஆச்சர்யமான

'மஹிமையையுடையவரான திருவாழியாழ்வான் உங்களுடைய (ப்ரதிபக்ஷிகளுக்கு) எதிரிகளுக்குப் பயத்தை உண்டு பண்ணட்டும்.

'चदि - आह्लादने'—चन्दति - आह्लादयति इति चन्द्रं। चन्द्रं धाम यस्य सः-चन्द्रधामा। धारायाः आसारः- धारासारः। धारा सेनाग्रभागे - सारः बलिष्ठः।

* चक्रेशः वः विमतानां त्रासनं वितरतु।

**शुक्लश्शक्र ! स्तवस्ते सह दहन ! कलांकाल ! तेऽयं न कालः**
**किं वो रक्षांसि ! रक्षा तव फलतु पते ! यादसां पादसेवा।**
**वायो ! हृद्योसि भर्तुस्त्यज धनद ! मदं सेव्यतां त्र्यम्बकेति**
**प्राहुर्यद्यन्त्रपालाः सतनुजविजयी हन्तु तन्द्रालुतां वः ॥**

*சுக்லச் சக்ர! ஸ்தவஸ்தே ஸஹ*
*தஹந கலாம் கால தேயம் ந கால:*
*கிம் வோ ரக்ஷாம்ஸி ரக்ஷா தவ*
*பலது பதே யாதஸாம் பாதஸேவா।*
*வாயோ ஹ்ருத்யோஸி பர்த்து ஸ்த்யஜ*
*தநத மதம் ஸேவ்யதாம் த்ர்யம்பகேதி*
*ப்ராஹுர் யத்யந்த்ர பாலா: ஸதநுஜ*
*விஜயீ ஹந்து தந்த்ராலுதாம் வ: ||* 95

தேவேந்திரனே! நீ ஸ்தோத்ரம் செய்வது சுத்தமாக இருக்கிறது! அக்நி பகவானே! சிறிது நேரம் நில்! யமதர்மனே! உனக்கு இது ஸமயமன்று! ராக்ஷஸர்களே! உங்களுக்கு இனிமேல் ரக்ஷணம் (இல்லை) ஏது? வருணனே! நீ பண்ணிக் கொண்டிருந்த ஸுதர்சந கைங்கர்யம் பலித்திடுக! வாயு பகவானே! நீ திருவாழியாழ்வானுக்கு உகப்பாக இருக்கிறாய்! குபேரனே! துரஹங்காரத்தை விடு! வாராய்

முக்கண்ணனே! திருவாழியை வணங்கு! என்று எந்த ஸுதர்சனனுடைய யந்த்ர பாலகர்கள் சொல்லுகிறார்களோ அந்தத் திருவாழியாழ்வான் உங்களுடைய சோம்பேறித்தனத்தை ஒழிக்கட்டும்.

शक्रः - இந்திரன் स्तवः - ஸ்தோத்திரம் क्षणः - க்ஷண காலம் यादसांपतिः - வருணன் धनदः - குபேரன் त्र्यम्बकः - முக்கண்ணன் दनुजविजयी - திருவாழியாழ்வான் तन्द्रालुता - சோம்பேறித்தனம்.

* सः दनुजविजयी वःतन्द्रालुतां हन्तु ।

**गायत्र्यर्णारचक्रे प्रथममनुसखस्मेर पत्रारविन्दे**
**बिम्बं वन्हेस्त्रिकोणं वहति जयिजयाद्यष्टशक्तौ निषण्णा ।**
**शोकं वोऽशोकमूले पदसविधलसद्भीमभीमाक्ष भीमा**
**पुंसो दिव्यास्त्रधामा पुरुषहरिमयी मूर्तिरस्य त्वपूर्वा ॥**

காயத்ர்யர்ணாரசக்ரே ப்ரதம-
மநுஸக ஸ்மேரபத்ராரவிந்தே
பிம்பம் வஹ்நேஸ் த்ரிகோணம் வஹதி
ஜயீ ஜயாத்யஷ்ட சக்தௌ நிஷண்ணா ।
சோகம் வோऽசோகமூலே பத
ஸவிதலஸத் பீமபீமாக்ஷபீமா
பும்ஸோதிவ்யாஸ்த்ர தாமா புருஷ-
ஹரிமயீ மூர்த்திரஸ்ய த்வபூர்வா ॥ 96

இது ஒரு யந்திர அமைப்பு:-இதுவும் அஹிர்புத்ன்ய ஸம்ஹிதையில் சொல்லப்படுகிறது. ஓம் நமோ பகவதே வாஸுதேவாய' என்பது த்வாதசாக்ஷர மந்த்ரம் யந்திரத்தில் பன்னிரண்டு தளங்கள் உள்ள பத்மம் (தாமரைப்பூ) அமைக்கவேண்டும். நடுவில் அக்நியின் த்ரிகோண பிம்பத்தை அமைத்தல் வேண்டும். ப்ராசீதிசையில் - ஜயை, ஆக்நேயதிசை

யில் - மோஹினீ, யாம்யதிசையில் - விஜயை, நிருரிதி-திசையில் - ஹ்லாதிநீ, மேற்கு திசையில் - அஜிதை. வாயு திசையில்-மாயை (கறுப்பு நிறத்தில்), வடக்கில், அபராஜிதை, ஈசாந்ய திசையில் - ஸித்தி என்று அது அஷ்ட ஸித்திகளை உடையதாய் இருக்கவேண்டும், இருபத்துநான்கு அரங்களைக் கொண்ட சக்கரத்தில் அசோக மரத்தடியில் (திருவாழியின்) திருவடிவாரத்தில் பயத்தை உண்டுபண்ணும் இரண்டு பீமாக்ஷர்கள் அமையவேண்டும். இப்படிப்பட்ட சக்கரத்தில் ஸுதர்சன புருஷனின் நரஸிம்ம மூர்த்தி இருப்பார், இவர் நான்கு கைகளில் நான்கு சக்கரங்களை வைத்துக் கொண்டு யோகபட்டம் சாத்திக்கொண்டு இருப்பார்- இந்த நரஸிம்மமூர்த்தியான ஸுதர்சநர், உங்களுடைய துக்கத்தைப் போக்கட்டும்.

•காயத்ரியின் அக்ஷரங்கள் இருபத்துநான்கு.

*पुरुषहरिमयीमूर्तिः वः शोकं अस्यतु ।

**पाश्चात्याशोकपुष्प प्रकरनिपतितैः प्राप्तरागं परागैः**
**सन्ध्यारोचिस्सगन्धैः स्वपदशशधरं प्रेक्ष्य तारानुषक्तम् ।**
**पद्मानाबद्धकोशानिव सुरनिवहैरञ्जलीन् कल्प्यमानान्**
**चक्राधीशोऽभिनन्दन् प्रदिशतु सदृशीं उत्तमश्लोकतां वः ॥**

பாச்சாத்யாசோக புஷ்ப ப்ரகர
நிபதிதை: ப்ராப்தராகம் பராகை:
ஸந்த்யா ரோசிஸ் ஸகந்தை: ஸ்வபத-
சசதரம் ப்ரேக்ஷ்ய தாராநுஷக்தம் ।
பத்மாநாபத்த கோசாநிவ ஸுரநிவஹை
ரஞ்ஜலீந் கல்ப்ய மாநாந்
சக்ராதீசோபிநந்தந் ப்ரதிசது
ஸத்ருசீம் உத்தம ச்லோகதாம் வ; ॥ 97

யந்திரத்தின் அமைப்பில் (எல்லாவற்றுக்கும்,) பின்னால் இருக்கிற அசோக மரத்திலுள்ள புஷ்பங்களிலிருந்து மகரந்தத்தூள் கீழே விழுகின்றன. மகரந்-தத்துகளின் நிறம் ஸந்த்யாகாலம் போல் சிவந்திருக்கிறது. அந்தத் தூள்களால் சிவந்துள்ள ப்ரணவ ஸம்பந்தமுடைய (2) நக்ஷத்ர ஸம்பந்தமுடைய திருவாழியாழ்வானின் சந்திரமண்டலத்தைப் பார்த்து தேவகணங்கள் தாமரை மொட்டு போல் அஞ்சலியைச் செய்கின்றன. அவற்றைக் கண்டு திருவுள்ளம் உகக்கும் திருவாழியாழ்வான், தன் கீர்த்திபோன்ற உத்தமமான கீர்த்தியை உங்களுக்கு அளிக்கட்டும்.

புஷ்பப்ரகரம் - புஷ்பஸமூஹம். सन्ध्यारोचिः-ஸந்த்யா காலத்து ஒளி. பராகம் - துகள், உத்தம சுலோகம் - புகழ்.

*चक्राधीशः वः उत्तमश्लोकतां प्रदिशतु ।

**रक्ताशोकस्य वेदस्य च निहितपदं प्राप्तशाखस्य मूले**
**चक्रैरस्त्रैस्तथाद्यैरपि महित चतुर्द्विश्चतुर्बाहुदण्डम् ।**
**आसीनं भासमानं स्थितमपि भयतस्त्रायतां त्वमेकं**
**पश्चात्पूर्वत्र भागे स्फुटनरहरितामानुषं जानुषाद्वः ।।**

ரக்தா சோகஸ்ய வேதஸ்ய ச
நிஹிதபதம் ப்ராப்த சாகஸ்யமூலே
சக்ரைரஸ்த்ரை ஸ்ததாத்யைரபி
மஹித சதுர்த்விச் சதுர்பாஹுதண்டம் ।
ஆஸீநம் பாஸமாநம் ஸ்திதமபி
பயதஸ்த்ராயதாம் தத்வமேகம்
பச்சாத்பூர்வத்ர பாகே ஸ்புட-
நரஹரிதா மாநுஷம் ஜாநுஷாத்வ: ॥ 94

சக்கரத்தின் பின் பாகத்தில் சாகோபசாகமாக வளர்ந்திருக்கிற அசோக மரத்தின் அடியிலும், வேத மூலமான ப்ரணவத்திலும், நான்கு திருக்கைகளிலும் சக்கரத்தைத் தரித்துக் கொண்டு சக்கரத்தின் பிற் பகுதியில் வீற்றிருந்த திருக்கோலத்தில் இருக்கும் நரஸிம்மரின் தன்மையும், சக்கரம் முதலிய எட்டு ஆயுதங்களைக் கொண்ட திருக்கைகளோடு முன் பக்கத்தில் நிற்கும் மனிதத் தன்மையையும் கொண்டு விளங்கப்பெற்ற ஒரு தத்துவம் உங்களை ஸாம்ஸாரிக பயத்திலிருந்து காப்பாற்றட்டும்.

नरहरिता - நரஸிம்ஹத்வம் मानुषं - மனிதத் தன்மை द्विर्गुणिता: चत्वारो बाहुदण्डाः यस्यतत् - द्विश्चतुर्बाहुदण्डम् । வேதத்திற்கு மூலம் ப்ரணவம் 'यद्वेदादौ स्वर: प्रोक्त:' इति ।

•नरहरिता मानुषं एकं तत्त्वं व: जानुषात् भयत: त्रायताम् ।

प्राणेदत्तप्रयाणे मुषितदिशिदृशि त्यक्तसारेशरीरे
मत्यां व्यामोहवत्यां सतमसि मनसि व्याहते व्याहृते च ।
चक्रान्तर्वर्तिमृत्यु प्रतिभयमभयाकार चित्रं पवित्रं
तेजस्तत्तिष्ठतां वस्त्रिदशकुलधनं त्रीक्षणं तीक्ष्णदंष्ट्रम् ॥

ப்ராணே தத்த ப்ரயாணே முஷிததிசி
த்ருசி த்யக்த ஸாரே சரீரே
மத்யாம் வ்யாமோஹ வத்யாம் ஸதமஸி
மநஸி வ்யாஹதே வ்யாஹ்ருதே ச ।
சக்ராந்தர்வர்த்தி ம்ருத்யு ப்ரதிபய-
முபயாகார சித்ரம் பவித்ரம்
தேஜஸ் தத் திஷ்ட்டதாம் வஸ்த்ரிதச
குலதநம் த்ரீக்ஷணம் தீக்ஷ்ண தம்ஷ்ட்ரம் ॥

உடல் இளைத்து, மதிமருண்டு, நெஞ்சு இருண்டு, கண்களில் பார்வை மறைந்து பேச்சு தடுமாறி உயிர் போகுமளவில், அந்த ம்ருத்யுவுக்கும் பயத்தை அளிக்க வல்லவரும், ஸுதர்சந சக்கரத்தின் நடுவில் இருக்கும், மிகவும் பரிசுத்தமான நரஸிம்மர் உங்களுக்கு ஸேவை ஸாதித்து உங்களுடைய பயத்தை நீக்கி உங்களைக் காப்பாற்றட்டும்.

மதிவ்யாமோஹம் – மதி மயக்கம், उभयाकारं - இரண்டுருவம் (நரசிங்கம்) त्रिदशकुलधनं - தேவர்களுக்கு ஆபத்தனம். त्रीक्षणं - முக்கண் உடையது.

*चक्रान्तर्वर्ति तत् तेजः (रक्षणे) वः तिष्ठताम् ।

**यस्मिन् विन्यस्य भारं विजयिनि जगतां जङ्गमस्थावराणां**
**लक्ष्मीनारायणाख्यं मिथुनमनुभवत्यत्युदारान् विहारान् ।**
**आरोग्यं भूतिमायुः कृतमिह बहुना यद्यदास्थापदं वः**
**तत्तत्सद्यस्समस्तं दिशतु स पुरुषो दिव्यहेत्यक्षवर्ती ॥**

யஸ்மிந் விந்யஸ்ய பாரம் விஜயிநி
ஜகதாம் ஜங்கம ஸ்தாவராணும்
லக்ஷ்மீ நாராயணுக்க்யம் மிதுந-
மநுபவத்யத்யுதாராந் விஹாராந் ।
ஆரோக்யம் பூதிமாயு: க்ருதமிஹ
பஹுநா யத்யதாஸ்த்தாபதம் வ:
தத்தத் ஸத்யஸ்ஸமஸ்தம் திசது
ஸ புருஷோ திவ்யஹேத்யக்ஷவர்த்தீ ॥ (100)

பெருமாளும் பிராட்டியும் ஸகல சராசரங்களையும் நிர்வஹிக்கும் பொறுப்பை ஜயசீலனான ஸுதர்சநாழ்வானிடம் ஒப்படைத்துவிட்டுப் போகலீலைகளில் ஈடுபடுவார்கள். அப்படிப்பட்ட நிர்வாஹப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு அதனை நடத்திவரும் திருவாழி

யாழ்வான் உங்களுக்கு ஆரோக்யம், ஐச்வர்யம், நீண்ட ஆயுள், மற்றும் நீங்கள் என்னென்ன பயன் களை விரும்புகிறீர்களோ அவை யெல்லாவற்றையும் உடனே கொடுத்து அருளட்டும். ஸுதர்சநாழ்வான் ஸர்வாபீஷ்ட பல ப்ரதன்.

*தீர்க்காயுஸ்ஸுடன் வாழவேண்டும் என்று பல சமயங்களில் பெரியோர்கள் வாழ்த்துவதைக் காண் கிறோம். அவ்வாறு வாழ்க்கை இன்பமாக அமைய செல்வம் வேண்டும்! செல்வம் இருந்து வைத்தியத் திற்கே செலவானால் என்னசெய்வது? வாழ்க்கை நோயற்ற வாழ்க்கையாக அமையவேண்டும்! இவற்றுக் கெல்லாம் ஸுதர்சநாழ்வானின் கடாக்ஷம் இருக்க வேண்டும். இந்த ஸுதர்சந சதகம் அந்தக் கடாக்ஷத்தைப் பெற்றுக் கொடுக்கும்.

* सुदर्शन पुरुषः वः समस्तं फलं सद्यः दिशतु ।

पद्यानां तत्त्वविद्याद्युमणिगिरिशयोस्त्र्यङ्गसंख्याधराणां
अर्चिष्यङ्गेषु नेम्यादिषु च परमतः पुंसि षड्विंशतेश्च ।
संख्यैस्सौदर्शनं यः पठति कृतमिदं कूरनारायणेन
स्तोत्रं निर्विष्टभोगो भजति स परमां चक्रसायुज्यलक्ष्मीम् ।

பத்யாநாம் தத்வவித்யா த்யுமணி
கிரிச வீத்யங்க ஸங்க்யாதராணாம்
அர்ச்சிஷ்யங்கேஷு நேம்யாதிஷு ச
பரமத: பும்ஸி ஷட்விம்சதேச்ச ।
ஸங்கைஸ் ஸௌதர்சநம் ய: படதி
க்ருதமிதம் கூரநாரயணேந
ஸ்தோத்ரம் நிர்விஷ்டபோகோ பஜதி
ஸ பரமாம் சக்ர ஸாயுஜ்ய லக்ஷ்மீம் ॥ 101

இந்த ஸ்தோத்திரந்தில், ஸுதர்சந ஜ்வாலையை வருணித்துக் கூறும் இருபத்து நான்கு சுலோகங்கள், நேமியை வருணிக்கும் பதினான்கு சுலோகங்கள், அரங்களை வருணிக்கும் பன்னிரண்டு சுலோகங்கள், நாபியை வருணிக்கும் பதினொரு சுலோகங்கள், அக்ஷத்தை வருணிக்கும் பதின்மூன்று சுலோகங்கள், ஸுதர்சந புருஷனை வருணிக்கும் இருபத்தாறு சுலோகங்கள் $(24+14+13+11+12+26=100)$ அமைந்துள்ளன. (பலச்ருதி சுலோகம் தனி) இப்படிப்பட்ட ஸுதர்சந சதகத்தை வாசிப்பவர்கள் இந்த உலகில் ஐஹிக போகங்களை எல்லாம் பூர்ணமாக அநுபவித்துப் பின்பு சக்கரத்தாழ்வாரோடு பரம ஸாம்யம் என்னும் செல்வத்தைப் பெற்று மகிழ்வார்கள்.

* सौदर्शनं स्तोत्रं यः पठति सः चक्रसायुज्यलक्ष्मीं भजति ।

श्री स्कन्धपुराणान्तर्गत वेङ्कटाचलमाहात्म्ये

त्रयोदशोऽध्यायः

# चक्रतीर्थमाहात्म्यम् ।

श्रीसूत उवाच—

अथाहं सम्प्रवक्ष्यामि द्विजेन्द्राः सत्यवादिनः ।
चक्रतीर्थस्य माहात्म्यं सर्वपापप्रणाशनम् ॥
ये शृण्वन्ति महापुण्यं चक्रतीर्थस्य वैभवम् ।
ते यान्ति विष्णुभवनं पुनरावृत्तिवर्जनम् ॥
अन्नदाने च विमुखाः जलदाने तथैव च ।
गोदान विमुखा ये च शुद्धास्तेऽत्र निमज्जनात् ॥
तस्मात् पुण्यतमं तीर्थं चक्रतीर्थमनुत्तमम् ॥

ஸ்ரீ ஸூதர் கூறுகிறார்:—எப்போதும் உண்மையே பேசும் ஸத்யவாதிகளான பிராம்மணர்களே! எல்லா பாபங்களையும் அடியோடு அழிக்கும் சக்ர தீர்த்தத்தின் மாஹாத்மியத்தைச் சொல்கிறேன். எவனொருவன் சக்ரதீர்த்தத்தின் மாஹாத்மியத்தைக் கேட்கிறானோ அவன் விஷ்ணுலோகமாகிற (பரமபதத்தை) அடைகிறான். அன்னதானம், கோதானம் தீர்த்ததானம் ஆகியவற்றை ஒருபோதும் செய்யாதவனும், சக்ர தீர்த்தத்தில் ஸ்நானம் செய்தால் சுத்தமாகிவிடுவான். ஆதலால் சக்ரதீர்த்தம் மிகவும் பரிசுத்தமான தீர்த்த மாகும்.

श्रीसूत उवाच—

पुरा श्रीवत्सगोत्रीयः पद्मनाभो जितेन्द्रियः ।
चक्रपुष्करिणीतीरे सोऽतप्यत महत्तपः ।।
दयायुक्तो निराहारः सत्यवादी जितेन्द्रियः ।
आत्मवत्सर्वभूतानि पश्यन्विषय निः स्पृहः ।।
सर्वभूतहितोदान्तः सर्वद्वन्द्वविवर्जितः ।
वर्षाणिकतिचित्सोयं जीर्णपर्णाशनोऽभवत् ।।
कञ्चित्कालं जलाहारो वायुभक्षः कियत्समाः ।
एवं द्वादशवर्षाणि पद्मनाभो महामुनिः ।।
अतप्यत तपोघोरं देवैरपि सुदुष्करम् ।।

முன்பு ஒருகால் ஸ்ரீவத்ஸ கோத்திரரான பத்மநாபர் என்கிற ஒரு முனிவர் இந்த சக்ர புஷ்கரிணிக் கரையில் கடுந்தவம் புரிந்தார். அவர் கருணை கொண்டவர். ஐம்புலன்களையும் அடக்கியவர், தன்னைப் போலவே பிற உயிர்களையும் நினைப்பவர்; ஆசையற்றவர். சில ஆண்டுகள் உலர்ந்த இலைகளையும், சில ஆண்டுகள் தண்ணீரையும் மட்டும், ஆஹாரமாக உட்கொண்டு தேவர்களாலும் செய்ய முடியாத கடுந்தவத்தை பன்னிரண்டு ஆண்டுகள் செய்தார்.

अथ तत्तपसा तुष्टो भगवान् कमलापतिः ।
प्रत्यक्षतामगात्तस्य शङ्खचक्र गदाधरः ।
विकचाम्बुजपत्राक्षः सूर्यकोटिसमप्रभः ।।
उन्मील्य चक्षुषो तत्र दृष्टवान् वेंकटेश्वरम् ।
शङ्खचक्रधरं शान्तं श्रीनिवासं कृपानिधिम् ।।
दृष्ट्वा देवं महात्मानं स्तोतुं समुपचक्रमे ।।

அந்தத் தபஸ்ஸினால் சந்தோஷம் அடைந்த ஸ்ரீநிவாஸன் சங்க சக்ர கதாபாணியாய் அந்த முனிவருக்குப் பிரத்யக்ஷமானார். அப்போதலர்ந்த தாமரை இதழ் போன்ற திருக்கண்களைக் கொண்டவரான பகவான் கோடி சூர்ய ப்ரகாசத்தோடு எதிரில் நின்றார். சங்க சக்ரத்தைத் தரித்துக் கொண்டு இருப்பவரும், மிகவும் சாந்தரும் கருணைக்கடலும் மஹாத்மாவுமாகிற ஸ்ரீநிவாஸனை நேரில் கண்டு ஸ்தோத்திரம் செய்யத் தொடங்கினார்.

नमो देवाधिदेवाय वेंकटेशाय शार्ङ्गिणे ।
नारायणाद्रिवासाय श्रीनिवासाय ते नमः ॥
नमः कल्मषनाशाय वासुदेवाय विष्णवे ।
शेषाचलनिवासाय श्रीनिवासाय ते नमः ॥
नमस्त्रैलोक्यनाथाय विश्वरूपाय साक्षिणे ।
शिवब्रह्मादिवन्द्याय श्रीनिवासाय ते नमः ॥
नमः कमलनेत्राय क्षीराब्धिशयनाय ते ।
दुष्टराक्षस संहर्त्रे श्रीनिवासाय ते नमः ॥
भक्तप्रियाय देवाय देवानां पतये नमः ।
प्रणतार्तिविनाशाय श्रीनिवासाय ते नमः ॥
योगिनां पतये नित्यं वेदवेद्याय विष्णवे ।
भक्तानां पापसंहर्त्रे श्रीनिवासाय ते नमः ॥

தேவாதி தேவனும், சார்ங்கம் என்ற வில்லினைப் பிடித்தவனும், நாராயணாத்ரியில் வாஸம் செய்பவனும், திருவேங்கடநாதனுமான ஸ்ரீநிவாஸனுக்கு நமஸ்காரம். பாவங்களைப் போக்குகிறவனும், வாசுதேவனும், விஷ்ணுவும், சேஷாசலத்தில் வாழ்பவனுமான ஸ்ரீநிவாஸனுக்கு என் ப்ரணாமம். மூவுலகு நாதனாக

வும், எல்லா உருவங்களாகவும், நினைத்த பொழுதில் கண்முன் ஸேவை ஸாதிப்பவனும், சிவன் பிரம்மா முதலானவர்களால் வணங்கப்படுகிறவனுமான ஸ்ரீநிவாஸனுக்கு என் பிரணாமங்கள்.

தாமரைக் கண்ணனும், பாற்கடலில் பள்ளி கொண்டிருப்பவனும் துஷ்டர்களான ராக்ஷஸர்களை அழிப்பவனுமான ஸ்ரீநிவாஸனே! உனக்கு என் அஞ்சலி பக்தர்களுக்குப் பிரியமானவனும், தேவர்களுக்குத் தலைவனும், தன்னைச் சரணடைந்தவர்களின் துன்பங்களை அழிப்பவனுமான ஸ்ரீநிவாஸனுக்கு என் நமஸ்காரம். யோகிகளின் தலைவனும் வேதங்களால் எப்போதும் அறியத் தகுந்தவனும், விஷ்ணுவும், பக்தர்களின் பாவங்கள் அனைத்தையும் அழிப்பவனுமான ஸ்ரீநிவாஸனே! உனக்கு ஓர் அஞ்ஜலி (என்று ஸ்தோத்திரம் செய்தார்.)

एवं स्तुतो महाभागः श्रीनिवासो जगन्मयः ।
पद्मनाभाख्य ऋषिणा चक्रतीर्थ निवासिना ।।

सन्तोषं परमं प्राप्य वेंकटेशो दयानिधिः ।
पद्मनाभं द्विजवरं शान्तं धर्मपरायणम् ।
सुधाधारोपमं वाक्यं अब्रवीत् पुरुषोत्तमः ।।

சக்ரதீர்த்த வாஸியான பத்மநாப முனிவரால் துதிக்கப்பட்டவனும், உலகமயமாக இருப்பவனும் மிகப் பெருமையுடையவனும், திருவேங்கடத்தில் வாழ்பவனும், கருணைக் கடலும் புருஷோத்தமனுமாகிய ஸ்ரீநிவாஸன், மிகவும் சாந்தமானவரும் தர்ம சிந்தையுடையவரும் பிராம்மண ச்ரேஷ்டருமான பத்மநாபரைக் குறித்து அம்ருத தாரைபோன்று இனிமையான ஒரு வார்த்தை சொன்னார்.

श्रीनिवास उवाच—

द्विजवर्य महाभाग मत्पाद कमलार्चक ।
चक्रतीर्थस्य तीरे त्वं आकल्पं पूजयन् वस ॥

इत्युक्त्वा भगवान् विष्णुः तत्रैवान्तरधीयत ।
अन्तर्धानं गते देवे श्रीनिवासे जगद्गुरौ ।
चक्रतीर्थस्य तीरे तु वासंचक्रे महामतिः ॥

பிராம்மண ச்ரேஷ்டரே ! என்னுடைய திருவடித் தாமரைகளைப் பூஜிக்கும் பாக்யசாலியே ! நீர் இந்த சக்ரதீர்த்தத்தின் கரையிலேயே இந்தக் கல்பம் முடியும் வரை என்னைப் பூஜித்துக் கொண்டு இரும்' என்று ஸ்ரீநிவாஸ பகவான் சொல்லிவிட்டு அங்கேயே (பார்வையிலிருந்து) மறைந்தார். ஜகத்குருவான ஸ்ரீநிவாஸன் மறைந்தவுடன் மஹா புத்திசாலியான பத்மநாப முனிவர் சக்ர தீர்த்தத்தின் கரையிலேயே வாஸம் செய்தார்.

ततः कालान्तरे कश्चित् राक्षसो भीमदर्शनः ।
मुनिं तं पद्मनाभाख्यं नारायण परायणम् ।
आययौ भक्षितुं क्रूरः क्षुधया परिपीडितः ॥
ब्राह्मणं तरसा सोऽयं राक्षसो जगृहे तदा ।

ஒரு சமயம் பயங்கரமான உருவத்தையுடைய ஒரு ராக்ஷஸன் நாராயண பக்தரான பத்மநாபரை உண்பதற்காகப் பசியோடு ஓடிவந்து அவரைப் பிடித்துக் கொண்டான்.

गृहीतस्तरसा तेन विप्रो वेदाङ्गपारगः ।
प्रचुक्रोश दयाम्भोधिं आपन्नानां परायणम् ॥

नारायणं चक्रपाणिं रक्ष रक्षेति वै मुहुः ।
'वेंकटेश दयासिन्धो शरणागत पालक ।।

त्राहि मां पुरुषव्याघ्र रक्षोवशमुपागतम् ।
लक्ष्मीकान्त हरे विष्णो वैकुण्ठ गरूडध्वज ।।

रक्ष मां राक्षसाक्रान्त ग्राहाक्रान्तं गजं यथा ।
दामोदरजगन्नाथ हिरण्यासुर मर्दन ।
प्रह्लादमिव मां रक्ष राक्षसेनातिपीडितम्' ।।

கருணைக் கடலே! சரணாகதர்களைக் ரக்ஷிப்பவனே! ஆண் புலி போன்றவனே! ச்ரியப்பதியே! வைகுண்ட நாத! கருடக் கொடியுடையோனே! தாமோதர! ஜகந்நாத! விஷ்ணுவே! ஹிரண்யாஸுரனை அழித்தவனே! வேங்கடேச! முதலையால் பிடிக்கப்பட்ட யானையைக் காப்பாற்றியது போலவும், ப்ரஹ்லாதனைக் காப்பாற்றியது போலவும் இந்த ராக்ஷஸனிடமிருந்து என்னைக் காப்பாற்று, காப்பாற்று என்று சக்ரபாணியான நாராயணனைக் குறித்துக் கூவிக் கதறினார்.

इत्येवं स्तुवतस्तस्य पद्मनाभस्य हे द्विजाः ।
स्वभक्तस्य भयंज्ञात्वा चक्रपाणिर्दयानिधिः ।।

स्वचक्रं प्रेषयामास भक्तरक्षणकारणात् ।
प्रेरितं विष्णुचक्रं तत् विष्णुना प्रभविष्णुना ।।

आजगामाथ वेगेन चक्रपुष्करिणी तटम् ।
अनन्तादित्य सङ्काशं अनन्ताग्निसमप्रभम् ।।

महाज्वालं महानादं महासुरविमर्दनम् ।
दृष्ट्वा सुदर्शनं विष्णोः राक्षसोऽथ प्रदुद्रुवे ।।

ஓ! பிராம்மணர்களே! இவ்வாறு கதறி ஸ்தோத்திரம் செய்கிற தன்னுடைய பக்தனாகிய பத்மநாபருக்கு ஏற்பட்டிருக்கும் பயத்தை அறிந்து, கருணைக் கடலான சக்ரபாணி (ஸ்ரீநிவாஸன்) பக்தனைக் காப்பதற்காக சக்ராயுதத்தை ஏவினார். சக்ராயுதம் மிகவும் வேகமாக சக்ரபுஷ்கரிணிக் கரையை வந்து அடைந்தது. பல சூரியன் போலும், மிகுந்த அக்னிபோலும் பிரகாசித்துக் கொண்டு மிக்க ஒலியோடு வருகிற ஸுதர்சனத்தைக் கண்டு ராக்ஷஸன் ஓடினான்.

द्रवमाणस्य तस्याशु राक्षसस्य सुदर्शनम् ।
शिरश्चकर्त सहसा ज्वालामाला दुरासदम् ॥
ततो विप्रवरो दृष्ट्वा राक्षसं पतितं भुवि ।
मुदा परमया युक्तः तुष्टाव च सुदर्शनम् ॥

மஹாஜ்வாலைகளோடு கூடின ஸுதர்சனம், ஓடுகின்ற அரக்கனின் தலையை அறுத்துத் தள்ளியது. பிறகு, அரக்கன் பூமியில் விழுந்ததைக் கண்ட பிராம்மண ச்ரேஷ்டரான பத்மநாபர் மகிழ்ந்து ஸுதர்சனத்தை ஸ்தோத்திரம் செய்தார்.

पद्मनाभ उवाच—

विष्णुचक्र ! नमस्तेऽस्तु विश्वरक्षणदीक्षित ।
नारायणकराम्भोजभूषणाय नमोऽस्तु ते ॥
युद्धेष्वसुरसंहार कुशलाय महारव ।
सुदर्शन नमस्तुभ्यं भक्तानां आर्तिनाशन ॥
रक्ष मां भयसंविग्नं सर्वस्मादपि कल्मषात् ।
स्वामिन् सुदर्शनविभो चक्रतीर्थे सदा भवान् ।
सन्निधेहि हिताय त्वं जगतो मुक्तिकांक्षिणः ॥

உலகைக் காப்பதில் உறுதியையுடைய விஷ்ணு சக்ரமே! ஸ்ரீமந்நாராயணனின் தாமரை மலர்போன்ற வலக்கையின் திருவாபரணமே! உனக்கு நமஸ்காரம். போர்க்களத்தில் அஸுரர்களை அழிப்பதில் ஸமர்த்தரே! பக்தர்களின் துன்பத்தை அழிப்பவரே! உமக்கு நமஸ்காரம். பயத்தை உண்டு பண்ணும் ஸகல பாபங்களிலிருந்தும் என்னைக் காப்பாற்று. மோட்சத்தை அடைய விரும்பும் சேதனர்களின் நன்மைக்காக சக்ர தீர்த்தத்தில் நீர் எப்போதும் எழுந்தருளி இருக்க வேண்டும் என்று பத்மநாபர் பிரார்த்தித்தார்.

ब्राह्मणेनेवमुक्तं तत् विष्णुचक्रं मुनीश्वरा: ।
तं प्राह पद्मनाभाख्यं प्रीणयन्निव सौहृदात् ॥

பத்மநாபரால் இவ்வாறு சொல்லப்பட்ட சக்கரத்தின் பெருமையைக் கேட்ட மஹரிஷிகள் பத்மநாபரை மிகவும் அன்போடு கொண்டாடினார்கள்.

सुदर्शन उवाच—

पद्मनाभ महापुण्यं चक्रतीर्थमनुत्तमम् ।
अस्मिन् वसामि सततं लोकानां हितकाम्यया ॥

त्वत्पीडां परिचिन्त्याहं राक्षसेन दुरात्मना ।
प्रेरितो विष्णुना विप्र त्वरया समुपागत: ॥

त्वत्पीडकोपि निहतो मयायं राक्षसाधमः ।
मोचितस्त्वं भयादस्मात् त्वं हि भक्तो हरेस्सदा ॥

चक्रतीर्थे महापुण्ये सर्वपापहरे द्विज ।
सततं लोकरक्षार्थं सन्निधानं करोमि ते ॥

ஓ! பத்மநாபரே! உலகில் எல்லோருக்கும் நன்மை ஏற்படுவதற்காக உத்தமமான இந்தப் புண்ணிய தீர்த்தத்தில் நிரந்தரமாக வசிக்கிறேன். ராக்ஷஸனால் உனக்கு ஏற்பட்ட ஆபத்தை நினைந்து, மஹாவிஷ்ணுவினால் அனுப்பப்பட்டு, என்னால் அந்த ராக்ஷஸாதமன் கொல்லப்பட்டான். பகவத் பக்தனாகிற நீ பயத்திலிருந்து விடுவிக்கப்பட்டாய். உனக்காகவே உன் வேண்டுகோளின்படியே, எல்லா பாபங்களையும் போக்கும் புண்ணிய தீர்த்தமாகிய சக்ர தீர்த்தத்தில் இருக்கிறேன்.

अस्मिन् मत्सन्निधानात्ते तथान्येषामपि द्विज ।
इतः परं न पीडा स्यात् भूतराक्षस सम्भवा ॥

अस्मिन् मत्सन्निधानात् स्यात् चक्रतीर्थमितिप्रथा ।
स्नानंयेऽत्र प्रकुर्वन्ति चक्रतीर्थे विमुक्तिदे ॥

तेषां पुत्राश्च पौत्राश्च वंशजा: सर्वं एव हि ।
विधूतपापा यास्यन्ति तद्विष्णोः परमं पदम् ॥

நான் இங்கேயே இருக்கிறபடியால் இன்று முதல் இக்குளம் என் பெயரால் சக்ர தீர்த்தம் என்றே பெயர் பெறும். இனிமேல் இங்கு யாருக்கும் பூதங்களாலோ ராக்ஷஸர்களாலோ ஆபத்து ஏற்படாது. மோக்ஷம் அளிக்கக் கூடிய இந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம் செய்கிறவன் புத்ர பௌத்ராதிகளோடு விளங்குவான். வம்சவிருத்தி ஏற்படும், பிறவிப் பெருந்துயர் நீங்கி ஸ்ரீ வைகுண்டத்தை அடைவான்.

इत्युक्त्वा विष्णुचक्रं तत् पद्मनाभस्य पश्यतः ।
अन्येषामपि विप्राणां पश्यतां सहसा द्विजाः ॥
चक्रपुष्करिणीं तां तु प्रविशत्पापनाशिनीम् ।

இவ்வாறு சொல்லிவிட்டு பத்மநாபரும் மற்ற ரிஷிகளும் பார்த்துக் கொண்டு இருக்கும்போதே விஷ்ணு சக்ரம் (ஸ்ரீ ஸுதர்சனம்) சக்ர தீர்த்தத்தில் ப்ரவேசித்தது.

**श्री सूत उवाच—**

**चक्रतीर्थस्य माहात्म्यं विप्रेन्द्राः पापनाशनम् ।**
**युष्माकं कथितं सर्वं शौनकाद्याः महौजसः ॥**

**चक्रतीर्थसमं तीर्थं न भूतं न भविष्यति ।**
**अत्र स्नात्वा नरा विप्रा मोक्षभाजो न संशयः ॥**

**कीर्तयेदिममध्यायं शृणुयाद्वा समाहितः ।**
**चक्रतीर्थाभिषेकस्य प्राप्नोति फलमुत्तमम् ॥**

ஓ! பிராம்மணர்களே! சௌநகாதி மஹரிஷிகளே! உங்களுடைய பாபங்கள் எல்லாம் நீங்குவதற்காக சக்ர தீர்த்த மாஹாத்மியம் சொல்லப்பட்டது சக்ர தீர்த்தத்திற்கு நிகராக எந்த தீர்த்தமும் இல்லை, இருக்கப்போவதும் இல்லை. இதில் ஸ்நானம் செய்யும் பிராம்மணர்கள் மோக்ஷமடைவார்கள். இந்த அத்யாயத்தைச் சொல்கிறவர்களும், கேட்பவர்களும் சக்ர தீர்த்த ஸ்நானத்தால் அடையும் உத்தம பலனை அடைவார்கள்.

इति स्कान्दपुराणे वेंकटाचलमाहात्म्ये
चक्रतीर्थमहिमानुवर्णनं नाम
त्रयोदशोऽध्यायः ।

## ஆழ்வானின் வைபவங்கள்.

அன்பர்காள்! ஸ்ரீஸுதர்சனம் என்பது பகவானின் வலக்கையில் விளங்கும் சக்கரம்! இவரது பெருமை இப்போது பரவுகிறது! எங்கு பார்த்தாலும் ஸுதர்சன ஹோமம்; ஜபம், ஏன் தெரியுமா? அவர் தான் எப்படிப்பட்ட ஆபத்தையும் நீக்குகிறார். வேண்டுவதைக் கொடுக்கிறார். மக்கள் அறிந்து கொண்டார்கள்! அவரருள் இருந்தால் போரில் புகலாம்! காரில் பறக்கலாம்! வானில் விளையாடலாம்! ஆணவம் கொண்டவரையும் அடிபணியச் செய்யலாம். ஏன்! மரணத்தையே மாளச் செய்யலாம். இது ஸ்ரீஸுதர்சன உலகம்! அவனருள் பெற்றாலன்றி நமக்கு வழி இல்லை. ஸ்ரீ வைஷ்ணவர்கள் (ஸமாச்ரயணம் செய்து கொள்ளாதவர்கள்) தம் ஆசாரியரிடம் சென்று உடனே ஸமாச்ரயணம் செய்து கொள்ள வேண்டும். தோளில் (புஜங்களில்) சக்கர வடிவம் இருக்க வேண்டும். அது நம்மைக் காப்பாற்றும்! கிருஹங்களில் ஸுதர்சனாழ்வான் படம் வைத்திருந்தால் நலம். பூஜித்தால் பலருக்கும் நன்மை! அவ்வளவு ஏன்! அவனை நம்பினால் நாட்டிற்கே நன்மை! ஆழியெழத் தீமை அழியும்! ஆழி நம்மை அணைத்துக் காக்கும்! ஆனிச் சித்திரை அவரது அவதார நன்னாள். அவரை அடையுங்கள்! அவரை வணங்குங்கள். அவரையே நினையுங்கள். அவரையே சொல்லுங்கள். 'ஜயஜய ஸ்ரீ ஸுதர்சன!' என்று போற்றுங்கள். அவனே பரம புருஷன்.

**திருமாலின் திருவருள்:**—நமக்கு நம் உடம்பே சுமை! நம்மைக் காப்பாற்றிக் கொள்வது பெருஞ் சுமை! குடும்பத் தலைவனாக இருந்து கொண்டு குடும்பத்தைக் காப்பாற்றுவது அதைவிடப் பெருஞ்

சுமை! நமக்கு வேண்டியவர்களையும் சேர்த்துக் காப்பாற்ற வேண்டும் என்றால் அதைவிடச் சுமை வேறு ஒன்றுமில்லை. எல்லாப் பொருள்களும் பகவானைச் சேர்ந்தவை. அனந்தகோடி ஜீவராசிகளை யும் அவன் காப்பாற்ற வேண்டும்; எல்லோருக்கும் யோக க்ஷேமங்களை அளிக்க வேண்டும்! அந்தோ! எவ்வளவு பெரிய சுமை! தன் வேலையையும் கவனித் துக் கொள்ள அவனுக்கு நேரம் இல்லை. அவனை விட்டுப் பிரியாமல் (அவனோடு) இருக்கும் பிராட்டிக்கு (மஹாலக்ஷ்மிக்கு) மனத்தில் ஒருகுறை! அக்குறை யைப் பகவானிடம் சொல்லியே தீருவது என்று துணிந்தாள்!

'பகவானே! உமது வேலை ஓய்வில்லா வேலை! சில நாட்கள் ஓய்வெடுத்துக் கொள்ளலாமே! மனைவி யோடு சிறிது நேரமும் பேச இயலாத வேலையை எத்தனை நாட்கள்தான் செய்து கொண்டிருக்க முடி யும்!' என்றாள். பிராட்டி சொல்லுவதில் நியாயம் உள்ளது. என்ன செய்வது என்று சிந்திக்கத் தொடங்கினான் பகவான்.

ஓ! ஸுதர்சனாழ்வானே! நீர் மிகவும் உயர்ந்தவர்! மிகவும் ஒளியுடையவர்! அருள் நிறைந்தவர்! வெற்றித்திருமகனார்! எங்கும் வெற்றி! எப்போதும் வெற்றி! உமது வலிமையை அளவிட்டுக் கூற இயலாது! அடியார்களின் பகைவர்களை அழிக்கிறீர்! அடியார்கள் வேண்டுவனவற்றைக் கொடுக்கிறீர்! உலகில் ஸ்ரீவைஷ்ணவம் மிளிரச் செய்கிறீர்! ஒவ் வொரு மனிதனுக்கும் பல குறைகள் உள்ளன. குறை இல்லாதவன் இல்லை. ஏதேனும் ஒரு குறை இருந்தால்தான் (பகவானை) என்னை நினைக்கிறான். குறை பக்தியைத் தருகிறது. பூச்சியுள்ள மாம் பழமே மிகவும் இனிக்கிறது.

மனிதனின் பல குறைகளுள் மூன்று குறைகள் மேலோங்கி நிற்கின்றன. மக்கள் ஆரோக்யத்தை விரும்புகிறார்கள். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். ஆனால் ஆரோக்யமாக எவரும் வாழ முடிய வில்லை. உலகில் செல்வம் மதிப்பைத் தருகிறது. பொருளில்லாதவனுக்கு இவ்வுலகில்லை. இல்லானை இல்லாளும் வேண்டாள் மற்றீன்றெடுத்த தாய் வேண்டாள். அவன் தன் வாழ்க்கையையே வெறுத்துக் கொள்கிறான். சிலருக்கு ஆரோக்யமுள்ளது. ஐச்வர்ய மும் (செல்வமும்) உள்ளது ஆனால் முன் செய்த வினைப் பயனாக உலகில் நீண்ட நாள் வாழ முடிய வில்லை. சுகத்தை அடைய வேண்டிய காலம் நெருங் கும்போதே (சிறு வயதிலேயே) இறந்துவிடுகிறான். திருவாழியே! உலக வாழ்க்கைக்கு முக்கியமாகத் தேவைப்படும் ஆரோக்யம், ஐச்வர்யம், ஆயுஸ் ஆகிய வற்றையே அனைவரும் என்னிடம் கேட்கிறார்கள். கேட்டவர்களுக்கெல்லாம் அவற்றை நான் கொடுத் துக் கொண்டிருக்கிறேன். இனிமேல் நீரே இவற்றை மக்களுக்குக் கொடும். இவற்றைத் தவிர வேறு எதை வேண்டினாலும் கொடும், என்று பகவான் ஆணையிட்டு சிலநாள் ஓய்வெடுத்துக் கொண்டு பிராட்டியோடு மகிழ்ந்திருக்கிறான் என்று ஸுதர்சன சதகம் கூறுகிறது.

கல்வியும் செல்வமும் நாளும் நல்குமே.

ஸ்ரீஸுதர்சனன் என்பதற்கே நல்வழி காட்டுபவர் என்று பொருள். பகவானை அடையும் வழியைக் காட்டுபவர். ஸுதர்சனாழ்வானின் ஸம்பந்தத்தைப் பெற்றவனே பகவானை அடைவான்.

இந்நாளில் ஸ்ரீஸுதர்சனாழ்வானின் அருளே நமக்குத் தேவை. இயல்பாகவே அளவிறந்த வலிமையைக் கொண்ட சக்கரத்தாழ்வார் இரண்யா

க்ஷனை அழித்தொழித்த வராஹாவதாரத்தின் சக்தியையும், இரணியனின் (பொன் பெயரோன்) மார் பிளந்த நரஸிம்ஹாவதாரத்தின் சக்தியும் ஒருங்கே பெற்றவர். வராஹ மூர்த்தி ஞானஸ்வரூபியாதலால் அந்த சக்தியைப் பெற்றிருக்கும் சக்கரத்தாழ்வாரும் ஞானமளிப்பதில் வல்லவர். மக்களின் மனத்தை ஈர்க்கும் சொல்திறனும், வேதாந்த விக்ஞானமும் அளித்துக் கவிசக்கரவர்த்தியாக ஆக்க வல்லவர். பிரஹ்லாதனுக்கும், அடியார்களுக்கும் ஏற்பட்டிருந்த பயத்தை நீக்குவதற்கும், தன்னை ஸர்வசக்தன் (எதையும் செய்ய வல்லவன்) என்பதை உணர்த்துவதற்காகவும் மேற்கொண்ட நரஸிம்ஹாவதாரத்தின் சக்தியைப் பெற்றிருக்கும் சக்கரத்தாழ்வார் அழிக்க முடியாத பகையை அழித்து நீக்க முடியாத பயத்தையும் நீக்க வல்லவர். அவர் நமது உட்பகை வெளிப்பகைகளை அழிக்கிறார். ஆபத்தை அழிக்கிறார்; நோய்களைத் தீர்க்கிறார். கல்வியும் செல்வமும் அளிக்கிறார் நன்மையை நல்குகிறார். பகவான் நினைக்கும் பணியைச் செய்து முடிக்கிறார். பகவானுக்கும் நன்மை செய்கிறார். அடியார்களுக்கு என்னென்ன நன்மைகளைச் செய்யலாம் என்றே எண்ணி இருக்கிறார். ஸ்ரீ ஸுதர்சனாழ்வான் எல்லாவற்றையும் தரும் கற்பக மரமாக விளங்குகிறார். அவரையே அணுகுங்கள்; அரும் பயன் பெறுங்கள்.

பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு......பகவானுக்கு ஐந்து ஆயுதங்கள்; ஸ்ரீ ஸுதர்சனாழ்வானுக்குப் பதினாறு ஆயுதங்கள்! இவர்கள் தங்களுக்கு அழகு ஏற்படுத்திக் கொள்வதற்காக (அழகுக்காக) இவற்றை வைத்துக் கொள்ளவில்லை. அடியார்களுக்குத் தோன்றும் ஆபத்தை நீக்கி நன்மை செய்வதற்காகவே அணிந்து கொண்டிருக்கிறார்கள்.

சக்கரம், ஈட்டி, சுத்தி, கோடரி, சதமுகாக்னி, மாவட்டி, தண்டம், சக்தி என்னும் எட்டு ஆயுதங்களை வலக்கையில் அணிந்திருக்கிறார். சங்கு, வில், கண்ணி, கலப்பை, உலக்கை, கதை, வஜ்ரம், சூலம் என்னும் எட்டு ஆயுதங்களை இடக்கையில் அணிந்திருக்கிறார். இவ்வாறு பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்பவர் ஸ்ரீ ஸுதர்சனாழ்வான் ஒருவரே. ஸ்ரீமந்நிகமாந்த மஹா தேசிகன் ஸ்ரீ ஸுதர்சனாழ்வானின் பெருமைகளைக் கூறி ஸுதர்சனாஷ்டகம் என்னும் ஸ்தோத்திரத்தையும், இவரது பதினாறு ஆயுதங்களைப் பற்றி ஷோடசாயுத ஸ்தோத்திரத்தையும் அருளிச் செய்திருக்கிறார்.

ஸுதர்சன மஹா மந்த்ரம்:—சக்கரத்தாழ்வாருக்கு அளவு கடந்த பெருமை; அவரது திரு மந்திரத்திற்கும் அளவு கடந்த பெருமை. ஸுதர்சன மஹாமந்திரம் உடல் நோய், மன நோய், அறிவு நோய் எல்லாவற்றையுமே நீக்கும்.

வயது முதிர்ந்த பெரியோர் ஒருவர், நோயுற்று மருத்துவமனையில் சேர்ந்தார். ஜ்வர நோயும் நாளுக்கு நாள் அதிகமாயின. திறமை வாய்ந்த மருத்துவர்கள் அவரைப் பரீக்ஷை செய்து நோயைக் கண்டு பிடிக்க ஒருமாத காலம் போராடினார்கள். நோயின் காரணமும் கண்டுபிடிக்கப் பட்டது. தொடர்ந்து இரு மாதங்கள் வைத்யம் செய்துகொள்ள வேண்டும் என்றனர். நோயாளரும் இசைந்தார்.

ஆனால் ஒரு அதிசயம்! நோயாளரின் நண்பர் ஒருவர் அவரைக்காண மருத்துவ மனைக்கு வந்தார். அவர் ஸ்ரீவைஷ்ணவர். ஆசார சீலர். ஞானமுடையவர். அனைவரும் பார்த்துக்கொண்டிருக்கும்போதே ஏதோ முணுமுணுத்துக்கொண்டே நோயாளரின் உடலை மூன்றுமுறை தடவிக்கொடுத்தார். இவ்வாறு மூன்று நாட்கள் நடைபெற்றன.

நோயாளரின் நோய் மறைந்தது! முகத்தில் மகிழ்ச்சி! எப்படி நோய் மறைந்தது? மருத்துவர்களுக்குப் பெரிய கேள்விக்குறியாகவே இருந்தது! பிறகே காரணம் புலப்பட்டது. நோயாளரின் நண்பர் ஸுதர்சனுழ்வான் கடாக்ஷம் பெற்றவர். ஸுதர்சன மஹா மந்திரத்தைச் சொல்லி உடலைத் தடவினார். ஸுதர்சன மந்திரம் எதுதான் செய்யாது! இது கதையன்று! நடந்த நிகழ்ச்சி! நேரில் கண்ணால் கண்ட நிகழ்ச்சி!

**கண்ணனும் ஸுதர்சனமும்:**—பகவான் பூமியில் அவதரிக்கும் போதெல்லாம் பிராட்டியும் (மஹாலக்ஷ்மியும்) அவதரிக்கிறாள். திருவனந்தாழ்வானும் (ஆதிசேஷனும்) அவதரிக்கிறார். வேதமும் அவதரிக்கிறது. ஸ்ரீசக்கரத்தாழ்வார் பகவானின் அவதாரங்களில் சில இடங்களில் நேராகவும், சில இடங்களில் மறைந்திருந்தும் உதவுகிறார். பகவான் வராஹாவதாரத்தை மேற்கொண்டபோது அவரது கோரைப் பற்களாக (தந்தமாக) இருந்து கொண்டு ஹிரண்யாக்ஷன் என்னும் அசுரனை அழித்தார். நரஸிம்மாவதார காலத்தில் அவரது கைகளில் நகங்களாக இருந்து இரணியனை அழித்தார். பரசுராமனுக்குக் கோடாரியாக இருந்து உதவினார். ராமனது பாணத்தில் இருந்துகொண்டு இராவணனை அழித்தார். பகவான் கண்ணனாக அவதரித்து வாழ்ந்த காலத்தில் பல இடங்களில் வெளிப்படையாகவே நேருக்கு நேராக இருந்து பகைவர்களை அழித்து பகவானுக்கு உதவி இருக்கிறார். கண்ணன் ஸ்ரீ ஸுதர்சனுழ்வானைப் பெரிதும் பயன்படுத்திக் கொண்டு இருக்கிறான். கிருஷ்ணாவதார காலத்தில்தான் ஸ்ரீ ஸுதர்சனுழ்வானின் பெருமை பலவகைகளில் விளங்கியது என்பது மிகையன்று.

**ஆணவம் அழிந்தே தீரும்:**—கண்ணன் வஸுதேவரின் குமாரன். ஆதலால் அவனுக்கு வாசுதேவன்

என்று பெயர். கண்ணன் காலத்தில் ஒரு அரசன் மிக்க வலிமை பெற்றிருந்தான். அவனுக்குப் பௌண்ட்ரக வாசுதேவன் என்று பெயர். பத்துப்பேர் சேர்ந்து ஒருவனைக் கெட்டிக்காரனாக ஆக்கலாம்; பத்துப்பேர் சேர்ந்து ஒருவனை முட்டாளாக்கிவிடலாம். சிலர் அந்த அரசனைச் சூழ்ந்து கொண்டு 'நீயே உண்மையான வாஸுதேவன்' என்று கொண்டாடி வந்தனர். அரசனும் அவர்களின் சொல்லை நம்பினான். அவனுக்குக் கர்வம் ஏற்பட்டது. பகவான் சங்கு சக்கரங்களை அணிந்திருப்பான். அதனால் தானும் அவற்றைச் செய்து அணிந்து கொண்டான். ஒரு தூதனைக் கண்ணனிடம் அனுப்பினான். 'நான்தான் வாஸுதேவன். இனிமேல் நீ வாசுதேவன் என்ற பெயரை விட்டிட வேண்டும்' என்று கண்ணனிடம் கூறச் சொன்னான். பெயரைவிட விருப்பமில்லாவிடில் தன்னோடு போர் செய்து வெற்றிபெற வேண்டும் என்றும் சொல்லி அனுப்பினான். தூதனின் உரையைக் கேட்ட கண்ணன் சினங்கொண்டான். கருடன்மீது ஏறி அமர்ந்து விரைந்து சென்று போர் செய்தான். சக்கரத்தால் (ஸ்ரீ ஸுதர்சனத்தால்) பௌண்ட்ரக வாஸுதேவனின் தலையை அறுத்து வீழ்த்தினான். கர்வம் கொண்டவர்கள் விரைவில் அழிந்து போகிறார்கள். ஆணவமே அவர்களை அழித்துவிடுகிறது. பௌண்ட்ரகனும் ஆணவத்திற்குத் தப்பவில்லை.

## ஆரே அறிவார் அவன் பெருமை

ஸ்ரீ ஸுதர்சனாழ்வானுக்கு ஆழி என்று பெயர். திருவாழி என்று கூறுவர். சூரியனுக்கும் ஆழி என்று பெயர்.

கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் மிகக் கடுமையாகப் பாரதப்போர் நடந்துகொண்டிருந்தது. கண்ணன் பார்த்தஸாரதியாக (அர்ஜுனனின் தேரோட்டியாக) இருந்துகொண்டு பாண்டவர்களுக்கு

உதவி வந்தான். இவன் மிக்க வலிமையுள்ளவன். அர்ஜுனனின் மகன் அபிமன்யு, பதின்மூன்றும்நாள் போரில் மஹாரதர்களான வீரர்கள் அபிமன்யுவைச் சூழ்ந்துகொண்டார்கள் அவர்களோடு சேர்ந்திருந்த ஜயத்ரதன் அபிமன்யுவைக் கொன்றுவிட்டான். இச் செய்தி காட்டுத்தீபோல் போர்க்களத்தில் பரவியது. கௌரவர்கள் களிக்கூத்தாடினார்கள் மகனின் செய்தி அர்ஜுனனுக்கு எட்டியது. சினம்பொங்கி எழுந்தது. பக்கத்தில் இருக்கும் கண்ணனையும் கலக்காமல் சூளுரை செய்யத் தொடங்கினான். 'நாளை மாலை சூரியன் மறைவதற்குள் ஜயத்ரதன் தலையை அறுத்து வீழ்த்துவேன்; இவ்வாறு செய்யமுடியாது போனால் தீக்குளிப்பேன்' என்று சூளுரை செய்தான்

கண்ணன் கலங்கினான். எப்படியாவது அர்ஜுனனின் சூளுரையை நிறைவேற்றி வைக்க உறுதி கொண்டான். அர்ஜுனனின் சூளுரையை அறிந்த பகைவர்கள் மறுநாள் மாலை முடியும்வரை ஜயத்ரதனைக் காப்பாற்றத் திட்டமிட்டார்கள்; அவனை மறைத்துப் பாதுகாத்தார்கள். அர்ஜுனன் கடுஞ்சினம்கொண்டு போர் செய்துவந்தான். ஆனால் ஜயத்ரதன் மட்டும் கண்ணுக்குப் புலப்படவில்லை. மாலைவேளை! சூர்யன் மறையும் நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. அர்ஜுனன் கவலையுற்றான். கண்ணன் ஸுதர்சனாழ் வானுக்குக் கட்டளை இட்டான். ஸ்ரீஸுதர்சனாழ் வான் சூரியனை மறைத்தார். போர்க்களத்தில் இருள்வரத்தொடங்கியது. அர்ஜுனனின் சூளுரை நிறைவேறவில்லை என்று பகைவர்கள் கொக்கரித்தார் கள். ஜயத்ரதனும் வெளியில் தலைக்காட்டத் தொடங் கினான். கண்ணன் அர்ஜுனனுக்கு ஜயத்ரதனைக் காட்டினான். ஸ்ரீஸுதர்சனாழ்வானை திரும்பப் பெற் றான். அர்ஜுனன் கூர்மையான பாணத்தினால் ஜயத் தனின் தலையை அறுத்து வீழ்த்தினான். ஆரே அறி வார் அவர் பெருமை!

நூறும் பொறுத்த நிமலன்:—பிறரை நிந்தித்துக் கொண்டே இருப்பவனை சிசுபாலன் என்று அனை வரும் கூறுவர். சிசுபாலன் க்ருஷ்ணவதார காலத் தில் இருந்தவன். விசித்திரப் பிறவி! பிறக்கும் போது இவனுக்கு நான்கு கைகளும் மூன்று கண் களும் இருந்தன; சிலர் வியந்தனர்; பலர் பயந்தனர். எவர் தொடுவதால் இக்குழந்தையின் இரு கைகளும் ஒரு கண்ணும் மறையுமோ அவரால் இவனுக்கு மரணம்' என்று அசரீரி கூறியது. சிசுபாலன் கண் ணனின் அத்தை மகன். கண்ணன் தன் திருக்கை களால் தொட்டான்; உடனே சிசுபாலனின் இரண்டு கைகளும் மூன்ருவது கண்ணும் மறைந்தன. இதை கண்டாள் சிசுபாலனின் தாய்! கண்ணு! நீ என் மகனைக் கொல்லாதிருக்க வேண்டும்' என்று வேண்டி ஞள். 'இவன் செய்யும் நூறு பிழைகள் வரை பொறுத்துக் கொள்கிறேன்' என்று கண்ணன் கூறி ஞன். இவன் பிறவிலிருந்தே கண்ணனின் விரோதி யாக மாறிஞன். இந்திரப்ரஸ்தம் என்னும் நகரில் தரும புத்திரர் ராஜஸூய யாகம் செய்தார். அதில் கண்ணனுக்கே முறைப்படி முதல் தாம்பூலம் (அக்ர பூஜை) கொடுக்கப்பட்டது அங்கேயே சிசுபாலன் கண்ணனை நிந்திக்கத் தொடங்கிஞன். நூறு நிந்தனைகளைப் பொறுத்துக் கொண்டான் கண்ணன். அடுத்த நிந்தனை சொல் கூறியதும் கண்ணன் திரு வாழியால் சிசுபாலனின் தலையை அறுத்து வீழ்த்தி ஞன்.

பெரியாழ்வார் திருமாலிருஞ்சோலைக்குச் சென்ருர்; அழகரை மங்களாசாஸனம் செய்தார். நிந்திப் பதையே தொழிலாகக் கொண்ட சிசுபாலனின் பகை மையை அழித்த கண்ணனே இவன் என்பதைப் 'பல பல நாழம் சொல்லிப்பழித்த சிசுபாலன் தன்னை அல வலைமை தவிர்த்த அழகன்'' என்று விளக்கிக் காட் டிஞர்.

கண்ணன் ஏவிய திருவாழியாழ்வான் சூரியனைப் போல் ஒளியுடன் வெகுவிரைவாகச் சென்று சிசுபாலனின் தலையைக் கொய்த்து மீண்டும் அவனது திருக்கரத்தில் வந்து சேர்ந்தது என்பதை,

"ஏவிய திகிரி வீரரைத்துறக்க
மேறவிட்டிடு மிரவியைப்போல்
மேவிய பகையா மைத்துனன்
முடியை விளங்கு கோளகையுறவீசி
யாவிக ளனைத்து நிறைந்தொளிசிறந்த
வச்சுதனலைகொள் பாற்கடலிற்,
றீவிய வமுதமமரருக் களித்தோன்
றிருக்க கரஞ்சென்றுசேர்ந்ததுவே.

என்று வில்லிபுத்தூரார் கூறுவதைக் காண்மின்!

**வாணன் தோள் துணித்த வல்லவர்:**—வாணன் என்பான் ஓர் அசுரன். "இவனை பாணாஸுரன் என்று கூறுவது வழக்கம். இவன் மஹாபலி சக்கரவர்த்தியின் வமிசத்தில் பிறந்தவன். சிவபெருமானை வேண்டிப் பல வரங்களைப் பெற்றவன். அவனுக்கு ஒரு மகள் இருந்தாள். அவள் பெயர் உஷை. அவள் மிக்க அழகுடையவள்; திருமணப் பருவத்தை அடைந்தாள். அரசன் (தந்தை) அவளைக் கன்னிமாடத்தில் இருக்கச்செய்து பாதுகாத்துவந்தான். ஒரு நாள் அவள் உறங்கிக் கொண்டிருக்கும்போது ஒரு கனவு கண்டாள். ஓர் அரச குமாரனோடு இருப்பதுபோல் நினைவு! திடீரென்று உறக்கம் கலைந்து கூக்குரலிட்டாள். சித்திரலேகை என்பவள் உஷையின் தோழி. வானவழியில் மறைந்து செல்லுவதில் வல்லவ ளே. அவள் உஷை கூக்குரலிட்ட காரணத்தை அறிந்தாள்.

அவளுடைய கனவில் வந்தவன் யாரென்பதையும் அறிந்தாள். அவன்தான் ஆண் அழகன் அநிருத்தன். கண்ணனின் மகன் ப்ரத்யும்னன். அவன் மகன் அநிருத்தன். துவாரகையில் இருந்தான். சித்திர லேகை ஒருநாள் இரவோடு இரவாக உறங்கிக்கொண்டிருந்த அநிருத்தனைத் தூக்கிக் கொண்டுவந்து உஷை இருக்குமிடத்தில் கொண்டுவிட்டாள். இதை அறிந்த வாணன் கோபங்கொண்டான். அநிருத்தனைச் சிறை யிலிட்டான்.

துவாரகையில் யாதவர்கள் அநிருத்தனைக் காணாமல் கலங்கினர். நாரதரின் வாயிலாக இச்செய்தியை அறிந்தான் கண்ணன்! கருடன் மீதேறி வாணனின் (சோணிதபுரம் என்னும்) நகரத்திற்கு தந்தான். வாணாசுரனுக்கு ஆயிரம்கைகள். அவன் கண்ணனோடு போர் செய்ய வந்தான். அவனோடு (அவனைக் காப்பாற்றி வரும்) பல அரசர்களும், சில தேவைதகளும் வந்தன. கண்ணன் தேவதைகளையும், அரசர்களை யும் விரட்டியடித்தான். திருவாழி (ஸ்ரீ ஸுதர்சன) ஆழ்வானைக் கொண்டு வாணனின் தோள்களைத் துணித்தான். அநிருத்தனைச் சிறையிலிருந்து விடுவித்தான். கண்ணனால் உயிர்பிச்சையளிக்கப் பெற்றவாணன் தன் மகளை (உஷையை) அநிருத்த னுக்குத் திருமணம் செய்து கொடுத்தான்.

இப் பெரிய வரலாற்றைப் பேயாழ்வார் ஒரு சிறிய வெண்பாவில் சுருக்கமாகச் சொல்லிக் காட்டுகிறார்.

''மகனொருவர்க்கல்லாத மாமேனிமாயன்
மகனுமவன் மகன்றன் காதல்-மகளை,
சிறைசெய்த வாணன் தோள்செற்றான் கழலே
நிறைசெய்தென் நெஞ்சே! நினை.''

என்கிறார்.

—மூன்றாம் திருவந்தாதி-92

நாகணையாய் வாராய்:—இந்த்ரத்யும்மனன் ஓரரசன். திருமாலிடம் பக்தி கொண்டவன். தினந் தோறும் ஆர்வத்தோடு பகவானை வழிபடுவான். ஒரு நாள் அவ்வாறு பூஜித்துக் கொண்டிருந்த போது அகத்திய முனிவர் அங்குவந்தார். அரசன் அவரது வருகையைக் கவனிக்கவில்லை; எழுந்திருக்கவில்லை; வணங்கவில்லை; உபசரிக்கவில்லை. முனிவருக்குக் கோபம் மேலிட்டது. 'நீ யானைபோல் செருக்குற்றிருந் தாய்; என்னை மதிக்கவில்லை. ஆதலால் நீ யானை யாகக் கடவாய்' என்று சபித்தார். இந்த்ரத்யும்னன் யானையானான். அப்போதும் திருமாலிடம் பக்தி குறையவில்லை. அழகிய தாமரை மலர்களைக் கொண்டு பகவானைப் பூஜித்து வந்தான்.

தேவலர் என்னும் முனிவர் தண்ணீரில் நின்று தவம் செய்து கொண்டிருந்தார். ஹூஹூ என்னும் கந்தருவன் கருவம் கொண்டு தண்ணீருக்குள் சென்று மறைந்திருந்து அவரது காலைப் பற்றி இழுத்தான். முனிவர் சினம் கொண்டு சபிக்க, கந்தருவன் முதலை யானான். ஒரு மடுவில் அம் முதலை தங்கி இருந்தது. அதில் தாமரை மலர்கள் நிறைந்திருந்தன. அந்த யானை, மலரை விரும்பி நீர் நிலையில் இறங்கியது. முதலை யானையின் காலைப் பிடித்துக்கொண்டது. முதலைக்குத் தண்ணீரில் வலிமை. யானையை இழுத்தது. யானை தன்னை விடுவித்துக்கொள்ளப் பெரிதும் முயன்றது. ஆனால் விடுபட இயலவில்லை. திருமாலைச் சரணடைந்தது!

'நாராயணா! ஓ! மணிவண்ணா! நாகணையாய்! வாராய்! என ஆரிடரை நீக்காய்' என்று அவனைக்

கூவி அழைத்தது. இவ்வொலி பகவானின் காதில் எட்டியது. உடனே பகவான் கருடன் மீதேறிச் சென்று யானையின் முன்னிலையில் நின்றான். ஸ்ரீஸுதர்சன (திருவாழி) ஆழ்வானைக் கொண்டு முதலையைக் கொன்று யானையைக்காப்பாற்றினான். பக்தரை ரக்ஷிப்பதே பகவானின் கடமை. இவ்வரலாற்றை உணர்த்துவதற்காக ஒவ்வோராண்டும் ஆடி மாதத்தில் பெரிய கோயில்களில் பகவானுக்கு கருடோத்ஸவம் நடத்துகிறார்கள்.

அம்பரீஷனுக்கு அருள் புரிந்த அருளாழி:—அம்பரீஷர் பேரரசர். இவர் தந்தை நாபாகர். இவர் திருமாலிடம் மிக்க பக்தி கொண்டவர். அரசுக்கு உரிய முடியில் வெறுப்புற்று பாகவானின் திருவடிகளையே தன் தலையில் அணிய விரும்பியவர். தன் செல்வத்தைப் பகவானுக்கும் பாகவதர்களுக்குமே செலவிட்டு மகிழ்ந்தவர். அரசராக இருந்தும் சிறந்த திருமாலடியாராக விளங்கினார். இவ்வரசனின் நன்மைக்காக பகவான் திருவாழியாழ்வானை (சக்கரத்தை) இவரிடம் ஒப்படைத்திருந்தான். அம்பரீஷரும் ஸ்ரீஸுதர்சனத்தை முறைப்படி அன்போடு பூசித்து வந்தார்.

சிலர் ஏகாதசீ விரதம் இருப்பார்கள். சிலர் துவாதசியில் மட்டும் நேரம் தவறாது பாரணை செய்வர் (உணவு உண்பர்). மற்றும் பலர் ஏகாதசீ விரதம் த்வாதசீ பாரணை ஆகியவற்றை ஒழுங்காகச் செய்வர். அம்பரீஷர் த்வாதசீ விரதம் மேற்கொண்டிருந்தார். ஓராண்டு விரதம் நடைபெற்றது. விரதம் முடியும் நாள். கடைசி த்வாதசி அன்று எண்ணிறந்த தானங்களைப் பலருக்கும் செய்தார். அன்னமிட்டு அந்தணர்

களை ஆராதித்தார். மனநிறைவோடு உணவு உண்ணப் புகுந்தார். கோபமே வடிவெடுத்த துர்வாஸ முனிவர் அரசரிடம் அதிதியாக வந்து நின்றார். 'உணவு உண்ண வரவேண்டும்' என்று அம்பரீஷரும் முனிவரை வணங்கி வேண்டினார். முனிவரும் இசைந்தார். யமுனைக்குச் சென்று நீராடி வருவதாக வும் கூறிச்சென்றார்; ஆனால் நெடுநேரமாகியும் வர வில்லை. துவாதசியும் கடந்துவிடும்போல் இருந்தது. துவாதசியில் பாரணை செய்யாவிடில் ஓராண்டு செய்த விரதமும் பயனற்றுப் போகும்! முனிவரும் வந்திலர்; அரசர் உணவு உண்ணிலர். துவாதசீ விரதம் கெடா திருக்குமாறு பெரியோர்களின் ஆலோசனையை ஏற்று ஒரு கையளவு நீரைப் பருகினார். இச்செயலை அறிந்தார் முனிவர்; சீற்றம் கொண்டார். அரசரால் அவமதிக்கப்பட்டதாக எண்ணினார்.

தன் தவவலிமையால் ஒரு துர்தேவதையை (க்ருத் யையைத்) தோற்றுவித்து அம்பரீஷரைக் கொல்ல ஏவினார். அம்பரீஷர் ஸுதர்சனத்தைச் சரணமடைந் தார். ஸ்ரீஸுதர்சனம் பேரொளியோடு பாய்ந்து சென்றது; அந்தத் துர்தேவதையை எரித்தொழித்தது. துர்வாஸரையும் துரத்திச்சென்றது. முனிவர் ஓடினார். அலறினார்; 'காப்பாற்று, காப்பாற்று, என்று கதறி னார். பகவானின் திருவடிகளில் விழுந்தார் அவர் அம்பரீஷரிடமே செல்ல ஆணையிட்டார். அம்பரீஷரின் காலில் விழுந்தார். அம்பரீஷர் ஸ்ரீஸுதர்சனாழ்வானை வேண்டினார். ஸ்ரீ ஸுதர்சனாழ்வானும் துர்வாஸரைக் கொல்லாது விட்டிட்டார். துர்வாஸேர் அம்பரீஷரைப் புகழ்ந்தார்; பாரணை செய்தார். அவ்விடத்தை விட்டு நீங்கினார் என்று ஸ்ரீபாகவதம் கூறுகிறது.

# ॥ श्री सुदर्शनाष्टोत्तरशत नामावळिः ॥

ओम् सुदर्शनाय नमः

,, चक्रराजाय नमः

,, तेजोव्यूहाय नमः

,, महाद्युतये नमः

,, सहस्रबाहवे नमः

,, दीप्ताङ्गाय नमः

,, अरुणाक्षाय नमः

,, प्रतापवते नमः

,, अनेकादित्य संकाशाय नमः

,, प्रोद्यज्ज्वालाभिरञ्जिताय नमः

,, सौदामिनी सहस्राभाय नमः

,, मणिकुण्डलशोभिताय नमः

,, पञ्जभूतमनोरूपाय नमः

,, षट्कोणान्तर संस्थिताय नमः

,, हरान्तः करणोद्भूतरोषभीषण विग्रहाय नमः

,, हरिपाणिलसत्पद्मविहारारमनोहराय नमः

,, श्रा कार रूपाय नमः

,, सर्वज्ञाय नमः

ओम् सर्वलोकार्चित प्रभवे नमः
,, चतुर्दशसहस्राराय नमः
,, चतुर्वेदमयाय नमः
,, अनलाय नमः
,, भक्तचान्द्रमस ज्योतिषे नमः
,, भवरोग विनाशकाय नमः
,, रेफात्मकाय नमः
,, मकारात्मने नमः
,, रक्षोसृक्रूषिताङ्गकाय नमः
,, सर्वदैत्यग्रैवनाळविभेदनमहागजाय नमः
,, भीमदंष्ट्राय नमः
,, उज्ज्वलाकाराय नमः
,, भीमकर्मणे नमः
,, त्रिलोचनाय नमः
,, नीलवर्त्मने नमः
,, नित्यसुखाय नमः
,, निर्मलश्रियै नमः
,, निरञ्जनाय नमः
,, रक्तमाल्याम्बरधराय नमः
,, रक्तचन्दनरूषिताय नमः

ओम् रजोगुणाकृतये नमः
,, शूराय नमः
,, रक्षः कुलयमोपमाय नमः
,, नित्यक्षेमकराय नमः
,, प्राज्ञाय नमः
,, पाषण्डजनखण्डनाय नमः
,, नारायणाज्ञानुवर्तिने नमः
,, नैकमार्थ प्रकाशकाय नमः
,, बलिनन्दनदोर्दण्ड खण्डनाय नमः
,, विजयाकृतये नमः
,, मित्रभाविने नमः
,, सर्वमयाय नमः
,, तमोविध्वंसनाय नमः
,, रजस्सत्वतमोद्वर्तिने नमः
,, त्रिगुणात्मने नमः
,, त्रिलोककृते नमः
,, हरिमायागुणोपेताय नमः
,, अव्ययाय नमः
,, अक्षस्वरूपभाजे नमः
,, परमात्मने नमः

ओम् परंज्योतिषे नमः

,, पञ्चकृत्यपरायणाय नमः

,, ज्ञानशक्तिबलैश्वर्यवीर्यतेजः प्रभामयाय नमः

,, सदसत्परमाय नमः

,, पूर्णाय नमः

,, वाङ्मयाय नमः

,, वरदाय नमः

,, अच्युताय नमः

,, जीवाय नमः

,, हृद्यै नमः

,, हंसरूपाय नमः

,, पञ्चाशत्पीठरूपकाय नमः

,, मातृकामण्डलाध्यक्षाय नमः

,, मधुध्वंसिने नमः

,, मनोमयाय नमः

,, बुद्धिरूपाय नमः

,, चित्तसाक्षिणे नमः

,, साराय नमः

,, हंसाक्षरद्वयाय नमः

ओम् मन्त्रयन्त्र प्रभावाय नमः

,, मन्त्रयन्त्रमयाय नमः

,, विभवे नमः

,, स्रष्ट्रे नमः

,, क्रियास्पदाय नमः

,, शुद्धाय नमः

,, भर्त्रे नमः

,, भोक्त्रे नमः

,, त्रिविक्रमाय नमः

,, निरायुधाय नमः

,, असंरम्भाय नमः

,, सर्वायुधसमन्विताय नमः

,, ओंकार रूपाय नमः

,, पूर्णात्मने नमः

,, अहंकारात् साध्यभञ्जनाय नमः

,, ऐंकाराय नमः

,, वाक्प्रदाय नमः

,, वाग्मिने नमः

,, श्रींकारैश्वर्यवर्धनाय नमः

,, क्लींकार मोहनाकाराय नमः

ओम् हुंफट् क्षोभणाकृतये नमः
,, इन्द्रार्चित मनोवेगाय नमः
,, धरणीभारनाशकाय नमः

,, वीराराध्याय नमः
,, विश्वरूपाय नमः
,, वैष्णवाय नमः
,, विष्णुभक्तिदाय नमः
,, सत्यव्रताय नमः
,, सत्यपराय नमः
,, सत्यधर्मानुषङ्गकाय नमः
,, नारायणकृपाव्यूहतेजश्चक्राय नमः

श्री विजयवल्ली समेत श्री सुदर्शन
परब्रह्मणे नमः

## ஸ்ரீ ஸுதர்ஸநாஷ்டோத்தர ஸத நாமாவளி:

ஓம் ஸுதர்சநாய நம:
,, சக்ரராஜாய நம:
,, தேஜோவ்யூஹாய நம:
,, மஹாத்யுதயே நம:
,, ஸஹஸ்ரபாஹவே நம:

ஓம் தீப்தாங்காய நம:
,, அருணாக்ஷாய நம:
,, ப்ரதாபவதே நம:
,, அநேகாதித்ய ஸங்காசாய நம:
,, ப்ரோர்த்வஜ்வாலாபிரஞ்ஜிதாய நம: 10
,, ஸௌதாமிநீ ஸஹஸ்ராபாய நம:
,, மணிகுண்டல சோபிதாய நம:
,, பஞ்சபூத மநோரூபாய நம:
,, ஷட்கோணாந்தரஸம்ஸ்திதாய நம:
,, ஹராந்தக் கரணோத்பூத ரோஷபீஷண-
விக்ரஹாய நம:
,, ஹரிபாணிலஸத் பத்மவிஹாராராமமநோஹராய
நம:
,, ச்ராகார ரூபாய நம:
,, ஸர்வக்ஞாய நம:
,, ஸர்வலோகார்ச்சித ப்ரபவே நம:
,, சதுர்தச ஸஹஸ்ராராய நம: 20
,, சதுர்வேதமயாய நம:
,, அதலாய நம:
,, பக்த சாந்த்ரமஸ ஜ்யோதிஷே நம:
,, பவரோக விநாசகாய நம:
,, ரேபாத்மகாய நம:
,, மகாராத்மநே நம:
,, ரக்ஷோஸ்ருக் ரூஷிதாங்ககாய நம:
,, ஸர்வதைத்ய க்ரைவநாளவிபேதன மஹாகஜாய
நம:

ஓம் பீமதம்ஷ்ட்ராய நம:
,, உஜ்ஜ்வலாகாராய நம: 30
,, பீமகர்மணே நம:
,, த்ரிலோசநாய நம:
,, நீலவர்த்மநே நம:
,, நித்ய ஸுகாய நம:
,, நிர்மல ச்ரியை நம:
,, நிரஞ்ஜநாய நம:
,, ரக்தமால்யாம்பர தராய நம:
,, ரக்த சந்தன ரூஷிதாய நம:
,, ரஜோகுணாக்ருதயே நம:
,, சூராய நம: 40
,, ரக்ஷக்குலயமோபமாய நம:
,, நித்யக்ஷேமகராய நம:
,, ப்ராக்ஞாய நம:
,, பாஷண்டஜன கண்டநாய நம:
,, நாராயணாக்ஞாநுவர்த்திநே நம:
,, நைகமார்த்த ப்ரகாசகாய நம:
,, பலிநந்தனதோர்தண்டகண்டநாய நம:
,, விஜயாக்ருதயே நம:
,, மித்ரபாவிநே நம:
,, ஸர்வமயாய நம: 50
,, தமோவித்வம்ஸநாய நம:
,, ரஜஸ்ஸத்வ தமோத்வர்த்திநே நம:
,, த்ரிகுணாத்மநே நம:

ஓம் த்ரிலோகக்ருதே நம:
,, ஹரிமாயாகுணோபேதாய நம:
,, அவ்யயாய நம:
,, அக்ஷஸ்வரூப பாஜே நம:
,, பரமாத்மனே நம:
,, பரஞ்ஜ்யோதிஷே நம:
,, பஞ்ச க்ருத்ய பராயணாய நம: 60
,, ஞானபலைச்வர்ய வீர்யதேஜப்ரபாமயாய நம:
,, ஸதஸத்பரமாய நம:
,, பூர்ணாயநம:
,, வாங்மயாய நம:
,, வரதாய நம:
,, அச்யுதாய நம:
,, ஜீவாய நம:
,, ஹரயே நம:
,, ஹம்ஸரூபாய நம:
,, பஞ்சாசத்பீடரூபகாய நம: 70
,, மாத்ருகாமண்டலாத்யக்ஷாய நம:
,, மதுத்வம்ஸினே நம:
,, மனோமயாய நம:
,, புத்திரூபாய நம:
,, சித்த ஸாக்ஷிணே நம:
,, ஸாராய நம:
,, ஹம்ஸாக்ஷரத்வயாய நம:

ஓம் மந்த்ரயந்த்ரப்ரபாவாய நம:

,, மந்த்ரயந்த்ரமயாய நம:

,, விபவே நம: 80

,, ஸ்ரஷ்ட்ரே நம:

,, க்ரியாஸ்பதாய நம:

,, சுத்தாய நம:

,, மந்த்ரே நம:

,, போக்த்ரே நம:

,, த்ரிவிக்ரமாய நம:

,, நிராயுதாய நம:

,, அஸம்ரம்பாய நம:

,, ஸர்வாயுத ஸமந்விதாய நம:

,, ஓங்காரரூபாய நம: 90

,, பூர்ணாத்மனே நம:

,, அஹங்காராத்ஸாத்யபஞ்ஜனாய நம:

,, ஐங்காராய நம:

,, வாக்ப்ரதாய நம:

,, வாக்மினே நம:

,, ஸ்ரீம்கார ஐஸ்வர்யவர்த்தனாய நம:

,, க்லீம்காரமோஹனாகாராய நம:

,, ஹும்பட்க்ஷோபணாக்ருதயே நம:

,, இந்த்ரார்ச்சிதமனோவேகாய நம:

,, தரணீபாரநாசகாய நம: 100

,, வீராராத்யாய நம:

,, விச்வரூபாய நம:

ஓம் வைஷ்ணவாய நம:

,, விஷ்ணுபக்திதாய நம:

,, ஸத்யவ்ரதாய நம:

,, ஸத்யபராய நம

,, ஸத்யதர்மாநுஷஞ்ஜகாய நம:

,, நாராயணக்ருபாவ்யூஹதேஜச்சக்ராய நம: 108

ஸ்ரீவிஜயவல்லீ ஸமேத ஸ்ரீஸுதர்சந பரப்ரஹ்மணே நம:

ஓம்

---

## ஸ்ரீ ஸுதர்சன மந்த்ரம் ஜபம் செய்யும் முறை

அஸ்ய ஸ்ரீ ஸுதர்சன மஹாமந்த்ரஸ்ய - அஹிர் புந்த்யோ ரிஷி: - அநுஷ்டுப்ச்சந்த: - ஸ்ரீ ஸுதர்சன மஹாவிஷ்ணுர் தேவதா - ரம் - பீஜம், ஹும் - சக்தி:, பட் - கீலகம், ஸ்ரீ ஸுதர்சன ப்ரஸாத ஸித்த்யர்தே ஜபே விநியோக: ।

### கரந்யாஸம்

1. ஓம் ஆசக்ராய — அங்குஷ்டாப்யாம் நம:
2. ,, விசக்ராய — தர்ஜநீப்யாம் நம:
3. ,, ஸுசக்ராய — மத்யமாப்யாம் நம:
4. ,, த்தீ சக்ராய — அநாமிகாப்யாம் நம:
5. ,, ஸச்சக்ராய — கனிஷ்டிகாப்யாம் நம:
6. ,, ஜ்வாலாசக்ராய — கரதலகரப்ருஷ்டாப்யாம் நம:

## ஹ்ருதயாதி ந்யாஸம்

1. ஓம் ஆசக்ராய — ஹ்ருதயாய நம:
2. ,, விசக்ராய — சிரஸே ஸ்வாஹா
3. ,, ஸுசக்ராய — சிகாயை வஷட்
4. ,, த்தீ சக்ராய — கவசாயஹும்
5. ,, ஸச்சக்ராய — நேத்ரத்ரயாய வௌஷட்
6. ,, ஜ்வாலாசக்ராய — அஸ்த்ராய பட்

ஓம் பூர்புவஸ்ஸுவரோம் இதி திக்பந்த:

## த்யானம்

சங்கம் சக்ரம் ச சாபம் பரசுமஸிமிஷும்
சூல-பாசாங்குசாப்ஜம் ।
பிப்ராணம் வஜ்ரகேடௌ ஹலமுஸல
கதாகுந்த மத்யுக்ர தம்ஷ்ட்ரம் ॥
ஜ்வாலாகேசம் த்ரிநேத்ரம் ஜ்வல
தனல நிபம் ஹாரகேயூரபூஷம் ।
த்யாயேத் ஷட்கோணஸம்ஸ்தம் ஸகலரிபுஜன
ப்ராண ஸம்ஹார சக்ரம் ॥

[ஸுதர்சன யந்த்ரம், படம், கும்பம் ஆகிய வற்றில் ஏதாவது ஒன்றை எதிரில் வைத்துக்கொள்ள வேண்டும்.]

லம்—ப்ருதிவ்யாத்மநே—கந்தாம் தாரயாமி.

ஹம்—ஆகாசாத்மநே—புஷ்பாணி ஸமர்ப்பயாமி.

யம்—வாய்வாத்மநே—தூபம் ஆக்ராபயாமி.

ரம்—அக்ந்யாத்மநே—தீபம் ஸந்தர்சயாமி.

வம்—அம்ருதாத்மநே—அம்ருதம் நிவேதயாமி.

ஸம்—ஸர்வாத்மநே—ஸர்வோபசாரான் ஸமர்ப்பயாமி.

### ஷடாக்ஷரீமந்த்ரம்

ஓம் ஸஹஸ்ரார ஹூம்பட் ।

### ஸுதர்சன காயத்ரீ.

ஓம் ஸுதர்சநாய வித்மஹே மஹாஜ்வாலாய தீமஹி ।
தந்நஸ் சக்ர: ப்ரசோதயாத் ॥

### ஸுதர்சந மாலா மந்த்ரம்.

ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம், க்ருஷ்ணாயகோவிந்தாய கோபீஜந வல்லபாய பராய பரம்புருஷாய பரமாத்மநே பரகர்ம மந்த்ர - யந்த்ர - தந்த்ர - ஔஷத - அஸ்த்ர - சஸ்த்ராணி ஸம்ஹர ஸம்ஹர; ம்ருத்யோர் மோசய, மோசய.

ஓம் நமோ பகவதே மஹாஸுதர்சநாய தீப்த்ரே ஜ்வாலா பரீதாய ஸர்வதிக்க்ஷோபணகராய ஹூம்பட் ப்ரஹ்மணே பரம் ஜ்யோதிஷே நம: ।......(ஸ்வாஹா)

### ஸ்ரீ நரஸிம்ஹமந்த்ரம்

ஓம் க்ஷ்ராம் க்ஷ்ரீம் க்ஷ்ரௌம்
உக்ரம் வீரம் மஹாவிஷ்ணும்
ஜ்வலந்தம் ஸர்வதோமுகம் ।
ந்ருஸிம்ஹம் பீஷணம் பத்ரம்
ம்ருத்யோர் ம்ருத்யும் நமாம்யஹம் ॥
ஓம் க்ஷ்ரௌம நாரஸிம்ஹாய நம: ।

### ஸ்ரீ நரஸிம்ஹ காயத்ரி

ஓம் வஜ்ரநகாய வித்மஹே
தீக்ஷ்ண தம்ஷ்ட்ராய தீமஹி ।
தந்நோ நாரஸிம்ஹ: ப்ரசோதயாத் ॥

## ஸ்ரீ விஷ்ணு காயத்ரி

ஓம் நாராயணாய வித்மஹே
வாஸுதேவாய தீமஹி ।
தந்நோ விஷ்ணு: ப்ரசோதயாத் ॥

## லக்ஷ்மீ காயத்ரி

ஓம் மஹாதேவ்யை ச வித்மஹே
விஷ்ணுபத்ன்யை ச தீமஹி ॥
தந்நோ லக்ஷ்மீ ப்ரசோதயாத் ॥

## லக்ஷ்மீ மந்த்ரம்

ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் ஸ்ரீம்-
கமலே கமலாலயே ।
ப்ரஸீத ப்ரஸீத ।
ஸகல ஸௌபாக்யம் தேஹி ।
ஸ்ரீம் ஹ்ரீம் ச்ரீம், ஓம் மஹாலக்ஷ்ம்யை நம: ।

## ஸ்ரீ தன்வந்தரி மந்த்ரம்

ஓம் நமோ பகவதே வாஸுதேவாய
தன்வந்த்ரயே,
அம்ருத கலச ஹஸ்தாய,
ஸர்வாமய விநாசாய,
த்ரைலோக்ய நாதாய,
ஓம் மஹாவிஷ்ணவே நம:

## பாஞ்சஜன்ய காயத்ரி

ஓம் பாஞ்ச ஜந்யாய வித்மஹே
பாவமாநாய தீமஹி
தந்நச் சங்கப் ப்ரசோதயாத் ॥

## ஸகல பலன்களையும் அளிக்கவல்ல
## ஸ்ரீ ஸுதர்சன ஷட்கம்

ஸஹஸ்ராதித்ய ஸங்காசம், ஸஹஸ்ரவதனம் ப்ரபும் ।
ஸஹஸ்ரதம் ஸஹஸ்ராரம்,ப்ரபத்யேஹம்
ஸுதர்சநம் ॥

ஹஸந்தம் ஹாரகேயூர முகுடாங்கத பூஷணை: ।
சோபனைர் பூஷிததநும், ப்ரபத்யேஹம் ஸுதர்சநம் ॥

ஸ்ராகார ஸஹிதம் மந்த்ரம், வததாம் சத்ருநிக்ரஹம் ।
ஸர்வரோக ப்ரசமனம், ப்ரபத்யேஹம் ஸுதர்சநம் ॥

ரணத்கிங்கிணிஜாலேந, ராக்ஷஸக்நம் மஹாத்புதம் ।
வ்யாப்தகேசம் விரூபாக்ஷம், ப்ரபத்யேஹம்
ஸுதர்சநம் ॥

ஹுங்காரபைரவம் பீமம், ப்ரணதார்த்திஹரம் ப்ரபும் ।
ஸர்வ துஷ்ட ப்ரசமநம், ப்ரபத்யேஹம் ஸுதர்சநம் ॥

பட்ஸாராந்த மநிர்தேச்யம், திவ்யமந்த்ரேணஸம்யுதம் ।
சுபம் ப்ரஸந்நவதனம் ப்ரபத்யேஹம் ஸுதர்சநம் ॥

ஏதைஷ்ஷட்பிஸ்துதோதேவ: ப்ரஸந்ந: ஸ்ரீஸுதர்சந: ।
ரக்ஷாம் கரோது ஸர்வாத்மா ஸர்வத்ரவிஜயீபவேத் ।

## பஞ்சாயுத ஸ்தோத்ரம்

ஸ்புரத்ஸஹஸ்ரார சிகாதிதீவ்ரம்
ஸுதர்சனம் பாஸ்கர கோடி துல்யம் ।
ஸுரத்விஷாம் ப்ராண விநாசி விஷ்ணோ
சக்ரம் ஸதாஹம் சரணம் ப்ரபத்யே ॥ 1

விஷ்ணோர்முகோத்தாநில பூரிதஸ்ய
யஸ்யத்வநிர் தானவ தர்பஹந்தா ।
தம் பாஞ்ச ஜந்யம் சசிகோடி சுப்ரம்
சங்கம் ஸதாஹம் சரணம் ப்ரபத்யே ॥ 2

ஹிரண்மயீம் மேருஸமானஸாராம்
கௌமோதகீம் தைத்யகுலைக ஹந்த்ரீம் ।
வைகுண்ட வாமாக்ர கராபிம்ருஷ்டாம்
கதாம் ஸதாஹம் சரணம் ப்ரபத்யே ॥ 3

ரக்ஷாஸுராணாம் கடிநோக்ர கண்டச்
சேதக்ஷரச் சோணித திக்ததாரம் ।
தம் நந்தகம் நாம ஹரே: ப்ரதீப்தம்
கட்கம் ஸதாஹம் சரணம் ப்ரபத்யே ॥ 4

யஜ்ஜ்யாநிநாத ச்ரவணாத் ஸுராணாம்
சேதாம்ஸி நிர்முக்த பயானி ஸத்ய: ।
பவந்தி தைத்யாசநி பாணவர்ஷி
சார்ங்கம் ஸதாஹம் சரணம் ப்ரபத்யே ॥ 5

இமம் ஹரே: பஞ்ச மஹாயுதாநாம்
ஸ்தவம் படேத் யோநுதிநம் ப்ரபாதே ।

ஸமஸ்த துக்கானி பயானி ஸத்ய:
பாபானி நச்யந்தி ஸுகானி ஸந்தி || 6

வநே ரணே சத்ரு ஜலாக்னி மத்யே
யத்ருச்சயாபத்ஸு மஹா பயேஷு |
இதம் படந் ஸ்தோத்ர மநாகுலாத்மா
ஸுகீ பவேத் தத்க்ருத ஸர்வாக்ஷ: || 7

ஸ்ரீ ஸுதர்சன ஹோம மஹாஸங்கல்பம்
ப்ரபஞ்ச ஸாரத்தில் கூறியபடி

[ஸங்கல்பம் செய்து கொள்கிறவர்கள் தக்க இடங்களில் யுக்தமான வார்த்தைகளைச் சேர்த்துக் கொண்டு ஸங்கல்பம் செய்து கொள்ளவும்].

ஓம் சுக்லாம்பர தரம்...ஸர்வவிக்னோப சாந்தயே ||
யஸ்யத்விரதவக்த்ரா......விஷ்வக்ஸேநம் தமாச்ரயே ||

ஸ்ரீ கோவிந்த கோவிந்த கோவிந்த அஸ்ய ஸ்ரீ பகவத: மஹாபுருஷஸ்ய ஸ்ரீ விஷ்ணோராக்ஞயா ப்ரவர்த்த மாநஸ்ய ஆத்ய ப்ரஹ்மண: த்விதீய பரார்த்தே ஸ்ரீ ச்வேத வராஹ கல்பே, வைவஸ்வத மந்வந்தரே, கலியுகே ப்ரதமே பாதே ஜம்பூத்வீபே பாரதவர்ஷே பரதகண்டே சகாப்தே மேரோ: தக்ஷிணே பார்ச்வே அஸ்மிந்வர்தமாநே வ்யாவஹாரிகே, ப்ரபவாதி ஷஷ்டி ஸம்வத்ஸராணும் மத்யே....; நாம ஸம்வத்ஸரே,...... அயநே,......ருதௌ,.......மாஸே,......பக்ஷே......யாம் சுபதிதௌ,......வாஸர........நக்ஷத்ரயுக்தாயாம் ஸ்ரீ விஷ்ணுயோக ஸ்ரீ விஷ்ணுகரண சுபயோக சுபகரண ஏவம் குண விசேஷண விசிஷ்டாயாம் அஸ்யாம் சுபதிதௌ ஸ்ரீபகவதாக்ஞயா பகவத்..../பகவத்......ம்,

அஸ்யா: மமதர்மபத்ன்யா: ஆவயோ: ஸகுடும்ப யோஸ்ச, ஜாதக வசாத், ஜன்மலக்ன சந்த்ரலக்ன வசாத் ச, நாநா ப்ரகார ஸம்பாவித ஸகல துரித நிவாரணார்த்தம், ஜன்ம நக்ஷத்ர ஜன்ம ராசி வசாத், நாம நக்ஷத்ர நாம ராசி வசாத், ஜன்மாநுஜன்ம த்ரிஜன்ம ரக்ஷ வேதாஷ்டக, வர்கஜ, தேஹஜ, பலபாவஜ, ஜன்ம கர்மாதான, ஸாங்க்யாயிக, ஸாமுதாயிக, வைநாசிக, க்ஷணிக க்ரஹ, நிசிக்ரஹ, பக்ஷக்ரஹ, மாஸக்ரஹ, அங்கக்ரஹ, லத்தோபக்ரஹாதி, க்ரூரக்ரஹ, வேதாக் ராந்த மஹாதச, அபஹார, ச்சித்ர, ஸூக்ஷ்ம ஸ்புட அந்தர்தச, அந்தராந்தர்தச, நித்யதச ஸூக்ஷ்மதச, லக்ன, ஹோர, த்ரேகாண நவாம்ச த்வாதசாம்ஸ, த்ரிகும்சதம்ஸக, ஸர்வதோபத்ர, காலசக்ர, திவ்யந்த ரிக்ஷ பௌதிமாக்ய, ஆத்யாத்மிக, ஆதிதைவிக, ஆதி பௌதிகாக்யேஷுச, ஸம்பாவித ஸகல துரித நிவார ணார்த்தம் ஆதித்யாதீநாம் நவாநாம் க்ரஹாணாம் ஆநு கூல்ய ஸித்த்யர்த்தம், லக்ஷ்மீ நாராயண ஸுதர்சன ப்ரஸாத ஸித்த்யர்த்தம், தேஷாம் ப்ரஸாதாத் ஆவயோ: ஸகுடும்பயோஸ்ச, சரீரே, க்ருஹ ஆராம க்ஷேத்ரா திஷுச, பரக்ருத மந்த்ர யந்த்ர ஔஷத அஸ்த்ர சஸ்த்ர ஆபிசார விஷப்ரயோகாதி ஜனித ஸகல துரித நிவ்ருத்யர்த்தம்,

பூத ப்ரேத பிசாசாதி ஸமஸ்த துஷ்டக்ரஹபாதா நிவ்ருத்யர்த்தம், சத்ருபாதா நிவ்ருத்யர்த்தம் அரோக த்ருட காத்ரதா ஸித்யர்த்தம், சிந்தித ஸகல மனோரத ப்ராப்த்யர்த்தம் ஏபி: ஸ்ரீவைஷ்ணவைஸ்ஸஹ ப்ரபஞ்ச ஸாரோக்த க்ரமேண மஹா ஸுதர்சன ஜப, ஹோம கர்ம கரிஷ்யே ||

**1. கும்ப ஆவாஹனம்:—**

கும்பத்தில்: வருணன், லக்ஷ்மீ நாராயணன்
ஸுதர்சன ஆவாஹனம்
ஷோடசோபசார ஆராதனம்.

**2. அக்னி ப்ரதிஷ்டை:—**

அக்னியில் லக்ஷ்மீ
நாராயணன் ஸுதர்சன
ஆவாஹனம்.

)வை எல்லாம் அறிந்திருந்தாலும் இத்தகைய வைதிக கார்யங்களை எல்லாம் செய்து வைக்கும் ப்ருஹஸ்பதியின் நியமனப்படி செய்யவும்.]

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 4 | 28 | चक्रमव | चक्रमेव |
| 9 | 29 | घटत्ताम् | घटन्ताम् |
| 11 | 7 | சதுறும் | சதுர்ணாம் |
| 14 | 25 | தாபத்ரங்க | தாபத்ரயங்ச |
| 35 | 21 | காலமாத்ர | கலாமாத்ர |
| 37 | 1 | நோக்கிச்சுழலும் | செல்லும் |
| 52 | 1 | தீப்பதை | தீப்தை |
| 58 | 9 | पद्मकाक्ष: | पद्मलाक्ष: |
| 65 | 8 | பரமத | பரமபத |
| 85 | 23 | ஸ்யூஹ | வ்யூஹ |
| 91 | 6 | யாரியங் | காரியங் |
| 108 | 8 | नारायणन | नारायणेन |
| 139 | 14 | ஸுதர்ஸந | ஸுதர்சன |
| 146 | 21 | க்ஷௌரம | க்ஷௌரம் |
| 150 | 2 | நசயந்தி | நச்யந்தி |



திருமழிசை ஆழ்வார்
(மூலவர்) திருமழிசை